நிலா தமிழ்

# என் நினைவில் மாவீரர்கள்

-நினைவழியா நினைவுகள்-



விடுதலை என்பது ஒரு தேசியக்கடமை

# அணிந்துரை

விடுதலைவேண்டிப் புரட்சிகரமாக ஈழத்தமிழர்கள், வரலாற்றொப்பு நோக்கில் தமது ஆற்றல் வளங்களிலும் மிக மிகக் கூடுதலாக உயிர்களையும் உடைமைகளையும் இழந்து ஈகங்கள் செய்து விட்டார்கள். உண்மையில் படைத்துறை அடிப்படையிலும் மிகத் திறமையான திட்டமிடல்களினாலும் மக்களுக்கேயுரிய தமிழீழ அரச கட்டமைப்புகளினாலும் தமிழீழம் சிங்கள பேரினவாத ஒடுக்குமுறை அரசினால் கனவிலும் வெற்றிகொள்ளப்பட முடியாத ஒன்றாகவே மாவீரர்களின் ஈகத்தாலும் மக்களின் பங்களிப்பாலும் நிமிர்ந்து நின்றது.

அந்த மண்ணிலிருந்து தக்க தலைமை விடுதலைக்கு வழிகாட்ட, தமிழர் தேசம் உடலைக் கசக்கிய வியர்வையாலும் குருதி சிந்திய ஈகங்களாலும் வன்கவரப்பட்ட தனது நிலங்களை மீட்டவாறு நிகரமைத் தமிழரசு அமைத்து காலனிக்கொள்ளையர்களிடம் இழந்த தனது இறைமையை மீட்டெடுக்கத் துடியாய்த் துடித்த போது, மகாவம்சப் புனைவுப் புரட்டுகளைத் தனது கருத்தியலாகக் கொண்ட கொடுஞ் சிங்களப் பேரினவாதம் நாயுண்ட புலால் போல உலகை மாற்றிக் கொண்டிருக்கும் உலகின் பெரும்பாலான அடக்குமுறை அரசுகளின் ஒத்துழைப்போடு தமிழினப் படுகொலையை காட்டேறித்தனமாக நிகழ்த்தி முடித்தது.

இப்படியாக, முள்ளிவாய்க்காலில் தமிழீழ தேசம் முற்றிலுமாக சிங்கள பேரினவாதத்தினால் வன்கவரப்பட்டதோடு, போராளிகளும் மக்களும் காணாமலாக்கப்பட்டனர், சிறைப்படுத்தப்பட்டனர், புனர்வாழ்வென்ற பெயரில் சிங்களதேசத்தின் அடிமைகளாக வாழும் வாழ்வை ஏற்குமாறு திணிக்கப்பட்டனர், முள்வேலி முகாம்களில் இருந்த பின்பாக திறந்தவெளி சிறைவாழ்வு வாழ எமது மக்களிற்கு இசைவளிக்கப்பட்டது. எஞ்சியோர் புலம்பெயர்ந்து வாழத் தலைப்பட்டனர் அல்லது வாழ முடிவுசெய்தனர்.

இப்படியாக, தமிழீழ மறவழி விடுதலைப் போராட்டத்தில் இன்றைய தலைமுறையின் பங்களிப்பு தேக்கநிலைக்கு வந்த நிலையில் விடுதலைப் போராட்ட வரலாற்றை முறையாக அடுத்த தலைமுறையின் கைகளில் சேர்ப்பிக்க வேண்டிய வரலாற்றுக் கடமையானது எஞ்சியுள்ள போராளிகளுக்குண்டு. இந்த வரலாற்றுக் கடமையில் முதன்மை பகுதியாக, தமிழீழ விடுதலைக்காய் விதையான மாவீரர்கள் அனைவரினதும் வரலாற்றை ஆவணமாக்க வேண்டிய பணியுள்ளது. அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்துதல் என்ற பெரும் பணியைச் செய்துமுடிப்பதென்றால், உயிருடன் எஞ்சியிருக்கும் ஒவ்வொரு போராளியினதும் பங்களிப்பு இன்றியமையாதது. ஒவ்வொரு போராளிகளும் தம்முடன் கூடி வாழ்ந்து செங்களமாடி வீரச்சாவைத் தழுவி மாவீரரான தோழர்களின் வரலாற்றை தமது நினைவுப் பகிர்வுகளாக எழுத முன்வர வேண்டும். அப்படியாக, தொடரும் எழுத்துகளானவை ஆவணப்படுத்தல் நெறிமுறைகளுக்குள்ளாகி ஈற்றில் ஒருநாள் தமிழீழ மாவீரர்கள் அனைவரினது வரலாறுகளும் அடங்கிய வரலாற்று ஏடாக வெளிவந்தேயாக வேண்டும்.

இத்தகைய எண்ணவோட்டத்தின் தொடக்கப்புள்ளியாக நிலாதமிழ் அவர்களின் “என் நினைவில் மாவீரர்கள் நினைவழியா நினைவுகள்” என்ற இந்த நூலுருவாக்க முயற்சி அமைவது இந்த நூலின் சிறப்பு என்பேன். தனது வாழ்விணையரை மாவீரராக தமிழீழ மண்ணுக்குக் கொடுத்துவிட்டு, தனது இரு பிள்ளைகளுடனும் அத்தனை வாழ்வியற் சுமைகளையும் சுமந்துகொண்டு, தன்னை முன்னிலைப்படுத்தாமல், தனது போராட்ட வாழ்வின் தொடர்ச்சியாக அவர் இந்த நூலுருவாக்க முயற்சியில் ஈடுபட்டிருப்பது நூலாசிரியரின் சிறப்பு என்பேன். தமிழீழ விடுதலைக்காக தம்மை எந்த வேளையிலும் ஈகஞ்செய்ய அணியமாகி நஞ்சுமாலையைக் கழுத்திலணிந்து வாழ்ந்த போராளிகளின் ஈகஞ்செறிந்த போராட்ட வாழ்வியலுக்குள் இருந்த குறும்புகள், சிரிப்புகள், அவலங்கள், திட்பங்கள், திண்ணங்கள், மெல்லிய உணர்வுகள், பன்முக ஆளுமைகள் என பல்பக்கப் பார்வைகளை போராட்ட வாழ்வியலை வாழ வாய்க்கவில்லை என ஏங்கும் அடுத்த தலைமுறை அறிந்துகொள்ளத்தக்க அறிகருவியாக இந்நூல் அமைவதை இந்நூற் பயன் என்பேன். இந்நூலானது உலகத் தமிழர்களின் கைகளிற்குச் செல்ல நாம் அனைவரும் பங்களிக்க வேண்டும்.

புரட்சி வாழ்த்துகள்
-முத்து-

# முன்னுரை

*உலகிலே மாந்தகுலத்தின் மேம்பாட்டிற்கு எதிரான ஏகாதிபத்தியங்களையும் அவற்றின் சார்பு மற்றும் தொங்கு சதை நாடுகளின் ஆளும் வர்க்கங்களையும் எதிர்த்து வீரமிகு போராட்டங்கள் குமுறி வெடித்துள்ளன. அவ்வாறே தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தையும் புரட்சிகரமாற்றங்களையும் ஏற்படுத்திய பெருமை எமது புரட்சிகர இயக்கத்தையே சாரும். நாம் மக்களுக்காகவே ஆயுதம் ஏந்தினோம். மக்களின் விடிவுக்காகவே மறவழிப் போராட்டப் பாதையைத் தழுவினோம். தேச ஒடுக்குமுறைக்குள்ளாகி அல்லற்பட்டு அவல வாழ்க்கை வாழ்ந்த எம்மக்களினை அடிமைத் தளைகளைத் தகர்த்து விடுதலைபெற்றவர்களாக்க வேண்டுமென்ற எமது சமூக வாஞ்சையே எம்மை ஆயுதம் ஏந்த வைத்தது. நாம் ஏந்திய ஆயுதங்கள் அறத்தின் கேடயங்கள், விடுதலை வேட்கையின் ஒளிக்கற்றைகள்.*

*சிங்கள பௌத்த பேரினவாதமும் உலக வல்லாண்மையாளர்களும் சேர்ந்து ஆடிய நரபலி வெறியாட்டத்தால், முப்பத்துமூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்த எமது மறவழிப் போராட்டமானது **2009.05.19** அன்று தேக்கநிலைக்கு வந்தது. வீரஞ்செறிந்த எமது விடுதலைப் போராட்டத்திற்காக அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களை எமது தமிழீழ மண்ணில் விதையாய் விதைத்துள்ளோம். ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இறுதிநேரப் போர்க்களத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட எத்தனையோ மாவீரர்களின் வீரச்சாவுகள் இன்னும் உறுதிப்படுத்தப்படாதனவாக உள்ளன. இவர்களின் இவ்வாறான அளப்பரிய ஈகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் ஆவணப்படுத்தி வரலாறாகப் பதிவு செய்யப்பட வேண்டியது எஞ்சியுள்ள எம்மவர்களின் தலையாய கடமை ஆகும்.*

*அந்த வகையில் என்னுடன் நிதித்துறைப் போராளிகளாக இருந்து வெளி நிருவாகப்பணி புரிந்தும் களப்பணி புரிந்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பெரும்பங்களித்து வீரகாவியங்களாகி விட்ட சில மாவீரர்களுடனான என்னுடைய அனுபவப் பகிர்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மனநிறைவு அடைகின்றேன்.*

*நிதித்துறை மாவீரர்களைப் பொறுத்த வரையில் போராட்ட வாழ்க்கையில் வேறுபட்ட அனுபவங்களைக் கொண்டவர்கள். மக்களுடனான பணிகளிலும் சரி களத்திற்கான பணிகளிலும் சரி தங்களது தனிப்பாங்கான பங்களிப்பினை திறம்பட மேற்கொண்டவர்கள். வெளி நிருவாகப் பணிகளில் மக்களோடு மக்களாக பணிபுரிந்து கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென போர் முன்னரங்குகளில் களப்பணிகளுக்கு ஆளணிப் பற்றாக்குறையின் காரணத்தினால் களப்பணி புரியவருமாறு பணிப்பு வரும். இதன்போது நிருவாகப் பணிகளை இடை நிறுத்திவிட்டு போர் முன்னரங்குகளுக்கு சென்று களமாடி வீரச்சாவடைந்தவர்கள் போக எஞ்சியிருப்பவர்கள் திரும்பி வந்து குறையில் விட்ட பணிகளை மீள ஒழுங்குபடுத்தி வீரச்சாவடைந்தவர்களின் பணிகளையும் சேர்த்து அதிக வேலைப்பளுவுடன் கூடிய பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படும். இவ்வாறு வேறுபட்ட சூழ்நிலைகளில் பல்வேறுபட்ட சிக்கல்களைச் சந்தித்து நாட்டுக்காக தம்மையே அர்பணித்த இவ் ஈகச் செம்மல்களை நினைவுகூர்ந்து அவர்களினது வாழ்கையினை வரலாறாக்கி உலகில் உள்ள அனைத்து தமிழ் மக்களிடமும் கொண்டு சேர்க்கப்பட வேண்டியது எமது வரலாற்றுக் கடமை ஆகும்.*

*நிதித்துறையில் இருந்து மாவீரர்களான பத்து மாவீரர்களின் நினைவுத் தொகுப்பை தொகுத்து "என் நினைவில் மாவீரர்கள் நினைவழியா நினைவுகள்" எனும் நூலில் தொகுத்து வழங்கியுள்ளேன். இவர்களில் முள்ளிவாய்க்காலில் இறுதி நேரப் போர்க்களத்தில் வீரச்சாவடைந்தவர்களான நிதித்துறையில் மூத்த உறுப்பினராக இருந்த மாவீரர் நிசாம்ஃசேரன் மற்றும் மாவீரர் பூம்பாவை போன்றவர்களின் உறுதிப்படுத்தப்பட்ட இராணுவத் தரநிலை வெளிப்படுத்தப்படக் கூடிய சூழ்நிலை அமைய முடியாமல் போய்விட்டது. அத்துடன், முற்காலப் பகுதிகளில் ராதா வான்காப்பு படையணியிலும் பிற்காலப் பகுதிகளில் நிதித்துறையிலும் போராளியாக இருந்து மாவீரரான எனது வாழ்விணையர் லெப்.கேணல் அன்பழகன்ஃவிமலனினதும் மற்றும் அரசியல்துறைப் போராளியாக இருந்து வெளி நிருவாகப்பணி, களப்பணி புரிந்து முள்ளிவாய்க்காலில் இறுதிநேரப் போர்க்களத்தில் வீரச்சாவினைத் தழுவிக் கொண்டவரும் எனது ஒன்றுவிட்ட தம்பியுமான மாவீரர் கப்டன் கரிகாலனினதும் நினைவுக் குறிப்புகளையும் இந்நூலின் வாயிலாக உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.*


*இந் நினைவுத் தொகுப்பை எழுதி நூலுருப் பெறும் வகையில் தகவல்கள் தந்து அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த நண்பர்களுக்கும், குறிப்பாக மேஜர் திலகாஃவான்மதி மற்றும் கப்டன் கலைமதி ஆகிய மாவீரர்களின் நினைவுக்குறிப்புகளினை எழுதித் தந்த விண்ணிலா அக்காவிற்கும், லெப்.கேணல் அன்பழகன் தொடர்பாக பகிரக்கூடியளவிலான தகவல்களைத் தந்துதவிய ராதா வான்காப்புப் படையணியைச் சேர்ந்த போராளி நண்பர்களுக்கும் மற்றும் குறைகளைச் சுட்டியும் நிறைகளை மெச்சியும் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைத்துப் போராளி உறவுகளுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*எமது விடுதலை இயக்கத்தின் நிதித்துறைப் பொறுப்பாளராகவிருந்து தமிழீழ நிழலரச நிருவாகங்களின் நேர்த்தியான இயங்குதிறனுக்குப் பெரும்பங்களித்துத் தலைவரின் கனவை நனவாக்கியவரும், தனது ஒவ்வொரு மூச்சிலும் தனித்தமிழைத் தாங்கி எமது தமிழீழ மண்ணைத் தனித்தமிழால் எழிலுறச் செய்து வீரச்சாவைத் தழுவிய மாவீரர் பிரிகேடியர் தமிழேந்தி அப்பாவிற்கு இந்த நூலினை காணிக்கை செய்கின்றேன். எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவரின் வரலாற்றுப் பங்களிப்பைப் பற்றி தனி நூல் எழுத வேண்டிய தேவை உண்டு. அதற்குரிய மிகச் சரியான தகவல்கள் முழுமையாக் கிடைக்கப் பெறாமையினால் அவரின் நினைவுகளைச் சுமந்த பிள்ளையாக நானெழுதிய சிறிய கவிதையொன்றை இந்நூலில் இணைத்துள்ளேன்.*

*நன்றி.*

*-நிலாதமிழ்-*

# தமிழேந்தியப்பா




அன்பினிலே கனிந்தவரே
பண்பினிலே முதிர்ந்தவரே
பல்துறையும் கற்றவரே
செல்வச்சீர் பெற்றிருந்தும்
மலர்ப்படுக்கை வாழ்விருந்தும்
தன்நலம் கருதாமல்
இனமானம் பெரிதென்று
தனையீந்து போராடி
தமிழின விடுதலைக்கு
உரம் சேர்க்க வந்தவரே
இனியேனும் எமக்கு
விடிவேதும் கிடைக்கும் என்று
எம் தலைவன் கைகோர்த்து
பனியென்றும் குளிரென்றும்
மழையென்றும் வெயிலென்றும்-பாராமல்
தெருத்தெருவாய் ஊரூராய்
திரிந்து நிதி திரட்டி
எம்படை வளர்த்தவரே!!!!
‘

மொழியெனப்படுவது விழியெனக் கருதி
பழியென பிறமொழி
கலப்பது துறந்து
மொழி நலமும் இன நலமும் கொண்டு
அன்னைத் தமிழிற்கே அடி பணிந்து
தன்னைத் தமிழுக்கே தந்து- தமிழ் காத்து
எம் தலைவன் மதிப்பினிலே மூத்தவராய்
அறப்போர் புரிந்து சிறப்பாந் தமிழில் மறப்போர் புரிந்தவரே!!!!

எம் ஈழ தேசத்தின் முதுகெலும்பாய்
நிதித்துறையின் ஆலமரமாய் இருந்தவரே
பிள்ளைகளாய் எங்களைப் பார்த்தவரே
உங்கள் பிரிவினால் எங்களை வதைத்தவரே
எம் நெஞ்சினிலும் நினைவினிலும் தமிழேந்தி அப்பாவே நீங்கள் தான்
நெட்டுயிர்க்கின்ற எம் மூச்சினிலும் நீங்கள் தான்
உங்கள் பெயர் சொல்லி தடம் பதித்து விழுதுகள் நாம்
தேசத்தின் பணி தொடர்வோம்!!!!

- நிலாதமிழ்.

# கப்டன் சுடரொளி




வடதமிழீழத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னித் தலைநிலத்தையும் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் பிரிக்கும் யாழ்ப்பாண நீரேரியின் தென்கரையிலே மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள் ஆகிய பாரம்பரிய நெல்லினங்கள் விளையும் வளமான நிலமும் எத்தனையோ மாவீரர்களையும் கரும்புலி வீரர்களையும் நாட்டுக்கீய்ந்த வீரம் விளைநிலமான பூநகரி எனும் ஊரிலே ஐந்து அக்காக்கள், மூன்று அண்ணாக்கள் கொண்ட பெரிய, அழகான குடும்பத்திலே திரு.திருமதி கந்தர் தம்பதியினருக்கு கடைசிப் புதல்வியாக 09.04.1973 இல் ஞானசகுந்தலா அக்கா பிறந்தார். அவர்களது குடும்பமானது எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆரம்ப காலம் முதல் தோள் கொடுத்து வந்த குடும்பம் ஆகும். தேசப்பற்றுக் கொண்ட அந்தக் குடும்பத்தில் பிறந்த ஞானசகுந்தலா அக்காவின் புறச்சூழல்கள் அவருக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே விடுதலைத்தீயை வளர்க்கத் தொடங்கின.

அவரது தந்தையார் ஒரு புகழ்பெற்ற பாரம்பரிய உழவர் ஆவார். அவர் ஒரு உழவராக இருந்தபோதிலும் தனது குழந்தைகளை நாட்டின் தலை சிறந்த கல்விமான்களாக ஆக்க வேண்டும் என்ற கொள்கையில் வெயில், மழை பாராது வயலில் கடும் பணிபுரிந்து அதன் மூலம் வரும் வருமானத்தின் மூலம் தனது குழந்தைகளை நன்றாக கல்வி கற்க வைத்தார். அவர்களும் தந்தையின் கடின முயற்சியும் நம்பிக்கையும் வீண்போகக் கூடாது என்ற எண்ணத்தில் மிகவும் உத்வேகத்துடனும் ஊக்கமுடனும் கல்விகற்று மூத்த பிள்ளைகள் எல்லோரும் அரசபணியில் நல்ல நிலையில் பணிபுரிந்து வந்தனர்.

அந்த வகையில் ஞானசகுந்தலா அக்காவும் பெயருக்கு ஏற்றபடி கல்வி ஞானத்தில் வல்லவராக தனது ஆரம்பப் பள்ளிக்கல்வியை ஆண்டு 5 வரை பூநகரி செல்வபுரம் அ.த.க பாடசாலையிலும் பின்பு ஆண்டு 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை யாழ்.மருதனாமடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் பாடசாலையின் மாணவர் தங்கு விடுதியில் தங்கியிருந்து கல்விபயின்று வந்தார். அவர் படிப்பு, விளையாட்டு, சதுரங்கப் போட்டி என்பனவற்றில் சிறந்து விளங்கினார். கல்லுரியில் ஆண்டுதோறும் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மிகச் சிறப்பாக விளையாடி தனது இல்லத்திற்கு நிறைய வெற்றிக் கேடயங்களைப் பெற்றுக்கொடுத்தார். “விளையும் பயிரை முளையில் தெரியும்” என்ற பழமொழிக்கேற்ப பின்னாளில் சிறந்த ஒரு கணக்காய்வாளராக வருவதற்கு அடையாளமாக மிகக் கூரிய அறிவு படைத்து யாழ் மாவட்டத்திலே அனைத்துப் பாடசாலைகளுக்கு இடையிலாக நடைபெறும் சதுரங்கப் போட்டிகளில் பல பரிசுகளை வென்று தனது கல்லூரிக்கு பெருமை சேர்த்தார். அதுமட்டுமல்ல அவர் படிப்பிலும் சிறந்து விளங்கினார். க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றி அதி திறமைச் சித்திகள் பெற்று க.பொ.த உயர்தரத்தில் 1992 வது அணியில் வர்த்தகப் பிரிவை தேர்ந்தெடுத்து கல்வி பயின்று வந்தார்.

எமது தமிழீழப் போராட்ட வரலாற்றில் 1991 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆகாய கடல்வெளி ஆனையிறவுச் சமரானது பெரும் முதன்மை வாய்ந்தது. இந்நடவடிக்கையானது 10.07.1991 தொடங்கி 53 நாட்களாக நீடித்தது. இதன் போது நாம் 573 மாவீரர்களை விலையாகக் கொடுத்தோம்.

அந்தப் போர்க்களமானது இந்த உலகிற்கும் ஒரு செய்தியை உணர்த்தியது. அதற்கும் மேலாக எமது மக்களிற்கும் ஒரு நம்பிக்கையை உணர்த்தியது. நாம் எமது நாட்டிலே சுதந்திரமான ஒரு சொந்த அரசை

நிறுவி அதைப் பாதுகாத்து, நாம் தமிழீழ மக்கள், இந்த நாடு எமது தமிழீழ நாடு என்று பெருமை கொண்டு உரிமையுடன் எமது சொந்த அரசை நிறுவி அதைப் பாதுகாத்து நாமே நமது நாட்டை அமைக்க எமக்கு உறுதியான ஒரு படை உண்டு, அந்தப் படையில் எமது நாட்டுக்கான போராட்டத்தை எமது நாட்டுக்கான இராணுவத்தை அமைக்க முடியும் என்ற செய்தியை உலகிற்கு மட்டுமல்ல எமது எதிரிக்கு மட்டுமல்ல எமது மக்களிற்கும் உறுதியாக உணர்த்தி நின்றது ஆனையிறவுப் போர்க்களம்.

அந்த வகையில் ஞானசகுந்தலா அக்காவும் ஆ.க.வெ ஆனையிறவுப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் 1991 ஆவணி மாதத்தில் இன்றைய எமது தேவை உறுதியுள்ள ஓர் இனம் என்றும் தனது சுதந்திரத்திற்காக எவரிலும் எவர் மீதும் தங்கியிருக்காது தனது சுதந்திரத்திற்கு தன்னையே நம்பி தன்னை அடிமைகொள்ள நினைக்கும் எவரையும் எதிர்த்து நின்று தனது நாட்டிற்காக தனது நாட்டின் சுதந்திரத்திற்காக போராடும் ஒரு வீராங்கனையாக தன்னை உருவாக்க தீர்மானித்து உணர்வுகொண்டு எமது போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அங்கு எமது மகளிர் பயிற்சிப் பாசறையில் 23 ஆவது அணியில் அடிப்படைப் பயிற்சி பெற்று 1992 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் சுடரொளி எனும் பெயருடன் வரிப்புலியாகி அரசியல்துறைப் போராளியாக நியமிக்கப்பட்டார்.

1992-1993 ஆம் ஆண்டு வரை அரசியல்துறை மகளிர் பிரிவில் நிதிப் பொறுப்பாளராக தனது பணியைத் திறம்பட தியாக மனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும் ஆளுமையுடனும் மேற்கொண்டார். எமது போராட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் வேறு புலிகள் வேறு அல்ல. “மக்கள் தான் புலிகள் புலிகள் தான் மக்கள்”. இது உலக நாடுகள் அனைத்தாலும் உணர்ந்துகொள்ளப்பட்ட விடயம் ஆகும்.

அந்த வகையில் சுடரொளி அக்காவும் தனது அரசியல் பணியின்போது மக்களோடு மக்களாகவே, அவர்களில் ஒருவராகவே வாழ்ந்திருந்தார். அவரது கனிவான பார்வையும், எந்நேரமும் சிரித்த முகமும், சுறுசுறுப்பும், அமைதியான மனப்பாங்கும் எம் மக்களை அவர்பால் ஈர்த்தது. எமது போராட்டத்துக்கு உதவி செய்த மக்கள் வீடுகளுக்கெல்லாம் சென்று அவர்களின் இன்பதுன்பங்கள் அனைத்திலும் பங்கெடுத்து இயன்றவரை அவர்களுக்கு உதவி செய்வார். மேலும் மக்களின் சிக்கல்கள், உடனடித் தேவைகள், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகள் போன்றனவற்றை அறிந்து உதவி செய்வார். அந்த அளவுக்கு தனது மக்களை நேசித்த போராளி அவர்.

1991ஆம் ஆண்டு எமது போராட்டமானது பல துறைசார் வளர்ச்சிகளினைக் கண்டிருந்தது. அந்த வகையில் எமது தேசியத் தலைவர் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழேந்தி அப்பாவுடன் கலந்துரையாடி எமது நிதித்துறை வாணிபங்களின் கணக்குகள் தொடர்பிலான நடவடிக்கைகளை நிருவகிக்க போராளிகளினால் மட்டுமே அர்ப்பணிப்புடனும் இதயத்தூய்மையுடனும் செயற்பட முடியும் என்பதனை உணர்ந்து நிதித்துறை கணக்காய்வுப் பகுதி என்ற பிரிவினை உருவாக்கினார். எனவே, அதற்கு கணக்கியல் அறிவும் அனுபவமும் புலமையும் உடைய போராளிகள் மற்றைய பிரிவுகளில் இருந்து நிதித்துறை கணக்காய்வுப் பகுதிக்கு உள்வாங்கப்பட்டனர். அந்த வகையில் சுடரொளி அக்காவும் நிதி தொடர்பான கணக்கு நடவடிக்கைகளில் அவரது புலமை, கூரறிவு என்பன இனங்காணப்பட்டு 1993ஆம் ஆண்டு நிதித்துறை மகளிர் கணக்காய்வுப் பகுதிக்கு உள்வாங்கப்பட்டார்.

அங்கு 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் பருத்தித்துறைப் பகுதியில் ஆயப்பகுதி, வருவாய்ப் பகுதி மற்றும் எமது நிதித்துறை வாணிபங்களில் ஒன்றான சேரன் வாணிபத்தின் யாழ்ப்பாணன் கடை போன்றனவற்றில் தனது கணக்காய்வுப் பணியைத் திறம்பட மேற்கொண்டார். அத்துடன் தமிழீழ மீட்பு நிதி தொடர்பான பணிகளையும் மேற்கொண்டார்.

பின்பு 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணித்தேவையின் தகுதி கருதி பல்கலைக்கழகத்திற்கு செல்லாத மற்றைய நிதித்துறை ஆண், பெண் போராளிகள் அனைவரையும் யாழ் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும்படி பிரிகேடியர் தமிழேந்தி அப்பாவினால் பணிக்கப்பட்டனர். அந்த வகையில் சுடரொளி அக்காவும் அவ்வணிக்குத் தெரிவாகினார். அவர் அந்தக் கற்கைநெறியினை மிகுந்த விருப்புடனும் ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் மேற்கொண்டார். அங்கே ஒன்பது மாதங்கள் போராளிகள் அனைவரும்

காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கைநெறியினையும் மாலை நேரத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட வாணிபங்களின் கணக்காய்வுப் பணியினையும் சோர்வடையாது மேற்கொண்டனர். அதைவிட அவர்களுக்கு இரவு நேரங்களில் யாழில் புகழ்பெற்ற வணிகத்துறை சார்ந்த ஆசிரியர்களினால் சிறப்பு வகுப்புகளும் நடைபெறுவதுண்டு.

சுடரொளி அக்காவும் சிறிதும் சோர்வடையாமல் கற்கைநெறியினையும் மேற்கொண்டு அதே நேரத்தில் கணக்காய்வுப் பணியினையும் மேற்கொண்டு, நன்கு புடம் போடப்பட்டு நிதித்துறைக் கணக்காய்வுப் பகுதியின் தலை சிறந்த கணக்காய்வாளர் ஆகினார். பின்பு 1995ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் நகை வாணிபம், சேரன் இரும்பகம், எழிலகம் புடவை வாணிபம் போன்றவற்றிலும் தனது கணக்காய்வுப் பணியினை மேற்கொண்டார்.

1995ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் எமது முகாம் ஒழுங்கமைக்கப்பட்டு வாணிபங்களுக்கான கணக்காய்வுப் பணிகள் அங்கிருந்து மேற்கொள்ளப்பட்டன. பின்னர் பங்குனி மாத நடுப்பகுதிகளிலும் அங்கிருந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்ந்து வந்து புதுக்குடியிருப்புப் பகுதியில் எமது முகாம் ஒழுங்கமைக்கப்பட்டு எமது நிதித்துறை வாணிபங்களும் ஒழுங்கமைக்கப்பட்டு கணக்காய்வுப் பணிகள் பெரும் இக்கட்டுகளுக்கு நடுவில் சீராக மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில் சுடரொளி அக்காவும் தனது கணக்காய்வுப் பணியை போதிய வசதியின்மை காணப்பட்டும் கிடைத்த வளங்களைக் கொண்டு செவ்வனே மேற்கொண்டார். அக்காலப்பகுதியில் எமது மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருண்மியத்தடையின் விளைவாக ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டினால் உந்துருளிகள் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. அதனால் சுடரொளி அக்கா பணி நிமித்தம் புதுக்குடியிருப்பிலிருந்து துணுக்காய் மல்லாவி, மாங்குளம் போன்ற இடங்களுக்கு ஈருருளி மூலமே பயணம்செய்து தனது உடற்சோர்வையும் பொருட்படுத்தாது, முழு ஈடுபாட்டுடனும் விருப்புடனும் தனது பணியினை மேற்கொள்ளுவார்.

1995 இல் வலிகாமம், பின் 1996 இல் தென்மராட்சிப் பகுதி போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியை வந்தடைந்ததால் எமது போராளிகள், மற்றும் மக்களின் உளவரணானது பாதிக்கப்பட்டுக் காணப்பட்டது. இதனால் இராணுவத்தினருக்கு பதிலடி கொடுக்கவும் எமது போராளிகள், மக்களின் உளவரண் வலுப்பெறுவதற்குமாக, “எந்த ஒரு பலத்திலும் பலவீனம் இருக்கவே செய்யும். அதனைச் சரியாக கண்டறிந்து திட்டமிட்டுத் தாக்குவதில் தான் வெற்றியின் இரகசியம் இருக்கின்றது” என்ற கொள்கையுடைய எமது தேசியத் தலைவர் ஓயாத அலை 1 என்ற தாக்குதல் நடவடிக்கையை முல்லைத்தீவிலுள்ள மிகப்பலமாக அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளத் தீர்மானித்தார்.

இதற்கான ஆளணிப் பற்றாக்குறை நிலவிய காரணத்தினால் எமது பிரிவில் இருந்தும் போராளிகள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவராகச் சுடரொளி அக்காவும் தெரிவு செய்யப்பட்டார். இரண்டு மாதங்கள் கடும் பயிற்சியின் பின் சிறப்பு அணியில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டு ஓயாத அலைகள் 1 வலிந்த தாக்குதல் நடவடிக்கையில் திறம்படக் களமாடி பின்பு சத்ஜெய 1 தாக்குதல் நடவடிக்கையிலும் திறமையாகக் களமாடி வெற்றியுடனும் பெரும் மனநிறைவுடனும் எமது முகாமிற்குத் திரும்பினார்.

பின்பு அவர் 1997 ஆம் ஆண்டு மார்கழி மாதம் உடல்நலக்குறைவு காரணமாகச் சாவடையும் வரை எமது நிதித்துறை வாணிபங்களில் ஒன்றான நகை வாணிபத்தின் கணக்காய்வு அணிக்கு அணிப்பொறுப்பாளராகப் பொறுப்பேற்று விடுதலைப் போராட்டப் பங்களிப்பைச் செய்துவந்தார். பணியிடத்தில் பணியாளர்களுடன் மிகவும் அன்பாகவும் பண்புடனும் அதேவேளை தேவைப்படும் போது கண்டிப்புடனும் ஆளுமையுடன் நடந்துகொள்வார்.

துணுக்காய், மல்லாவி, மாங்குளம், விசுவமடு, முழங்காவில், புதுக்குடியிருப்பு, ஸ்கந்தபும், தண்ணீரூற்று போன்ற இடங்களில் உள்ள நகை வாணிபங்களுக்கு தனது 125 ரக உந்துருளியில் பயணம்செய்து தனது கணக்காய்வுப் பணியினை மேற்கொள்ளுவார். குள்ளமான மெல்லிய தோற்றமுடைய அவர் தன்னை விட பெரிய 125 ரக உந்துருளியை ஓட்டும் அழகை நாங்கள் “துவைக்கிற கல்லில தவளை உட்கார்ந்து இருக்கிறது போல இருக்குது” என்று கிண்டல்

பண்ணுவோம். அதனை அவர் கோபிக்காமல் இயல்பாக எடுத்து சிரித்து விட்டுச் செல்வார். சக போராளிகளை மதித்து அரவணைத்து அன்புடன் நடந்து கொள்ளுவார். புதிய போராளிகளுக்கு கணக்காய்வு நடவடிக்கைகளை இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் அதன் நெளிவு சுளிவுகளை இலகுவான முறையில் துல்லியமாக புரியவைப்பார்.

பணி என்று வந்து விட்டால் உணவு, உறக்கம் அவருக்கு இரண்டாம் இடம்தான். பெரும்பாலும் தனது தொலைவுப் பயணங்களில் தனது நேரத்தினை வீணடிக்கக் கூடாது என்ற நோக்கில் பகல் முழுவதும் பணி புரிந்துவிட்டு தொலைவுப் பயணங்களை இரவில் தான் மேற்கொள்ளுவார். பயணத்தின் போது உணவு உட்கொள்ளும் நேரத்தைக் கூட சிக்கனப்படுத்தி ஒரு போராளியை உந்துருளியைச் செலுத்த விட்டு தான் பின்னிருக்கையில் அமர்ந்து உணவினை உட்கொள்வார்.

வாணிபங்களின் முடிவுக் கணக்குகள் சமப்படாமல் பிழைக்குமெனில்எந்நேரமும்அதைப்பற்றியேசிந்தித்துக் கொண்டு உறக்கத்தின்போது கூட பேரேட்டை (ledger) தலையணை போல் வைத்துக்கொண்டு படுத்திருந்து உறக்கத்தில் இருந்து திடீரென விழித்து தவறினைக் கண்டு பிடித்து சீர்செய்வார். நாங்கள் கூட எங்களது வாணிபங்களின் முடிவுக் கணக்குகள் சமப்படாவிட்டால் எப்படிப்பட்ட சிக்கலான கணக்கு என்றாலும் அவர் கண்டு பிடித்து சீர்செய்து விடுவார் என்ற நம்பிக்கையுடன் சுடரொளி அக்காவையே நாடுவதுண்டு. தடிமன், காய்ச்சல், தலையிடி போன்ற நோய்கள் வந்தால் ஒரு நாள் கூட ஓய்வெடுக்காமல் வலி நிவாரணி மாத்திரையைப் (panadol) போட்டுவிட்டு தனது பணிக்குப் புறப்பட்டு விடுவார். இதனால் அவரது உடல் நிலை சீரற்றுக் காணப்பட்டது. ஆனால் அவர் அதைப் பற்றி யோசிக்காது தன்னை முழுமையாக கணக்காய்வுப் பணிக்கு அர்ப்பணித்த போராளியாக இருந்தார்.

நான் எனக்கு அவரைத் தெரிந்த நாள் முதல் அவர் விடுமுறையில் அவரது வீட்டிற்குச் சென்று ஒரு நாளுக்கு மேல் தங்கி நின்றதைப் பார்த்ததில்லை. விடுமுறையில் நிற்கும் நாட்களைக் கூட சிக்கனப்படுத்தி அந்த நாட்களில் கூட தனது கணக்காய்வுப் பணியை மேற்கொண்டு “அண்ணை எங்களை நம்பி இந்தப் பணியைத் தந்திருக்கிறார்....அந்த நம்பிக்கையை நாங்கள் வீணடிக்கக் கூடாது” என்று கூறுவார்.

தமிழீழத்தை தமிழர் பண்பாட்டின் தொட்டிலாகவும், இன்றைய உலகின் அறிவியலில் உச்சத்தைத் தொட்ட நாடாகவும் உருவாக்கிட வேண்டும் என்பது எங்கள் தேசியத்தலைவனின் பெருங்கனவு. அப்படியாக, தமிழரின் தொன்மையான வரலாற்றைக் கற்றிட வகை செய்யும் நூல்களையும், இன்றைய உலகப் போக்கின் அறிவியற் புதுமைகளை அறிந்திட உதவிடும் நூல்களையும் கற்குமாறு எமது போராளிகள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். அதிலும் போராளிகள் சுமந்து நிற்கும் துறைசார் கடைமைகளைச் செவ்வெனே செய்ய உதவிடும் நூல்களைக் கற்றறிந்து அந்தத்துறைசார்ந்து போராளிகளின் அறிவை இற்றைப்படுத்தத்தக்க வகையில் எமது புரட்சிகர இயக்கம் நூல்களைக் கொணர்வித்தும் தமிழாக்கம் செய்தும் போராளிகளின் கைகளில் சேர்க்கும். அப்படியாக எமது துறைசார்ந்து எமது அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள தமிழேந்தி அப்பா அத்தனை முயற்சிகளையும் செய்வார்.

எனவே, துறைசார் வாசிப்பும், கலை இலக்கிய மற்றும் உலகந்தழுவிய தேசிய இனவிடுதலைப் போராட்ட வரலாற்று நூல்கள் என்பவற்றை நேரம் வாய்க்கையில் எல்லாம் வாசிக்கும் பழக்கம் எமது போராளிகளில் பெருமளவானோரிடம் உண்டு. சுடரொளி அக்காவும் அத்தனை வேலைப்பளுவுக்குள்ளும் தனது வாசிப்புப் பழக்கத்தைக் கைவிட்டதில்லை.

எந்தவொரு இயல்பான உணவையும் அவர் சுவைத்துச் சாப்பிடுவார். எடுத்துக்காட்டாக, எமது உணவு வழங்கல் பகுதியில் இருந்து வரும் கத்தரிக்காய்க் கறியினைக் கூட (நிறைய போராளிகளுக்கு சேர்த்து உணவு தயாரிப்பதனால் அதன் சுவை குறைவாகவே காணப்படும்) சுவையான கோழி இறைச்சிக் கறியினைச் சாப்பிடுவது போல சுவைத்துச் சுவைத்து உண்ணுவார். அவர் அப்படி உண்ணும் அழகைப் பார்த்து எமக்கும் கூட அதை உண்ண வேண்டும் என்ற அவாத் தோன்றும்.

அவர் கணக்காய்வுப் பணியினை மேற்கொண்டாலும் அவரது எண்ணங்களில் எப்போதும் போர்க்களங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற அவாவே காணப்பட்டது. எந்நேரமும் களத்தில் நிற்கும் போராளிகளை நினைத்துக் கவலைப்படுவார். “நாங்கள் இங்கே இப்படி வசதியாக இருக்கிறோம்...களத்தில்

*நிற்கும் போராளிகள் பனி, வெயில், மழை, உணவு, உறக்கம் பாராது பணிபுரிந்து எவ்வளவு இன்னல்களுக்கு முகங்கொடுக்கிறார்கள்" என்று அடிக்கடி கூறிக் கொண்டே இருப்பார். தன்னைக் கரும்புலிகள் அணியில் இணைக்கும்படி தேசியத் தலைவர் அவர்களுக்கு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு பதிலுக்கு காத்திருந்தார். அவரின் பணியின் தேவைகருதி அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு தலைவரிடம் இருந்து பதில் வந்தும் மீண்டும் மனம் சோராமல் மறுபடியும் தன்னைக் கரும்புலிகள் அணியில் உள்வாங்கும்படி தேசியத் தலைவர் அவர்களுக்கு கடிதம் எழுதி அனுப்பிவிட்டுப் பதிலுக்குக் காத்திருந்தார்.*

*இவ்வாறு எந்நேரமும் ஓய்வு ஒழிச்சலின்றி தனது கணக்காய்வுப் பணியையே முழு மூச்சாக மேற்கொண்டு தனது உடல்நிலையை சரிவரக் கவனத்தில் கொள்ளாது இருந்த காரணத்தினால் நீண்ட நாட்களாக இனந்தெரியாத வகைக் கொடிய காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்தார். அப்போதும் கூட முகாமில் வைத்து தனது வாணிபங்களின் ஆவணங்களை வரவழைத்து கணக்காய்வினை மேற்கொண்ட சுடரொளி அக்கா, அன்று சாவடைந்த நாளன்று பகல் கூட தனது வாணிபத்தின் சமப்படாக் கணக்கொன்றினைச் சமப்படுத்திக் கொடுத்துவிட்டு **16.12.1997** அன்று இரவு எம்மையெல்லாம் துயரில் ஆழ்த்தி விட்டு தனது கரும்புலிகள் அணியில் சேர்வதற்கான கனவினையும் மனதில் சுமந்துகொண்டு தனது பணியினை மற்றைய போராளிகள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் மீளாத் துயில் கொண்டுவிட்டார்.*

*- நிலாதமிழ்.*

*"இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக,கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது."*

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு
வே.பிரபாகரன்



# கப்டன் கலைமதி



அது *1995* காலப்பகுதி. வெள்ளை மேற்சட்டையும் (shirt) கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் அணிந்து தமக்கு இடப்பட்ட கணக்காய்வுப் பணியுடனும் வெளிவாரி வர்த்தகப் பட்டப் படிப்பை (கசைளவ வை உழஅஅநசஉந) படிக்கவென யாழ் நாவலர் வீதியூடாக தனது ஈருருளியில் செல்லும் ஒரு போராளியாக கலைமதி அக்காவைக் காணலாம். எப்பொழுதும் எதற்கும் அணித்தமாக இருப்பது போல் அவருடைய எறும்பு போன்ற சுறுசுறுப்பான ஆனால் அடக்கி வைத்திருக்கும் அமைதியான ஆளுமை முதிர்வு எல்லோர் மனதிலும் நிறைந்திருக்கிறது.

கலைமதி அக்காவும் எல்லோரும் போலவே திரு,திருமதி ஜெகதீசன் தம்பதியினருக்கு மகளாக *28.06.1966* இல் ரேணுகாதேவி என்ற இயற்பெயருடன் அக்காமார், அண்ணன், தங்கை, தம்பிகள் கொண்ட இயல்பான குடும்பத்தில் பிறந்தவர் தான். தந்தை ஒரு புகைப்படக்கலைஞராக அந்தக் காலத்தில் புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றை நடத்திவந்தார். மற்றவர்கள் போலவே கல்வி, வாழ்க்கை என்று அவரின் வாழ்வும் நகர்ந்தது. கணக்கியல் உயர் தேசிய கல்வியையும் (HNDA) நிறைவுசெய்து, நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தார்.

காலத்தின் தேவைகருதி *1993* காலப் பகுதியில் தனது பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர், புரட்டாதி மாதம் தனது ஆரம்பப் பயிற்சியை மகளிர் பயிற்சிப் பாசறையில் *27*ஆம் அணியில் "சுகி" முகாமில் மேற்கொண்டார். பயிற்சியில் ஓடும் போது அவருடைய ஒரு கால் புரண்டுவிட்டது. அப்படியிருந்தும் அடிப்படைப் பயிற்சியைத் தொடர்ந்து மேற் கொண்டதால் கால் முறிந்து விட்டது. அதனால் மிகுந்த இடர்ப்பட்டதுடன் துன்பத்தையும் அனுபவித்தார்.

அதன் பின் *1994* பங்குனி மாதமளவில் நிதித்துறை மகளிர் கணக்காய்வுப் பகுதிக்கு பணிக்கு அனுப்பப்பட்டார். சிறிது காலம் சிகிச்சையில் அவர் இருந்தாலும் கணக்காய்வுப் பணியைத் தொடர்ந்தார். அங்கு தான் அவருடைய ஆளுமை வெளிப்பாடு தெரிய வந்தது. அத்துடன் வெளிவாரி வர்த்தக பட்டப் படிப்பையும் (first in commerce) அங்கிருந்தே தொடர்ந்தார்.

நிதித்துறை வழங்கல் பிரிவின் வாணிபங்களின் கணக்காய்வுப் பகுதிக்கு பணிக்கப்பட்டிருந்தார். அவருடைய பணி நேர்த்தி அவர்களுடன் இருந்தவர்களுக்கு நன்கு தெரியும். தானும் நேரத்தை வீணடிக்காமல் மற்றவர்களையும் வீணடிக்க விடாமல் வேலை செய்வது அவரின் திறமை. வழங்கல் பகுதியில் இரும்புத் தொழிலகம், புடவை வாணிபம், கோல்சர் வாணிபம், தையல் தொழிலகம், அடுக்கணி வாணிபம் என பல வாணிபங்களிலும் தனது கணக்காய்வுப் பணியை திறம்பட மேற்கொண்டார்.

*1995* ஐப்பசி மாத காலப்பகுதியில் சிறிலங்கா அரசாங்கம் யாழ்ப்பாணத்தை வன்கவர்வதற்காக வான் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. அதானல் அங்கிருந்து வெளியேறி, சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுப் பணிகள் தொடர்ந்தன. மீண்டும் தரை வழியாகவும் கரையோரத் தாக்குதல்கள் மூலமும் பகுதி பகுதியாக சிறிலங்கா இராணுவத்தினர் எமது ஊர்களை வன்கவர்ந்த வண்ணமிருந்தனர்.

*1996* பங்குனி மாத நடுப் பகுதியில் அங்கிருந்தும் இடம் பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் சென்றபோதும் வாணிபங்களுக்கான கணக்காய்வுப் பணி ஒழுங்கு செய்யப்பட்டு தொடர்ந்து நடைபெற்றது. ஆரம்பத்தில் கடினமானதாக இருந்தாலும் மனம் சோராமல் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு நீண்ட தொலைவுக்குச் சென்றும் வசதி வாய்ப்புகள் குறைவாக இருந்த போதும் பணிகள் சீராக்கப்பட்டன.

*அத் தருணத்தில் தான் இழந்த ஒன்றிற்காக இன்னொன்றைப் பெறுவதற்காக ஓயாத அலைகள்1 நடவடிக்கைக்காக மேலதிக தேவை கருதி நிதித்துறை மகளிர் அணியும் படையணிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.அதில் கலைமதி அக்காவும் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டார்.பயிற்சியின் போது உடைந்து பொருந்திய காலுடன் மிகவும் சிரமப்பட்டார். இருந்தபோதும், ஒருநாளும் பயிற்சிக்குப் பின் நின்றதே இல்லை. குறிப்பிட்ட எண்ணிக்கை முழு வட்டமும் ஓடி முடித்தே ஆக வேண்டும். அவரால் ஓட முடியாத நிலையில் நடந்தேனும் ஓட்டத்தினை நிறைவுசெய்வார்.இயலாவிட்டால் முகாமுக்குத் திரும்பச் சொன்னாலும் போக மாட்டேன் எனக் கூறி பயிற்சியைத் தொடர்ந்து மேற்கொள்வார். தனக்குக் கிடைத்த போரிற்குச் செல்லும் வாய்ப்பைத் தவறவிட அவர் விரும்பவில்லை. சாப்பாடு எடுக்கும் முறை அணிக்குழுவில் அவருக்கு வரும்போது அவர் கொஞ்சம் குள்ளமாக இருப்பதால் சாப்பாடு எடுக்கும் பெரிய சட்டியை (டாசர்) கீழே பிடித்துக்கொண்டு வர கொஞ்சம் சிரமமாக இருக்கும். அதனால் சட்டியை (டாசர்) தலையில் சுமந்துகொண்டு தாண்டித் தாண்டி நடக்க வெளிக்கிட்டு விடுவார். ஓயாத அலைகள் 1 வெற்றியடைய சத்ஜெய 1 நடவடிக்கையும் நடந்து முடிந்தது.*

*மீண்டும் முகாம் திரும்பி தனது தொடர்ச்சியான பணியை மேற்கொண்டார். சிலவேளைகளில் நாங்கள் முகாமில் சமைத்தும் சாப்பிடுவதுண்டு. அப்போது அவர் முட்டைப் பொரியல் உண்டால் சவர்க்காரம் போட்டுக் கைகழுவ மாட்டார். ஏனென்றால் கையில் அடிக்கடி அதை மணந்து பார்த்து மகிழலாம் என்பார். அத்துடன் சமையற்கூடப் பகுதியில் சோறு கூட எடுத்து வரச் சொல்லிக் கூறுவார். ஏனென்றால் அதில் நீர் ஊற்றி வைத்து அடுத்த நாள் வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு, எலுமிச்சம் புளி எல்லாம் விட்டு பழஞ் சோறு குழைத்துத் தருவதற்கு தான். அவர் அவ்வாறு தரும் பழஞ்சோற்றின் சுவையோ தனிதான்.*

*அவரை முகாமில் ஒரு மூத்த அக்கா போல் கருதுவார்கள். ஏனெனில் அறிவுரைகள் சொல்வதிலும் வழிகாட்டுவதிலும் சிறந்தவர். சக போராளிகளாயினும் பணியாளர்களாயினும் யாரையும் இலகுவில் பகைத்துக்கொள்ள மாட்டார். கண்டிப்பாகவும் அதேநேரத்தில் உறவோடும் பழகக்கூடியவர். எனவே அவருக்கென்று ஒரு தனிமரியாதை எல்லோரிடத்திலும் இருந்தது. நீண்டகாலமாக வழங்கல் பகுதி வாணிபங்களின் கணக்காய்வை அவர் திறம்பட செய்து வந்தார். வழங்கல் பகுதிப் பொறுப்பாளராக அம்மா அண்ணை இருந்து வந்தார்.*

*இருப்பு எடுத்தல் தொடங்கி விட்டால் கலைமதி அக்காவை கேட்கவே தேவை இல்லை. "திருவெம்பாவை பாட வெளிக்கிட்டுட்டா" என எல்லோரும் கூறுவார்கள். இரவில் பெற்றோல் மக்ஸ் விளக்கையும் தூக்கிக்கொண்டு ஒவ்வொரு கொட்டிலாக பார்ப்பதற்கு கிளம்பி விடுவார். "இந்த மனிசியுடன் குடும்பம் நடத்த இயலாது" என இவருடன் பணி செய்பவர்கள் பகிடிக்கு கூறுவர். இதனையும் ஒரு நாள் அவர் கேட்டு விட்டார். ஆனால் கோபிக்காமல் சிரித்து சமாளித்து வேலை செய்விப்பார். வழங்கல் பகுதி புடவை வாணிபம் சுதந்திரபுரத்தில் தான் இருந்தது. கணக்காய்வுப் பணி நிமித்தம் அங்குள்ள முகாமில் கலைமதி அக்கா மற்றைய போராளிகளுடன் தங்கியிருந்து வந்தார். அதிகாலை புலர்ந்தது. அன்று புதுக்குடியிருப்புக்கு சென்று தனி நபர் வழங்கல் எடுக்கும் நாள். தன்னுடன் துணையாக பணி செய்த போராளியை அங்கு செல்லத் அணியமாகுமாறு கூறிவிட்டு தேநீர் தயாரிக்க பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். அந்தப் போராளி தயாராகி வந்து பார்த்த போது பாற் சட்டி கருகியிருந்தது. கலைமதி அக்கா அங்கு தான் நின்றவர். ஆனால் அவருக்கு அது தெரியவில்லை.*

*1998 ஆனி மாதம் பத்தாம் நாள் அன்று தான் அந்தத் துன்பமான நிகழ்வு நிகழ்ந்தது. திடீரென சிறிலங்கா இராணுவம் அப்பகுதி மீது வான், தரை மற்றும்கடலிலிருந்து ஒரே நேரத்தில் மும்முனைத் தாக்குதல் நடத்தியது. அதில் பெருமளவு மக்கள் (33 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்), பல பணியாளர்கள் படுகாயமடைய, பலர் கொல்லப்பட்டனர். யார் நினைத்தார் இப்படி நடக்கும் என்று. அந்தக் கோர நிகழ்வில் எமது கலைமதி அக்காவும் (கப்டன் கலைமதி) அம்மா அண்ணாவும் (லெப்.கேணல் அன்பு/அம்மா) வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். "புடவை வாணிபம் இல்லாவிடில் தான் இல்லை" எனக் கூறும் எங்கள் கலைமதி அக்கா என்றும் எம் தேச வரலாற்றில் நீங்காமல் நிறைந்திருப்பார்.*

*- விண்ணிலா-*

# மேஜர் திலகா




நிதித்துறை மகளிரிலிருந்து போர்முன்னரங்குகளுக்கான மேலதிக ஆட்கள் தேவை கருதி அணி ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. முத்தையன்கட்டு சோதியா படையணியின் பயிற்சிப் பாசறை நோக்கி மேஜர் ஜெயந்தி களப்பயிற்சிக்காக அவ் அணியை அழைத்துச் சென்றார். நீண்டகாலம் வெளிக்களப்பணிகளில் இருக்கும் போராளிகளுக்கு இப்பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும். அது **1999** முற்பகுதி, "நான் ஆர்.பி.ஜி (சீபு) பயிற்சி எடுக்க விரும்புறன்" என்று பயிற்சியின் போது பொறுப்பாளரைக் கேட்டது வேறு யாருமல்ல. உயரமான நிமிர்ந்த உருவமும், தீர்க்கமான பார்வையும் கொண்ட திலகா அக்கா தான்.

திலகா அக்காவின் குடும்பத்தின் போராட்டப் பங்களிப்பானது மிகவும் முதன்மையானது. "அப்துல்லா குடும்பம்" என்றால் தெரியாதவர் யாருமில்லை எனலாம். முதன்முதலில் ஆர்.பி.ஜி (RPG) இயக்கத்துக்கு கிடைத்தபோது, அதை இயக்கி "சீபு அப்துல்லா" என அழைக்கப்பட்ட நகுலன் அண்ணாவின் தங்கையே திலகா அக்கா. **1987.10.05** அன்று சிறிலங்கா இந்திய கூட்டுச் சூழ்ச்சியில் வீரகாவியமாகி தீருவிலில் தீயுடன் சங்கமமாகிய பன்னிரு வேங்கைகளில் மேஜர் அப்துல்லாவும் ஒருவர் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

யாழ்.தென்மராட்சி சாவகச்சேரியை இருப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி கணபதிப்பிள்ளை இணையர் **4** மகன்களையும் **4** மகள்களையும் பெற்றெடுத்தனர். இப்படியாக திலகா அக்காவின் குடும்பம் மிக அழகானது. தந்தை ஒரு சிறந்த கட்டடத் தொழிலாளி. கடைசிக்கு முதல் செல்லப்பிள்ளையாக தர்சினி **11.11.1971** அன்று எம்மண்ணில் பிறந்தார். சிறுபராயம் முதல் கல்வி, விளையாட்டுகளில் சிறந்து விளங்கினார். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வி கற்று வர்த்தகப்பிரிவில் தேறினார். குண்டெறிதல், தட்டெறிதல் மேலும் வலைப்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கினார். உதவிப்பந்து போடுபவராக இருந்து அவர் கையில் பந்து கிடைத்தால் அது வலையில் விழும் என்ற அளவிற்குத் திறமையாக ஆடுவார்.

**1991** ஏழாம் மாதம், யாழ் பழைய பூங்காவில் புதிதாக இணைந்த பெண் போராளிகள் கூடியிருந்தார்கள். உயரமாக நீண்ட கூந்தலுடன் "யார் அந்தப் பெண்" என்று தோழிகள் கேட்க, "மேஜர் அப்துல்லாவின் தங்கை" என்ற பதில் வந்தது. அடிமனதில் அடக்கி வைத்திருந்த தமையனின் பாதையைத் தேர்ந்தெடுத்து விட்டார். ஒவ்வோர் பிரிவுக்குமுரிய மகளிர் பொறுப்பாளர்கள் தம் உதவிப்பணிக்குத் தேவையான புதிய போராளிகளை அழைத்துச் சென்றனர். அங்கு பிரிந்த தோழிகள் மீண்டும் ஒன்பதாம் மாதம் **19** ஆம் அணி மகளிர் பயிற்சிப் பாசறையில் ஒன்றிணைந்து ஆரம்பப் பயிற்சியை நிறைவுசெய்து போராளி திலகாவாக உருவானார்.

**1992** ஆரம்பத்தில் நிதித்துறைக்கு முதன்முதலாக மகளிர் தேர்வு செய்யப்பட்டனர். அதில் வர்த்தகம் படித்தவர்கள் (எழுத்து, நேர்முக) தேர்வுகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட, முதல் எட்டுப் பேரில் திலகா அக்காவும் இருந்தார். கணக்காய்வுப் பணிக்கான கல்வி அவர்களுக்கு வழங்கப்பட்டது. சிறிதுகாலம் செல்ல, வாணிபங்களுக்கான கணக்காய்வு பணியையும் ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் திலகா அக்கா சேரன் வாணிபம், மருந்து பால்மா வாணிபங்களில் தனது கணக்காய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

நிதித்துறையின் வழங்கல் பகுதி **1993** காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு அதற்குரிய கணக்குமுறைகள் ஒழுங்குசெய்யப்பட்டு **1994** அளவில் திலகா அக்காவும் இன்னும் சிலரும் கணக்காய்வு செய்து வந்தனர். **1993** நவம்பர் மாதம் பூநகரி சிறிலங்கா கூட்டுப்படைத்தளம் மீதான "தவளைப்பாய்ச்சல்" தாக்குதல் நடவடிக்கை தொடங்கியது. அந்தவேளையில், தானும் தாக்குதலுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவலில்

திலகா அக்காவும் இருந்தார். ஆனால், அவர் தாக்குதலிற்குச் செல்ல அனுமதிக்கப்படாமையால் ஏமாற்றமடைந்தார். கணக்காய்வுப் பணியுடன் யாழ்.உயர் தொழில்நுட்பக்கல்லூரியில் கணக்கியல் உயர் தேசியக் கல்வியையும் பயின்று வந்தார். அவர் குணநடை பற்றிக் கூறுவதாயின், உடனடியாக தெரியாதவர்களுடன் நன்றாகப் பழகமாட்டார். பணியாளர்கள், மற்றவர்களிடம் கண்டிப்பாக இருப்பார். "பிழை என்றால் பிழை தான்" என்றும் எல்லோரும் பணியில் "நேர்மையாக" இருக்க வேண்டும் எனவும் எண்ணுவார். ஆனால் நன்கு தெரிந்தவர்களுடன் நன்கு நெருக்கமாகப் பழகுவார். மனம் திறந்து கதைப்பார். பகிடிகள் விடுவார். வெளிப்பார்வைக்குத்தான் அப்படிக் கடுமை போல் காட்டிக் கொள்வார். ஆனால் எம்முடன் மனதளவில் அன்பாகப் பழகுவார். ஏனெனில் "ஒரு போராளியின் இதயம் மென்மையானது".

சண்டைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் அவர் மனதில் ஆழமாக இருந்தது. 1995 (நடுப்பகுதி) யாழ்ப்பாணத்தை வன்கவரும் வெறியோடு வந்த சிறிலங்கா இராணுவத்தை விரட்டியடிக்கும் "புலிப்பாய்ச்சல்" தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்குச் செல்லவென பொறுப்பாளரிடம் அனுமதி கேட்டிருந்த திலகா அக்காவும் தோழிகளும் வண்டியில் (pick-up) ஏற்றிச் செல்லப்பட்டார்கள். மனதுக்குள் மகிழ்ச்சி. அழைத்துச் செல்லப்பட்டவர்கள் ஒரு சமையல்கூடத்தில் இறக்கி விடப்பட்டு சீனிச்சம்பல் செய்வதற்காக வெங்காயம் உரிக்க விடப்பட்டனர். (ஏனெனில் வெளிப்பணிகளும் போராட்டத்துக்குத் தேவையானது என்பதால் உரியவர்கள் இடப்படும் பணிகளை செய்ய வேண்டும்)

யாழ் இடப்பெயர்வு இடம்பெற்று 1996 வன்னிப்பகுதி சென்று இழப்பீடுகள் தவிர்த்து கணக்குகள் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்ந்தன. எதற்கும் சளைக்காது திலகா அக்காவும் பணிகளைச் செய்தார். ஓயாத அலைகள் 1 தாக்குதல் பயிற்சிக்கு நிதித்துறை மகளிரிலிருந்து சிலர் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் அவர் அவ்வணியில் தெரிவு செய்யப்படாதது அவருக்கு மிகவும் வருத்தம் தான்.

எந்த ஒரு நடவடிக்கையின் வெற்றிக்கும் பின்னால் வழங்கல் அணியின் திறமையான பங்களிப்பும் மிக முதன்மையானதாக இருக்கும். வழங்கல் சரியாக உரிய நேரத்தில் நடந்தால் தான் உரிய அப்பணியைச் சிறப்பாக செய்யலாம். அந்தவகையில் முல்லைத்தீவு மீட்புப் போரின் வெற்றியும் அமைந்தது. அதன் பின் 1997 அளவில் அங்கு முதன்மையான சிற்றுண்டி வாணிபம் அமைக்கப்பட்டது. சிற்றுண்டி வாணிபங்களுடன் சமையல்கூடங்களுக்கான கணக்காய்வுப் பணியையும் திலகா அக்கா அணியினர் செய்து வந்தனர்.

1998.06.10 அன்று சுதந்திரபுரம் மீதான சிறிலங்கா இராணுவத்தின் கொடூரமான மும்முனைத் தாக்குதலில் வழங்கல்பகுதிப் பொறுப்பாளர் லெப்.கேணல் அம்மாஃ அன்பு அண்ணாவும், வழங்கல் வாணிபங்களின் எமது கணக்காய்வுப்பகுதித் தோழி கப்டன் கலைமதி அக்காவும் வீரச்சாவடைந்தனர். மற்றும் பணியாளர்கள், பொது மக்கள் பலரும் கொல்லப்பட்டும் படுகாயமும் அடைந்தனர். திலகா அக்காவும் அந்தப் பேரிடியால் கலங்கித்தான் போனார். கப்டன் கலைமதி அக்கா திலகா அக்காவின் நெருங்கிய தோழி, வழங்கல் பகுதி கணக்காய்வுப் பணியினை கப்டன் கலைமதி அக்காவுடன் இணைந்தே அவர் மேற்கொண்டு வந்தார். நீண்டகாலமாக ஒரே இடத்தில் இருவரும் ஒன்றாக பணிபுரிந்து வந்தமையினால் இருவருக்குமிடையே ஆழமான நட்பும் புரிந்துணர்வும் காணப்பட்டிருந்தது. தனிப்பட்ட தனது சொந்தச் சிக்கல்களை சொல்லி மனம் விட்டுக் கதைக்கும் நெருங்கிய தோழியாக திலகா அக்காவுக்கு கப்டன் கலைமதி அக்கா விளங்கினார். இவரது இழப்பானது திலகா அக்காவை மிகவும் தாக்கியது. அதனால் அவர் மனமுடைந்து காணப்பட்டிருந்தார். தொடர்ந்து புதுக்குடியிருப்புக்குச் சென்று கணக்குகள் ஒழுங்கமைக்கப்பட்டு மீள தமது பணிகளைச் செய்துவந்தார்.

ஆரம்ப காலம் தொட்டு திலகா அக்காவின் முழுக்குடும்பமும் எமது போராட்டத்துக்கு உறுதுணையாகவும் வலுவூட்டிக்கொண்டும் இருந்தனர். ஒவ்வொரு இடப்பெயர்வுகளிலும் தாய், தந்தை, அக்காமார், அண்ணாமார், தங்கை என குடும்பமாக இடம்பெயர்ந்து வந்து எமது தமிழீழ விடுதலைக்கு உறுதுணையாக நின்று உரமூட்டினர். விருந்தோம்பலிலும், கட்டட நிர்மாணப் பணிகளிலும், காப்பரண்களாக நிற்பதிலும் இன்னும் இன்னோரன்ன செயற்பாடுகளிலும் அவர்கள் என்றுமே சளைத்ததில்லை. போராளிகள் சாப்பிடுவதற்கென்றே எந்த நேரத்திலும் அங்கு அடுப்பங்கரை இயங்கிக்

கொண்டிருக்கும். "எங்கள் உடல்களில் ஓடும் செங்குருதி உங்கள் சோறல்லவா" என்று என்றும் அவர்கள் எமது நினைவிலிருப்பார்கள்.

1999 ஆரம்ப காலப்பகுதியில் முன்னரண்களுக்கான ஆளணி தேவை கருதி நிதித்துறை மகளிரணி பயிற்சிக்கு அணியமானார்கள். திலகா அக்காவின் நீண்ட நாள் கனவு நிறைவேற அவரும் தெரிவு செய்யப்பட்டார். பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பு தனது குடும்பத்தினரிடம் சென்று வந்தார். அவர்களுடன் உரையாடி, உண்டு மகிழ்ந்து நிழற்படங்கள் எடுத்துக் கொண்டார். திலகா அக்கா போருக்குச் செல்லப்போகும் விடயம் அவர்களுக்குத் தெரிந்திருக்காது. வீட்டுக்குச் சென்று வந்துவிட்ட பின்பாக, முகாம் திரும்பி பயிற்சிகளை ஆரம்பித்துவிட்டார்.

அதிகாலையில் ஓட்டப்பயிற்சியின் போது "முந்தி, கேட்கக் கேட்க சண்டைக்கு விடேல்லை, இப்ப வயது போட்டுது" என்று கூறிக் கொண்டும் விடாமல் "மூசி மூசி" ஓடுவார். ஓய்வுவேளையில் பூப்பந்து, கரப்பந்து நன்றாக விளையாடுவார். தான் சண்டைக் களத்திற்கு சென்று தனது தமையன் போல சாதனை செய்ய வேண்டும் என்ற ஓர்மம் அவர் மனதில் ஆழப்பதிந்திருந்தது. அதைத் தொடர்ந்து களப்பயிற்சியை முடித்து நெடுங்கேணி முன்னரங்க காவலரண்களில் கடமையில் ஈடுபட்டார்.

அன்று காவலரண்களுக்கான உணவு எடுத்துச் சென்று வழங்கும் முறை திலகா அக்காவினது. ஒவ்வொரு அரணாகக் கொடுத்துக் கொண்டு வருகையில் 34 வது அரண் வந்தது. தனது பாசறை மற்றும் கணக்காய்வு முகாம் தோழியிடம் "எனக்குக் களைப்பாக இருக்கிறது. இங்கு நிற்கிறேன்...அடுத்த அரண்களுக்கு கொடுத்து விடுகிறாயா?" என்று கேட்டார். அவரும் "ஓம்" என்று கொண்டு சென்றார். திடீரென பக்கத்து அரண் நோக்கி சிறிலங்கா இராணுவம் பதுங்கித் தாக்குதலைத் தொடங்கியது. ஒரு பக்கம் லெப்.புகழினி நின்ற அரண். உடனே திலகா அக்காவும் பக்கத்து அரணுக்கு துணையாக தாக்குதல் நடந்த திக்கை நோக்கி பதிலடி கொடுத்தார். எதிரியோ திசை திரும்பி திலகா அக்காவின் தாக்குதலுக்கு எதிராகத் தாக்கத் தொடங்கிவிட்டான்.

திலகா அக்காவும் தோழிகளும் மூர்க்கத்துடன் களமாடினார்கள். திலகா அக்கா தனது காப்பைக் கருத்தில் கொள்ளாது எதிரியை விரட்டியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். 12.06.1999 அன்று யாருமே நினைத்திருக்கவில்லை. எதிர்பாராத வகையில் எதிரியின் பி.கே (PK) ரவை அவரின் நெற்றியைக் குறிபார்த்தது. அசையாத மரம் போல நெஞ்சுரமும் நிமிர்ந்த தோற்றமும் நேர்கொண்ட பார்வையும் கொண்ட எங்கள் திலகா அக்கா எம் தாய் மண்ணை முத்தமிட்டார். தோழிகள் கலங்கினர்.எப்படிச் சொல்வோம் அவர் குடும்பத்துக்கு என்ன பதில் சொல்வோம் என்று பதறினர்.

ஏற்கனவே துன்பத்திலிருந்த அவர்கள் குடும்பத்திலிருந்து இன்னொரு மாவீரரையும் எம் தாய்மண் சுமந்து கொண்டாள். "போன வருடம் (1998) மாவீரராய் சென்ற அவர் தோழி (கப்டன் கலைமதி) தான் எங்கள் தர்சினியையும் கூட்டிக் கொண்டு சென்று விட்டாள்" என தாய் புலம்பினார். திலகா அக்காவின் வித்துடலைத் தூக்கிய போது அவரின் அந்த நீண்ட கூந்தலின் பின்னல் ஒன்று கழன்று தொங்கியது. (கோல்சரைக் கழற்றிய போது நெஞ்சிலும் குண்டு பாய்ந்திருந்தது) எங்கள் நிதித்துறை வழங்கல்பகுதியின் கணக்காய்வு பகுதி அணிப் பொறுப்பாளர் மேஜர் திலகாஃவான்மதியாக வரலாறாகினார். தமிழீழ நிதித்துறை கணக்காய்வுப் பகுதியின் ஒரு விருட்சம் வீழ்ந்தாலும் விழுதுகள் அவர் பெயர் சொல்லி தொடர்கிறோம்.

-விண்ணிலா-



# லெப்ரினன்ட் புகழினி




புகழினி என்றவுடன் எமக்கு நினைவுக்கு வருவது அவளது அழகான தெத்திப் பல்லு தெரிய சிரிக்கும் கள்ளமில்லா வெண்சிரிப்பும் “லொட லொட” என்று எந்நேரமும் வாயோயாமல் அலட்டும் பேச்சும் கட்டைக் காலை வைத்துக் கொண்டு பாதத்தால் ஈருருளியின் மிதிகட்டையை தொடமுடியாமல் அவதிப்பட்டு தெண்டித் தெண்டி ஈருருளி ஓட்டும் அழகும் தான். அவளிடம் அணியும் ஆடை,செய்யும் வேலை எல்லாவற்றிலும் ஒரு நேர்த்தி இருக்கும்.

எந்நேரமும் “அயர்ன்”பண்ணி (ironing) மடிப்புக் கலையாத ஆடை தான் அணிவாள். எந்த வேலையென்றாலும் நாளைக்குச் செய்து முடிப்போம் என்று எண்ணாமல் அன்றே செய்து முடிக்க வேண்டும் என்ற கொள்கை உடையவள். எங்களின் நாவற்பழ நிறத்தழகி அவள். தெற்றுப் பல் தெரிய அவள் சிரிக்கும் அழகோ அழகு தான்....பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவள் சராசரி உயரத்தை விட சற்றுக் குறைவான குள்ளமான உருவத்தை உடையவள். இதனால் அவள் பல சிரமங்களை சந்திக்க வேண்டி இருந்தது. எடுத்துக்காட்டாக, சைக்கிள் ஓட்டுவதற்குக் கூட ஏதாவது ஒரு புட்டியான இடம் பார்த்து தான் ஏறி ஓடுவாள். இதனால் எல்லோரிடமும் நல்ல அறுவையையும் வாங்கிக் கட்டுவாள்.

எல்லோரையும் போலவும் தான் புகழினியின் பிள்ளைப் பராய வாழ்க்கையும் இன்பத்துடன் அமைந்தது. அம்மா, அப்பா, தம்பி, அவள் என அழகிய சிறிய குடும்பம் அவளுடையது. அவளது சொந்தப் பெயர் மேரி கொன்ஸ்ரலின். வீட்டில் ஒரேயொரு பெண்பிள்ளை என்பதால் சரியான செல்லமாக வளர்ந்தாள். அவளது சொந்த இடம் வலிகாமப் பகுதியில் சில்லாலை என்ற கிராமம். அவள் தனது கல்வியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கற்றாள். வலிகாமம் பகுதியில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக அடிக்கடி இடப்பெயர்வு ஏற்பட்டதன் காரணத்தினால் அவளாலும் ஒழுங்காக கல்வி கற்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது. 1994 க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றி சித்தியடைந்து க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள்.

1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது விடுதலைப் போராட்டமானது மிகவும் உச்ச நிலையை அடைந்திருந்தது. வலிகாமப் பகுதியில் எதிரியானவன் எம் நிலத்தை வன்கவர முன்னேறி வந்து கொண்டிருந்த போது எமது போராட்டத்தின் உண்மை நிலையை உணர்ந்து பல்லாயிரக்கணக்கான இளையோர்கள் தாமாகவே மனமுவந்து வந்து எமது அமைப்பில் இணைந்து கொண்டார்கள். அந்தவகையில் மேரி கொன்ஸ்ரலினும் “வண்ணக் கனவுகள் தன்னில் கரைந்துமே பெண்மை கரைந்தது போதும்....இனி கண்ணைத் திறந்தொரு மின்னல் எழுந்திட விண்ணை விழுத்தலாம் வாரும்....பூகம்பமே என்னில் சூழட்டும் நெஞ்சில் போர் எனும் தீ வந்து மூழட்டும்” என்று 1995ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் எமது அண்ணன் கரிகாலன் சேனையில் இணைந்து கொண்டாள். அங்கு அவள் மகளிரணியின் 30ஆவது பயிற்சிப் பாசறையில் புகழினி எனும் பெயருடன் போராளியாக புடம் போடப்பட்டாள்.

பின்பு 1995ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் நிதித்துறை மகளிர் கணக்காய்வுப் பகுதி முகாமுக்கு அனுப்பப்பட்டாள். புகழினி கணக்காய்வுப் பகுதிக்கு வந்த காலம் தொட்டு நீண்ட காலம் மருந்து, பால்மா கணக்காய்வு அணியிலேயே என்னுடன் இணைந்து கணக்காய்வை மேற் கொண்டாள். அவள் பணியிடத்தில் பணியாளர்களிடம் மிகவும் அன்பாகவும் பண்பாகவும், அதேவேளை தேவைப்படும் போது கண்டிப்பாகவும் பணியை மேற்கொள்ளுவாள். அவள் கணக்காய்வில்

மட்டுமல்ல மற்ற இதர செயற்பாடுகளிலும் தன்னை வளர்த்துக் கொண்டாள்.

தற்காப்புக்கலையையும் திறம்பட பயின்று கறுப்புப் பட்டி வரை பெற்றவள். அது மட்டுமல்ல அவள் முறிப்பு நடனம் (டிசநயம னயஉெந) ஆடுவதிலும் நல்ல தேர்ச்சி பெற்றவள். எங்கள் முகாமில் நத்தார்தின நிகழ்வுகள் நடைபெறும் போது அதில் முறிப்பு நடனமாடி அவள் தான் கதாநாயகியாக திகழ்வாள். மேலும் அவள் வாகன ஓட்டுனர் பயிற்சிக் கல்லூரியிலும் பயின்று உழவு இயந்திரமும் நன்றாக செலுத்துவாள். இயக்கத்துக்கு வரும் போது புகழினிக்கு ஈருருளி கூட ஓட்டத் தெரியாது. ஆனால் பின்பு உழவு இயந்திரம் செலுத்தக் கூடிய அளவுக்கு அவளை எமது அமைப்பு வளர்த்து விட்டிருந்தது.

1996ஆம் ஆண்டு ஆரம்ப காலம் தொடக்கம் 2000 ஆண்டு வரை நானும் புகழினியும் ஒன்றாகவே மருந்து பால்மா கணக்காய்வு அணியில் கணக்காய்வு பணி மேற்கொண்டமையினால் எனக்கும் அவளுக்குமான உறவானது பலமானதாகவும் பல இனிமையான தருணங்களைக் கொண்டதாகவும் இருந்தது. அதில் சிலவற்றை அவளது நினைவாகப் பகிர்ந்துகொள்ள அவாக் கொண்டுள்ளேன்.

1996ஆம் ஆண்டு வன்னிக்கு வந்த புதிதில் நானும் புகழினியும் மருந்து பால்மா கணக்காய்வு அணியில் தான் கணக்காய்வை மேற்கொண்டோம். எங்களுக்கு பணிக்குச் செல்வதற்கு ஈருருளி கூட இல்லை. நானும் புகழினியும் ஈருருளி இல்லாத காரணத்தினால் நடராசாவில் (நடையில்) தான் பணிக்குச் செல்வோம். எங்களின் முகாமில் உள்ள போராளிகள் அனைவருக்கும் ஒவ்வொரு பட்டப் பெயர் வைத்து தான் கூப்பிடுவோம். புகழினிக்கு "பேணி"தான் பட்டப் பெயர். (எந்த நேரமும் "லொட லொட" என்று தகர டப்பா மாதிரி அலட்டுவதால் அவளுக்கு "பேணி" என்ற பட்டப் பெயர் உருவானது). என்னைப் பேணி "அரியத்தார்" என்று தான் கூப்பிடுவாள். பின்பு பணிக்குச் செல்வதற்கு இரண்டு பேருக்கு ஒரு ஈருருளி என்று கொடுக்கப்பட்டது. அதில் நானும் பேணியும் (புகழினி) தான் ஒன்றாக பணிக்குச் செல்வோம். வழமையாக அவளை மருந்து பால்மா கடையில் விட்டு விட்டு நான் பொன்னம்பலம் மருத்துவமனைக்குச் செல்வேன்.

நாங்கள் பணி முடித்து விட்டு மதியநேர உணவு இடைவேளைக்கு முகாமில் சென்றுதான் சாப்பிடுவோம். அப்போது சாப்பிடும் தட்டுக் கழுவிற பஞ்சியில நானும் புகழினியும் ஒரு தட்டில தான் உணவு உண்போம். சாப்பிட்ட தட்டைக் கழுவோணும் என்ற கள்ளத்தில நான் முதலாவதாகச் சாப்பிட்டிட்டு தட்டை அவளிடம் தள்ளி விட்டு ஓடி விடுவேன். அவள் என்னைத் திட்டிக் கொட்டிப் புறுபுறுத்தபடி ஒருவாறு தட்டைக் கொட்டிக் கழுவிப்போட்டு வருவாள். அவ்வாறு அவளது புறுபுறுப்பைக் கேட்பதிலே எனக்கு பெரிய ஒரு மகிழ்வு இருக்கும்.

1997ஆம் ஆண்டு நாங்கள் க.பொ.த உயர்தரத்தை முடிக்காமல் எமது அமைப்பில் இணைந்தபடியால் பணித்தேவையின் தகைமை கருதி உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு பணிக்கப்பட்டோம். எங்களுடன் புகழினியும் இணைந்து கல்வி கற்றாள். அவள் இயல்பாகவே மிகவும் கூச்ச மனப்பாங்கும், இரக்க குணமும், பயந்த சுபாவமும் உடையவள். அதனாலேயே அவளை எந்நேரமும் கிண்டலடிப்பது தான் எமது பொழுதுபோக்கு.

உயர்தரம்படிக்கும்போது எமது பொறுப்பாளரால் நாம் வெளியே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் எமக்கோ வெளியில் விடுப்பு பார்க்காமல் இருக்க முடிவதில்லை. எங்கள் முகாம் முற்றத்திலே பெரிய அடர்ந்து செழித்து வளர்ந்த மாமரம் ஒன்று உண்டு. அதிலே ஏறிப் பார்த்தால் வெளியே குறிப்பிட்டளவு தொலைவு வரைக்கும் என்ன நடந்தாலும் தெரியும். அதனால் நாங்கள் மாமரத்துக்கு மேலே ஏறி அமைதியாக இருந்து படிக்கிறம் என்று கதை விட்டு மாமரத்துக்கு மேல ஏறி இருந்து விடுப்புப் பார்த்துக் கொண்டு படிப்பதுண்டு. புகழினிக்கு மாமரத்தில எங்களோட சேர்ந்து ஏறி இருந்து விடுப்பு பார்க்க விருப்பம்....ஆனால் ஏறத் தெரியாது. அதனால் நாங்கள் இரண்டு பேர் அவளை மேலேயிருந்து அவளது இரண்டு கைகளையும் பிடித்து இழுக்க கீழே இருந்தும் ஒராள் தள்ளி விட்டு ஒரு மாதிரி ஏற்றிப் போடுவோம்.

மேலேயிருந்து படிக்கிறம் என்று போட்டு நாங்கள் மரத்தில இருக்கிற மாம்பிஞ்சுகளால வீதியால் உந்துருளியில் பயணிக்கின்ற எங்கட இயக்க அண்ணாக்களுக்கு எறிவதுண்டு. அண்ணாக்களும் எறிவது நாங்கள் என்று தெரிந்தாலும் பாவம்

பிள்ளைகள் தானே என்று விட்டுக் கண்டும் காணாத மாதிரி போய் விடுவார்கள்.

ஆனால் புகழினிக்கு நன்றாக இலக்கு பார்த்து எறிய தெரியாது. அவள் ஒரு உந்துருளிக்கு மாம்பிஞ்சால எறிய வெளிக்கிட்டு அது போய் பின்னால ஈருருளியில் வந்த அப்பு மேல பட்டு அந்த அப்பு வந்து பொறுப்பாளரிட்ட வந்து பிள்ளையள் மாம்பிஞ்சால எறிஞ்சு போட்டுதுகள் என்று சொல்லிக் கொடுத்து புகழினியால நாங்கள் நான்கு பேரும் நூறு தோப்புக்கரணம் போட்டதை இப்பவும் மறக்க முடியாது.

புகழினிக்கு எங்களோட சேர்ந்து கள்ள வேலைகள் செய்வதற்கு சரியான பயம். நாங்கள் வலுக்கட்டாயமாக இழுத்தாலும் வரமாட்டாள். எங்களது முகாமில் இருக்கும் போராளிகளின் பெற்றோர் அவர்களின் பிள்ளைகளைப் பார்க்க வரும் பொழுது சாப்பிடுவதற்கு நிறைய உணவுப் பொருட்கள் கொண்டு வந்து தருவதுண்டு. அதை தமா அன்ரா தான் (ஒரு அக்காவின் பட்டப் பெயர் தான் தமா அன்ரா) எல்லோருக்கும் பிரித்துக் கொடுப்பார். அவர் எல்லோருக்கும் அளவாகக் கொடுத்து விட்டு மிகுதியை ஒரு மேசையில் கடைசி இழுப்பறையில் (இலாச்சி) பதுக்கி வைப்பார். அதில் கடைசி இலாச்சிக்கு மட்டும் தான் பூட்டு உள்ளது. மற்றைய இரண்டு இலாச்சிகளுக்கும் பூட்டு இல்லை. தமா அன்ரா கடைசி இலாச்சியில் வடிவாக வைத்து பூட்டிப் போட்டு அங்கால போனதும் நாங்கள் பூட்டில்லாத மேல் இலாச்சியைக் கழட்டிப் போட்டு கீழ் இலாச்சியில் உள்ள தின்பண்டங்களை எல்லாம் எடுத்துச் சாப்பிடுவோம். புகழினியை இதுக்கு கூட்டுச் சேர்த்தால் வரவும் மாட்டாள் நாங்கள் கொண்டு போய்க் கொடுத்தாலும் சாப்பிடவும் மாட்டாள். சாப்பிட்டால் பிறகு தமா அன்ராவிடம் நல்ல கிழி வாங்க வேண்டிவரும் என்ற பயம் அவளுக்கு. (எங்களுக்கு எவ்வளவு கிழி வாங்கினாலும் சாப்பாட்டு விசயத்தில சொரணை வராது).

எங்களது முகாமுக்கு பின் புறத்தில் இரண்டு பெரிய பலாமரங்கள் உண்டு. அதில் நிறைய பலாப்பழங்கள் கனிந்து தொங்குவதுண்டு. எங்கள் முகாம் வளவுக்கு சொந்தக்கார ஆச்சி முகாமுக்கு பக்கத்து வீட்டில தான் இருக்கிறவர். அவர் அடிக்கடி முகாமுக்கு வந்து எத்தனை பலாப்பழம் காய்த்து இருக்கிறது என்று கண்காணிச்சுக் கொண்டு தான் இருப்பார். எங்களுக்கோ அந்தப் பலாப்பழங்களைக் கண்டால் வாயூறும். ஆச்சியின் கண்ணில மண்ணைத் தூவிப்போட்டு அந்த பலாப்பழங்களை அடிக்கடி நாங்கள் பிடுங்கிச் சாப்பிடுவதுண்டு. இந்தப் பலாப்பழம் பிடுங்குகின்ற நிகழ்வானது அடிக்கடி எங்கட இரவு நேரக்காவற்கடமை நேரத்தில் தான் நிகழும்.

மற்ற குழப்படி வேலைகளுக்கு பயப்படுகின்ற புகழினி பலாப்பழத்தில இருக்கிற விருப்பத்தில் இதுக்கு மட்டும் எங்களோட கூட்டுச் சேருவாள். பலாப்பழம் ஏறிப் பிடுங்கவோ வெட்டவோ வரமாட்டாள்...நாங்கள் ஏறிப் பிடுங்கி வெட்டி வைத்தால் மற்றைய எங்கட கூட்டுக் களவாணிகளை (முகாமில இருக்கிற எல்லோரையும் நாங்கள் இந்த நிகழ்வுக்கு சேர்ப்பது இல்லை...பல விசுவாசக்குஞ்சுகளும் இருந்ததால் போட்டுக் கொடுத்து விடுவார்கள் என்ற பயம்). உறக்கத்தில் இருந்து எழுப்பிக் கூட்டி வந்து அவைக்கும் பரிமாறி தானும் சாப்பிடுகின்ற வேலையை மட்டும் தான் பார்ப்பாள்.

இப்படித்தான் ஒருநாள் இரவு காவற்கடமை நேரத்தில் பலாப்பழத்தை இறக்கிச் சாப்பிட்டுப் போட்டு பலாச்சக்கையை புகழினியின் மொக்கை ஐடியாவால பக்கத்து வீட்டு வளவுக்கை தூக்கிப் போட்டு அந்த பக்கத்து வீட்டுக்கார அக்கா முகாம் வளவுக்கு சொந்தக்கார ஆச்சியிடம் போட்டுக் கொடுத்து, அந்த ஆச்சி முகாமுக்கு வந்து பொறுப்பாளரிடம் சொல்லி சண்டை பிடித்து பொறுப்பாளர் ஆச்சியை ஒரு மாதிரி சமாளிச்சு அனுப்பின கதையை இப்பவும் மறக்க முடியாது. (எங்களின் பொறுப்பாளர் சாப்பாட்டு விசயங்களில எங்களுக்குத் தண்டனை தருவது இல்லை). இப்படி புகழினியால நாங்களும் மாட்டுப்பட்ட நிகழ்வுகள் நிறைய உண்டு.

புகழினியின் குடும்பத்தின் சூழ்நிலையானது மிகவும் கவலையளிக்கக் கூடியதாகவே காணப்பட்டது. அவளது குடும்பம் சொந்த இடத்தில் இருந்த போது சொந்த தொழில் செய்து வந்த படியால் நல்ல வசதியாகத் தான் வாழ்ந்து வந்தார்கள். பின்பு வன்னிக்கு இடம்பெயர்ந்து வந்ததால் புகழினியின் அப்பாவிற்கு தொழில் வாய்ப்பின்றி அன்றாட உணவுத் தேவைக்குக் கூட அவதிப்பட்டார்கள். புகழினியின் அம்மா மகள் இயக்கத்துக்கு வந்ததால் அவளது பிரிவினைத் தாங்க முடியாமல் கவலைப்பட்டுக் கவலைப்பட்டு இருதய நோய் மற்றும் சுவாச நோய் போன்ற நோய்களால்

பீடிக்கப்பட்டு மிகவும் அவதியுற்றார். அப்பா தான் ஓலைப் பாய், பெட்டி இழைத்து விற்று பிழைப்பு நடத்தி வந்தார். புகழினியின் தம்பியோ மிகவும் இளையவன். அப்போது பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். இதனால் நாங்கள் புகழினியுடன் அவளது வீட்டுக்குச் செல்லும்போது புகழினியின் அம்மா "என்ரை மகள் வீட்டை இருந்திருந்தால் படித்து உழைத்து எங்களைப் பார்த்திருக்கலாம் தானே" என்று சொல்லி அழுது கவலைப்படுவார். ஆனால் புகழினியோ "வீட்டுக்கு ஒருவர் நாட்டுக்குத் தேவை தானே.. உங்களுக்கு தம்பி இருக்கிறான் தானே"என்று சொல்லி சிரித்து சமாளித்து விடுவாள்.

புகழினி எமது தலைவர் மீதும் போராட்டத்தின் மீதும் எல்லாப் போராளிகளைப் போன்றே மிகுந்த பற்றும் விசுவாசமும் உடையவள். எமது தலைவரின் புகைப்படங்களைச் சேகரித்து அதை ஒரு செருகேடாக (யடடிரஅ) வைத்து இருந்தாள். சில போராளிகள் வீட்டில "அம்மாவாணை "என்று சத்தியம் செய்வதைப் போல இயக்கத்திலே "அண்ணையாணை" என்று கதைப்பதுண்டு. அது புகழினிக்குப் பிடிக்காது. சும்மா அண்ணையை போட்டு உங்கட லூசுக் கூத்துக்களுக்கு இழுக்காதையுங்கோ என்பாள்.

எங்களின் பொறுப்பாளர் புகழினியின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவளைச் சண்டைக்களங்களுக்கு அனுப்புவதில்லை. 1999ஆம் ஆண்டு எங்கள் முகாமில் இருந்து சிலபேர் நெடுங்கேணிப் பகுதிக்குச் சண்டைக்களத்திற்குச் சென்ற போது பொறுப்பாளர் புகழினியை அங்கே செல்வதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால் அவள் அழுது சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருந்து அவரோடு சண்டை பிடித்து சண்டைக் களத்துக்குச் சென்று அங்கு திறம்பட செயற்பட்டு முகாமுக்குத் திரும்பினாள்.

பொதுவாக நாங்கள் வெளிப் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் பெரிய பெரிய வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளின் போது போராளிகள் பற்றாக்குறை காரணமாக உடற் குறையுள்ள விழுப்புண்ணடைந்த மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்கும் மட்டும் தேவையான கொஞ்சப் பேரை மட்டும் முகாமில் விட்டு விட்டுமிகுதிப்பேரைஇடையிடையேபோர்ப்பயிற்சிகள் தந்து களப்பணிகளுக்கு இணைத்துக் கொள்வார்கள். எங்களுக்கும் களப்பணிகளில் ஈடுபடுவதில்லை என்று குற்றவுணர்ச்சி ஏற்படுவதால் இப்படி இடையிடையே இணைப்பதால் நாங்களும் மிகவும் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் களப்பணிகளுக்குச் சென்று வருவோம். எமது தலைவரும் ஒரு போராளிக்கு வெளிநிருவாகப் பணிகளில் மட்டுமல்ல களப்பணிகளிலும் தேர்ச்சி இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவார்.

அந்த வகையில் நிதித்துறை மகளிர் அணியைச் சேர்ந்த நாங்கள் 2000 ஆம் ஆண்டு மே மாதத்தில் மாலதி படையணியுடன் இணைந்து வலிந்த தாக்குதல் நடவடிக்கை ஒன்றிற்காக சுண்டிக்குளம் பகுதியில் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். அதேவேளை, எங்கள் புகழினி ஓட்டுனர் பயிற்சிப் பள்ளியில் பயின்று கொண்டிருந்தபடியால் அவர்களுடன் சேர்ந்து பளை போர்முன்னரங்கப் பகுதியில் எம் மக்களின் காவற் தெய்வமாக காவற்கடமை புரிந்து கொண்டிருந்தாள்.

29.05.2000அன்று எங்களுக்கு "புகழினி வீரச்சாவாம்" என்ற கொடிய செய்தி வந்தடைந்தது. எல்லோரும் கலங்கிப்போய் நின்றோம். பளைப் பகுதியில் போர் முன்னரங்கப் பகுதியில் அவள் காவற்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எதிரியின் ஆழ ஊடுருவும் அணியின் சுற்றிவளைப்பின் போது எதிரியுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமுடனும் தீரமுடனும் போராடி எங்களின் புகழினி லெப்ரினன்ட் புகழினியாக வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

பின்பு நாங்கள் அனைவரும் எங்களது பயிற்சி முகாம் பொறுப்பாளரிடம் ஒரு நாள் அனுமதிகேட்டு புகழினியின் இறுதிவணக்க நிகழ்வுக்குச் சென்றோம். அங்கே எங்கள் புகழினியின் வித்துடலை கடைசியாகக் கூட பார்க்க முடியாமல் வித்துடல் பேழை அடைக்கப்பட்டிருந்தது. அதைவிட புகழினியின் அப்பா என்னைப் பார்த்து "பிள்ளை உன்னோட தானே என்ரை மகள் ஒன்றாகத் திரியுறவள் நீ மட்டும் தான் வந்திருக்கிறாய் என்ரை மகள் எங்கே" என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கதறி அழுததும் நானும் குற்றவுணர்வால் அழுததும் நான் சாகும் வரை என் நினைவை விட்டுப் போகாது. பின்பு 2002ஆம் ஆண்டு புகழினியின் அப்பா பொன்னம்பலம் மருத்துவமனையில் நான் கணக்காய்வுப் பணியை மேற்கொண்டிருந்தபோது என்னை வந்து சந்தித்து பிள்ளை தாங்கள் அனைவரும் சொந்த இடத்திற்கு (சில்லாலைக்கு) செல்லப் போறோம்

என்று சொல்லி விட்டு "என்ர பிள்ளையில்லாமல் போகப் போறேன் "என்று கதறி அழுததை இன்றும் நினைத்தால் மனதை பாறாங்கல்லால் வைத்து அழுத்தியது மாதிரி ஒரு உணர்வைத் தருகிறது.

எங்களின் அன்புத் தோழி புகழினியே.... உன்னை இழந்த இந்த நாளில் மட்டுமல்ல எங்கள் வாழ்நாட்கள் முழுக்க எந்நாளுமே எங்கள் பழைய தோழிமார் யாரோடு கதைத்தாலும் உன் நினைவைத்தான் மீட்டிக் கொண்டிருக்கின்றோம். உன்னைப் போன்ற ஒன்றாய்க் கூடி வாழ்ந்த தோழர்கள், தோழியர்களை இழந்து விட்டு நாங்கள் மட்டும் தப்பி வந்து குற்றவுணர்வுடன் நடைப்பிணங்களாக எங்களின் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காக புன்னகை என்னும் அரிதாரத்தைப் பூசிக்கொண்டு மனதுள்ளே எரிமலை போன்று குமுறிக் கொண்டு உயிர் இருந்தும் பிணமாக உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இப்பொழுதும் நீ என்னை "அரியத்தார்" என்று கூப்பிடும் ஒலி காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

எம் தமிழீழ வரலாற்றில் என்றும் உன் கதை எழுதி வைக்கப்படும்.

-நிலாதமிழ்-





**"நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்.அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.**

**– தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன**

# லெப்ரினன்ட் மிருணா/ முல்லையரசி




எமது தேசத்துக்கான விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாம் எத்தனையோ ஒப்பற்ற அர்ப்பணிப்புக்கள், ஈகங்கள், உயிர்க்கொடைகள் போன்றவற்றைக் கண்டு வந்திருக்கின்றோம். அந்த வகையில் தமிழீழத் தாயின் மறமகளாகவும், எம் ஒப்பற்ற பெருந்தலைவனின் வீரத்தங்கையாகவும் வாழ்ந்திருந்தாள் லெப்ரினன்ட் மிருணாஃமுல்லையரசி அக்கா.

ஈழத்தமிழ் மன்னன் பண்டாரவன்னியன் செங்கோலோச்சிய அடங்காப்பற்று என்று அழைக்கப்படும் வன்னிப் பெருநிலப்பரப்பிலே இயற்கை எழில் கொஞ்சும் வட்டக்கச்சி எனும் ஊரிலே திரு.திருமதி சேதுபதி மண இணையருக்கு அன்பு மகளாக மதிவதனி 1974.03.09 இல் பிறந்தாள். வீரத்திற்கும் மானத்திற்கும் இலக்கணமாக வாழ்ந்த பண்டார வன்னிய மன்னன் ஆண்ட வன்னி வளநாட்டில் பிறந்ததால் மதிவதனிக்கும் வீரம் எனும் சொல்லானது குருதியிலூறியதொன்றாகவே காணப்பட்டது. அவள் வீரத்தில் மட்டுமல்ல கல்வியிலும் சிறந்து விளங்கினாள். தனது சிறு வயது முதல் கல்வியை வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் (வட்டக்கச்சி மத்திய கல்லுரி) பயின்று வந்தாள். 1990ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரத்தில் தோற்றி அதி திறமைச் சித்திகள் எடுத்து க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவை தெரிவு செய்து பயின்று, 1993 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்தில் தோற்றி சிறப்பாகச் சித்தியடைந்து, பின்னர் எமது தமிழீழ சட்ட நீதிமன்றத்தில் பணிபுரிந்து வந்தாள்.

ஆற்றோரத்து ஏதிலி முகாம்கள், வயல் மேட்டின் புற்றுப் பிட்டிகள், வீதியோரங்களென விரிந்திருக்கும் இடப் பெயர்வின் துயர வாழ்வினைக் கண்டு மதிவதனியும் “அன்னை நிலத்தினுக்காக வரிப்புலியாகி நடந்திடுவோம்...எம் ஆசையெல்லாம் தமிழீழம் அதற்கென அங்கு விதைந்திடுவோம்” என பொங்கி எழுந்து 1995ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் எமது போராட்டக் கடப்பாட்டின் உண்மைத்தன்மையைப் புரிந்துகொண்டு தனது தார்மீகக் கடமையை நிறைவேற்ற எமது அமைப்பில் இணைந்து “லீமா 1” மகளிர் பயிற்சிப் பாசறையில் தனது அடிப்படைப் பயிற்சியினை நிறைவுசெய்து, மிருணாஃமுல்லையரசி எனும் இயக்கப்பெயர் சூடி, தமிழீழப் பெண் விடுதலைப் போராளியாகி 1996ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நிதித்துறை மகளிர் கணக்காய்வுப் பகுதி முகாமுக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு அவர் கணக்காய்வுப் பணியுடன் அம்முகாம் போராளிகளுக்கான மருத்துவப் போராளியாகவும் செயற்பட்டார். அவரின் மற்றைய போராளிகளைத் தாயைப் போல அரவணைக்கும் பாங்கு, பொறுமை, சகிப்புத்தன்மை என்பனவற்றை இனங்கண்டு கொண்ட நிதித்துறை மகளிர் பொறுப்பாளர் லெப்.கேணல் வரதா அக்கா, அவரை எமது பிரிவின் மருத்துவப் போராளியாக நியமிக்கும் பொருட்டு ஆறு மாதங்கள் மருத்துவக் கற்கைநெறிக்காக மருத்துவப் பிரிவுக்கு அனுப்பினார். அங்கு அவர் திறமையாகச் செயற்பட்டு மருத்துவக் கற்கைநெறியை நிறைவுசெய்து கொண்டு நிதித்துறை மகளிர் மருத்துவப் போராளியாக எமது முகாம் திரும்பி பணிகளை மேற்கொண்டார். எமது முகாமின் “விளக்கேந்திய சீமாட்டியாக” “புளோரன்ஸ் நைற்றிங்கேல்” ஆக (florence nightingale) எமது மிருணா அக்கா மிகச் சிறப்பாகச் செயற்பட்டார். அவர் குள்ளமான, கொஞ்சம் உருண்டையான, குண்டான தோற்றத்தினைக் கொண்டிருந்தபடியால் எங்கள் எல்லோராலும் “பொக்கான்” எனச் செல்லமாக அழைக்கப்பட்டார். இவரது அன்பு, பரிவு, தாய்மையுணர்வு, எந்த வேலையென்றாலும் முழுமையாக முடிக்க வேண்டும் என்ற அவரது எண்ணம்

போன்றவற்றினை எடுத்துக்காட்டக் கூடியதான சில நிகழ்வுகளைக் கூறுகின்றேன்.

**1997-1998** ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது வன்னிப் பெருநிலப்பரப்பில் மலேரியா நோயின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்பட்டது. எமது மருத்துவப் பிரிவினரின் மகத்தான சிறந்த தன்னலமற்ற செயற்பாட்டின் காரணத்தினால் வன்னியில் அதன் தாக்கம் மிகக் குறைவாகி இல்லாதொழிக்கப்பட்டது. அந்த வகையில் எமது முகாம் போராளிகளுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இவ்விரண்டு குளோரோக்குயின் (chloroquine) எனும் மலேரியாத் தடுப்பு மாத்திரை வழங்கப்படுவதுண்டு. இதனால், ஞாயிற்றுக்கிழமைகளில் எங்களது முகாம் அல்லோலகல்லோலப்படும். எமது புளோரன்ஸ் நைற்றிங்கேலான மிருணா அக்கா இந்த மலேரியா தடுப்பு மாத்திரை வழங்கும் திருப்பணியை மிகவும் கடினங்களுக்கு மத்தியில் சிறப்பாக மேற்கொள்ளுவார். சில போராளிகள் மாத்திரையின் கசப்புத் தன்மையின் காரணத்தினால் மாத்திரை உட்கொள்ளக் கள்ளத்திலே "தாங்கோ மிருணாக்கா பிறகு போடுறம்" என்று போட்டு அவர் அங்கால போனதும் தூக்கி எறிவதுண்டு. இதனை எப்படியோ மிருணா அக்கா கண்டுபிடித்து விடுவார். பின்பு தானே முன்னின்று அவர்களைத் திட்டாமல் அன்பாக "இஞ்சாருமப்பா இதை மட்டும் ஒருக்கா போடுமனப்பா…என்ர செல்லம் எல்லோ" எனக் கெஞ்சிக் கொஞ்சிக் கேட்டு அன்பாக எல்லோரையும் மாத்திரை உட்கொள்ள வைத்துவிடுவார்.

எமது மண்மீதான சிறிலங்காவின் பொருண்மியத்தடை மற்றும் நிலவிவந்த போர்ச் சூழல் என்பனவற்றினால் ஏற்பட்ட பொருண்மிய நெருக்கடிகளால், வெளிநிருவாகப் பணிகளில் ஈடுபடும் போராளிகளுக்கு முட்டைப் பொரியல் போன்ற சிறப்பு உணவுகள் உணவு வழங்கல் பகுதியினால் வழங்கப்படுவதில்லை. இதனால் நாங்கள் முட்டைப் பொரியல் மீதுள்ள வாஞ்சையால் பக்கத்து வீட்டுக் கோழிகளை சாப்பாடு போட்டு அரவணைத்து முட்டை எடுத்து வழங்கல் பகுதியினால் தலைமுடிக்கு வைக்கத் தருகின்ற எண்ணெயைக் கொண்டு முட்டை பொரித்து சாப்பிடுவதுண்டு. சில வேளைகளில் ஒரு முட்டை தான் கிடைக்கும். அதனை மிருணா அக்கா மிக நுட்பமாக நிறையத் தண்ணீர்விட்டு நுரை பொங்கப் பொங்க நன்றாக அடித்து எத்தனை பேர் நிற்கிறோமோ அதற்கு அளவாக (4பேர் நின்றால் ஒரு முட்டையை நான்கு வட்டமாக) திறமையாக எல்லோருக்கும் பொரித்துக் கொடுப்பார்.

நாங்கள் வெளிநிருவாகப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் போராளிகள்எல்லோரும்எப்போதும்சோர்வடையாமல் களத்திற்குச் செல்வதற்கு அணித்தமான நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக எமது கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு முதல் அதிகாலையில் எழுந்து உறுதிமொழி கூறி உறுதியெடுத்து விட்டு உடற்பயிற்சிகள் செய்து முகாமுக்கு வெளியே வீதி வழியாக ஓட்டப் பயிற்சியை மேற்கொள்வதுண்டு.

எமது முகாம் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்தபடியால் நாம் ஓட்டப் பயிற்சியினை மேற்கொள்ளும் போது அடிக்கடி தெரு நாய்களின் தொல்லைகளைச் சந்திப்பதுண்டு. இதன் காரணத்தினால் ஒவ்வொரு நாளும் நாம் ஓட்டப் பயிற்சியினை மேற்கொள்ளும் போது மிருணா அக்கா கையில் ஒரு கொட்டான் தடியுடன் காட்சியளிப்பார். அவர் கட்டையான உருண்டையான உருவத்துடன் கையில் கொட்டான் தடியுடன் நாய்களைத் துரத்திய படி ஓடுவதைப் பார்க்க எங்களுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சில போராளிகள் ஓடுவதற்கு கள்ளத்தில பம்மாத்து அடித்துக்கொண்டு முகாமுக்கு அருகில் இருக்கும் மரத்தடியில் குந்தியிருந்து விட்டு, ஓடிக் களைத்து வியர்வை சிந்திய மாதிரி தோற்றமளிப்பதற்காக அருகில் இருக்கும் குழாய்க் கிணற்றில் தண்ணீர் எடுத்து தெளித்து விட்டு ஓடிக் களைத்து வியர்வை சிந்திய ஆக்கள் மாதிரி மற்றைய ஆக்கள் ஓடி முடித்து வரும்போது அவர்களுடன் சேர்ந்து வருவதுண்டு. ஆனால் மிருணா அக்கா பம்மாத்து அடிக்காமல் அந்த ஓட்டப் பயிற்சியை "மூச்சு வாங்க மூச்சு வாங்க" முழுமையாக ஓடி முடிப்பார்.

அவர் மருத்துவப் பணியோடு மட்டுமல்லாது கணக்காய்வுப் பணியிலும் திறம்படச் செயற்பட்டார். எமது நிதித்துறை வாணிபங்களான சோழன் வாணிபம், நகை வாணிபம், பெருந்தோட்டப் பகுதி மற்றும் அது சார்ந்த வாணிபங்களிலும் தனது கணக்காய்வுப் பணியை மிகவும் ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் ஆளுமையுடனும் மேற் கொண்டார். அவர் ஒரு பணியை முடிக்க வேண்டும் என்றால் இரவு, பகல் பாராது கண் விழித்து செயற்பட்டு முடிப்பார். பணியிடங்களிலே

பணியாளர்களுடன் மிகவும் ஒட்டாகவும் தேவைப்படும் போது மிகவும் கண்டிப்புடனும் ஆளுமையுடன் செயற்படுவார்.

வெளிநிருவாகப் பணிகளில் ஈடுபடும்போது மக்களுக்கும் போராளிகளுக்கும் இடையிலான உறவானது மிகவும் ஒட்டுறவாகவே காணப்பட்டது. எமது மக்கள் போராளிகளை சாதி, மத பேதங்களைக் கடந்து தங்கள் வீட்டில் ஒரு பிள்ளையாகவே கருதினார்கள். வீட்டில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை நிறைவுசெய்வதற்காகவும் எமது கட்டுக்கோப்பான நிருவாகக் கட்டமைப்பின் மீதுள்ள நம்பிக்கையினாலும் நாட்டின் முன்னேற்றத்துக்கு தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்ற அவாவினாலும் அவர்கள் எமது நிறுவனங்களில் பணி புரிவதுண்டு. அந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் பணியாளர் தாம் கொண்டு வரும் சிறிய சாப்பாட்டுப் பெட்டி உணவினை அன்புடன் எமக்குப் பகிர்ந்தளிப்பதுண்டு. சிலவேளைகளில் “பாவம் போராளிகள் அவர்களுக்கு முகாமில் நல்ல சுவையான உணவு கிடைக்காது” என்று நினைத்து தங்கள் உணவினை எமக்களித்து விட்டு தாம் பட்டினி இருப்பதும் உண்டு.

அந்த வகையில் மிருணா அக்காவுக்கும் பணியாளர்களுக்குமான உறவானது பணி தவிர்ந்த மற்றைய வேளைகளிலே ஒரு குடும்ப உறவு போலவே காணப்பட்டது. அவர்கள் தங்கள் சொந்த குடும்பச் சிக்கல்களைக் கூட அவரிடம் சொல்லி தீர்வு கேட்பதுண்டு. மிருணா அக்கா எமது போராட்டத்தில் இணைவதற்கு முன்பு எமது தமிழீழ சட்ட நீதிமன்றில் பணிபுரிந்த காரணத்தினாலோ என்னவோ பணியாளர்களுக்கு அவர் நல்ல தீர்வுகளைக் கூறி அவர்களது குடும்பப் பிணக்குகளைத் தீர்த்துவைப்பார்.

எமது போராட்டத்தில் இணைந்த காலத்தில் இருந்து மிருணா அக்காவுக்கும் எல்லாப் போராளிகளைப் போலவே சண்டைக் களங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பு நீறுபூத்த நெருப்பாக ஆழ்மனதில் இருந்து வந்தது. 1999ஆம் ஆண்டு போர் முன்னரங்கப் பகுதிகளில் ஏற்பட்ட ஆளணிப் பற்றாக்குறை காரணமாக நிதித்துறை மகளிர் அணியைச் சேர்ந்த சில பேர் களப்பணிக்கு தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவராக மிருணா அக்காவும் தெரிவு செய்யப்பட்டார். அது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அவர் மிகவும் மகிழ்வுடனும் ஈடுபாட்டுடனும் களப்பயிற்சிகளை நிறைவுசெய்து கொண்டு நெடுங்கேணியில் போர் முன்னரங்கப் பகுதியில் சோதியா படையணியுடன் இணைந்து களப்பணிகளில் ஈடுபட்டு ஆறு மாதங்கள் மிகத் திறமையாகச் செயற்பட்டு முகாமுக்குத் திரும்பினார்.

பின்பு 2000 ஆம் ஆண்டு ஓயாத அலைகள் 4 வலிந்த தாக்குதல் நடவடிக்கைக்காக போராளிகளின் ஆளணிப் பற்றாக்குறை காரணத்தினால் எமது பிரிவில் இருந்து பல பேர் மாலதி படையணியுடன் இணைந்து களப்பணிக்குச் செல்லத் தெரிவு செய்யப்பட்டோம். அதிலும் ஒருவராக மிருணா அக்கா தெரிவு செய்யப்பட்டார்.

நாம் அனைவரும் சுண்டிக்குளம் பகுதியில் இரண்டு மாதங்கள் கடுமையான போர்ப் பயிற்சியில் ஈடுபட்டோம். அப்போது அங்கு சூட்டுப் பயிற்சியின் போது மிருணா அக்கா மிகச் சிறப்பாகச் செயற்பட்டு நல்ல மதிப்பெண்கள் (score) எடுத்து சிறந்த சூட்டாளராகத் தெரிவு செய்யப்பட்டு ஆர்.பி.ஜி (RPG) கனரக ஆயுதப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டார். அக் கனரக ஆயுதப்பயிற்சியிலும் சிறப்பாகச் செயற்பட்டு சிறந்த சூட்டாளராகத் (பரநெச) தெரிவு செய்யப்பட்டார்.

கள அனுபவம் அதிகமில்லாத வெளிநிருவாகப் பணிகளில் ஈடுபட்டு வந்த மிகவும் குள்ளமான தோற்றமுடைய ஒரு போராளி தன்னை விட அதிக எடை கூடிய ஆர்.பி.ஜி கனரக ஆயுதத்தைத் தூக்கி பயிற்சி எடுத்து மிகக் குறுகிய காலத்தில் பயிற்சியை முடித்து ஆர்.பி.ஜி கனரக ஆயுதத்தின் சிறந்த சூட்டாளராகத் தெரிவு செய்யப்பட்டமை மிருணா அக்காவின் விடாமுயற்சியையும் தன்னம்பிகையையும் எடுத்துக் காட்டியது. இந்த வாய்ப்பை மிருணா அக்கா மிகவும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார்.

பின்பு நாகர்கோவில் பகுதியில் ஒரு வலிந்த தாக்குதல் நடவடிக்கைக்காக மிருணா அக்காவின் ஆர்.பி.ஜி அணி தெரிவு செய்யப்பட்டது. ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அது மேற்கொள்ளப்படவில்லை. அது மிருணா அக்காவுக்கு மிகுந்த கவலையை அளித்தது. பின்பு அவர் எழுதுமட்டுவாள் பகுதி, பளை, முகமாலை கண்டல் பகுதி போன்ற போர்முன்னரங்க களப்பணிகளில் திறமையாகச் செயற்பட்டார்.

போர் முன்னரங்கப் பகுதிகளில் களப்பணி புரியும் போது மற்றைய போராளிகளுக்கு அவர் கலகலப்பையூட்டி உற்சாகமாக இருக்குமாறு ஒரு தாயைப்போல அக்கறையுடன் பார்த்துக் கொள்ளுவார். அங்கே தன்னுடன் இருக்கும் போராளிகளுக்கு, முதல் நாள் இரவு உணவுக்கு வரும் புட்டானது சில வேளைகளில் மேலதிகமாக எஞ்சி இருப்பதுண்டு. அதனால் அது வீணாகப் போகப்படாது என்ற எண்ணத்தில் அதை மிருணா அக்கா அடுத்த நாள் வெயிலில் காய வைத்து சற்றுத் தொலைவில் இருக்கும் இராணுவத்தினருக்குத் தெரியாதவாறு பாதுகாப்பாக பனைமர மறைவில் நெருப்பை மூட்டி, வறுத்து சீனி போட்டு, சுவையான சிற்றுண்டியாகத் தயாரித்து வெறுந் தேநீருடன் உண்ணுவதற்குக் கொடுப்பார். சிற்றுண்டிகள் அரிதாகக் கிடைக்கும் அந்தக் காலப்பகுதியில் எமக்கு அது தேவாமிர்தமாக இருக்கும். எத்தகைய இடர்மிகுந்த சூழலில் வாழநேரிலும் அதற்கு ஏற்ற மாதிரி தன்னை மாற்றிக் கொண்டு மற்றவர்களையும் உற்சாகப்படுத்திக் கொண்டு தன்னலமற்ற வாழ்வு வாழ்வது ஒரு சிறந்த போராளிக்கான பண்பாகும். அந்தப் பண்பு மிருணா அக்காவிடம் மிகுந்து காணப்பட்டது.

பின்பு கிளாலிக் கடற்கரையோரப் பகுதியில் மிருணா அக்காவின் ஆர்.பி.ஜி அணியும் வேறு சில பெண் போராளிகளும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது எமது பெண் போராளிகளின் காவலரணை நோக்கி இராணுவத்தினரின் காலாட்படை அணியொன்று யுத்த டாங்கி (tank) சகிதம் முன்னேறி வந்து கொண்டிருந்தது. அதன் போது மிருணா அக்காவும் அவரது உதவியாளரும் ஆர.பி.ஜியுடன் மூவிங் பங்கரூடாகச் சென்று தாக்கி அந்த யுத்த டாங்கியை முன்னோக்கி நகர விடாமல் தாக்கி திறமையாகச் செயற்பட்டு இராணுவத்தினருக்கு பேரிழப்பினை ஏற்படுத்தி வெற்றிகரமாக இராணுவத்தினரின் காலாட்படை அணியினை பின்னோக்கி நகரச் செய்தனர். இதன் போது ஏற்பட்ட நேரடி மோதலில் மிருணா அக்காவின் உதவியாளராக இருந்த போராளி இரண்டு கைகளிலும் பாரிய விழுப் புண்ணடைந்து மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.


இதன் பிறகு மிருணா அக்கா மட்டுமே தனியே தனது ஆர். பி.ஜியைத் திறமையாகக் கையாண்டார். பின்பு எமது பெண் போராளிகள் தமது காவலரணை முன்னோக்கி நகர்த்திச் செல்லும் போது இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் மிருணா அக்கா தனது ஆர்.பி.ஜியைத் தனியாகக் கையாண்டு மிகவும் உத்வேகத்துடனும் மனவுறுதியுடனும் போரிட்டு 05.10.2000 அன்று இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் லெப்ரினன்ட் மிருணாஃமுல்லையரசியாக ஈழ மண்ணை முத்தமிட்டு வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

“ஆயிரம் ஆயிரம் வீரர்களை விதைத்தோம் கல்லறை வரிசைகள் நீண்டனவே....அந்த வரிசையில் சுடர்கள் ஏற்றிடும் போது நெஞ்சினில் நெருப்பது மூழ்கிறதே....”

- நிலாதமிழ்-



# லெப்.கேணல் வரதா/ஆதி




*தமிழீழத்தின் முதன்மையான துறைமுகப் பட்டணங்களில் ஒன்றான வல்வெட்டித்துறை தனியானதொரு பண்பாட்டின் உறைவிடம். வல்லவர்களின் துறை வல்வெட்டித்துறை என்பது சாலவும் பொருந்தும். திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவதில் வல்லவர்கள் மட்டுமல்ல, வரலாற்றில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கப்பல் கட்டும் தொழில்நுட்பத்தில் தலை சிறந்தோரையும் கொண்டது தான் வல்வை மண். எமது ஒப்பாரும் மிக்காருமில்லாப் பெருந்தலைவன் தமிழீழத் தேசியத் தலைவர் பிறந்த ஊராகவும் இது திகழ்வதால் தமிழர் வரலாற்றில் இவ்வூர் அழியாப் புகழைப் பெறுகின்றது.*

*இத்தகைய வரலாற்றுப் பெருமைமிக்க இந்த ஊரிலே தான் திரு.திருமதி யோகராசா இணையருக்கு ஒரு அக்கா, இரண்டு அண்ணாக்களுடன் கடைசிச் செல்வப் பிள்ளையாக சந்திரகுமாரி எனும் இயற்பெயருடன் **01.11.1969** அன்று எங்கள் வரதா அக்கா வந்துதித்தார். அவர் எமது தேசியத் தலைவருக்கு நெருங்கிய உறவினர் என்ற பெருமையையும் பெரும்பேற்றையும் தமதாக்கிக் கொண்டுள்ளார். அதன் காரணத்தினால் சந்திரகுமாரி அக்காவுக்கு சிறு அகவை முதல் இயல்பாகவே மிகுந்த நெஞ்சுரமும் தலைமைத்துவப் பாங்கும் குருதியில் ஊறியே காணப்பட்டது.*

*அவரது குடும்பமானது புலால் உணவு உண்ணாத பரம்பரைச் சைவக் குடும்பம் ஆகும். அவரது தந்தையார் அரசாங்க எழுதுவினைஞராகக் கொழும்பு மாநகரத்திலே பணியாற்றி வந்தார். இதனால் சந்திரகுமாரி அக்காவும் தனது தொடக்கக் கல்வியை கொழும்பிலே கற்றார். பின்பு 1977ஆம் ஆண்டு தமிழருக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய இனப்படுகொலையின் பின்பாக அவரது குடும்பம் கொழும்பை விட்டு இடம்பெயர்ந்து மீண்டும் வல்வெட்டித்துறையில் வசித்து வந்தனர். சந்திரகுமாரி அக்காவும் தனது மிகுதிப் பாடசாலைக் கல்வியினை வல்வெட்டித்துறையிலுள்ள மிகவும் புகழ்பெற்ற பெற்ற கல்லூரியான சாரண இயக்கத்தில் முழு இலங்கைத்தீவிலும் சாதனை படைத்த யாழ். வல்வை சிதம்பராக் கல்லூரியில் தொடர்ந்தார்.*

*எம் தலைவன் பிறந்த மண்ணிலே பிறந்த காரணத்தினால் “கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்” என்ற முது மொழிக்கேற்பசந்திரகுமாரி அக்காவும்சிறு அகவைமுதல் வீரத்தில் மட்டுமல்ல கல்வியறிவிலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினார். பாடசாலையில் ஆண்டுதோறும் நடைபெறும் இல்ல மெய்வல்லுனர் போட்டிகளின் போது தட்டெறிதல், குண்டெறிதல், மரதன் ஓட்டப்போட்டி போன்றனவற்றில் பங்குபற்றி மிகச் சிறப்பாக விளையாடி தனது இல்லத்திற்கு பல பரிசுக் கேடயங்களையும் பெருமையையும் பெற்றுக் கொடுத்தார். படிப்பிலும் குறை வைக்கவில்லை.*

***1985**ஆம் ஆண்டில் அவர் க.பொ.த சாதாரணதரத்தில் கல்விகற்றுக் கொண்டிருந்த போது இடம்பெற்ற வல்வை நூலகப் படுகொலையானது அவர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் தனது கல்வியை மனந்தளராது தொடர்ந்து, க.பொ.த சாதாரணதரத்தில் தோற்றி சிறந்த பெறுபேற்றைப் பெற்று க.பொ.த உயர்தரத்தில் **1988**வது அணியில் வர்த்தகப் பிரிவைத் தேர்ந்தெடுத்து கல்வி கற்றுவந்தார்.*

*இவர் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் **1987-1988** களில் இந்திய வல்லாதிக்க இராணுவத்தினரின் கெடுபிடிகளினால் மிகவும் மனமுடைந்து காணப்பட்டிருந்தார். இந்திய இராணுவத்தின் அத்தனை கெடுபிடிகளுக்குள்ளும் தனது கல்வியைத் தொடரவேண்டுமென்றதிடமானமுடிவுடன்*

கல்வி கற்று 1988 இல் க.பொ.த உயர்தரத்தில் தோற்றி சிறந்த பெறுபேற்றைப் பெற்றும் சிறிலங்கா அரசினால் தமிழ் மாணவர்களின் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட தரப்படுத்தல் கொள்கை மூலம் ஏற்பட்ட வெட்டுப்புள்ளிச் சிக்கலால் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவர் மிகவும் மனமுடைந்து காணப்பட்டார். பின்பு 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது பெண் போராளிகளின் சுதந்திரப் பறவைகள் அமைப்பில் இணைந்து பணியாற்றி வந்தார்.

12.05.1985 இல் க.பொ.த சாதாரணதரம் படிக்கும் போது நடைபெற்ற வல்வை நூலகப் படுகொலை, சிங்கள அரசானது கல்வியில் தமிழர்களின் மேலாண்மையைத் தகர்ப்பதற்காகக் கொண்டு வந்த கல்வியில் தரப்படுத்தல் என்ற சட்டத்தினால் ஏற்பட்ட சிக்கல்கள், 02.08.1989 இல் நடைபெற்ற வல்வைப் படுகொலை போன்ற நிகழ்வுகளினால் ஏற்பட்ட தாக்கங்கள் அவரை எமது போராட்டத்தின் பால் ஈர்த்தது.

இதன்பால் 1990 இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த காலப்பகுதியில் சந்திரகுமாரி அக்காவும் "அடுப்பங்கரைகளிலும், சினிமா கொட்டகைகளிலும் சிந்தைகளைப் பறி கொடுத்து தூங்கிக் கிடந்திடாமல் அலங்கார ஆடைகளையும் அழகு ஆபரணங்களையும் அணிந்து திரிந்து போலித்தனமான புளகாங்கிதம் அடையாமல் புரட்சிகரக் கருத்துக்களை உறுதியாகப் பற்றி போர்க் குணம் கொண்ட மறத்தியாய் களம் புகுந்து "எமது அறப்போரின் மூலம் அடக்குமுறைகளிலிருந்து விடுதலை பெறலாம்" என்றும் "நாட்டின் விடுதலைப் போராட்டம் என்பது நாயகன் கடமை மட்டுமல்ல நமது கடமையுமாகும்" என்பதனையும் உணர்ந்து எழுச்சிகொண்டு மகத்துவம் மிக்க எம் பெருந் தலைவன் அணியில் இணைந்து மகளிர் பயிற்சிப் பாசறையில் 11வது அணியில் அடிப்படைப் பயிற்சியை நிறைவுசெய்து கொண்டு வரதா எனும் பெயர் கொண்டு வரிப்புலியாகினார்.

பின்னர் அவர்களது பயிற்சி முகாமிலேயிருந்து 150 போராளிகளைத் தேர்ந்தெடுத்து எந்த ஆபத்தான போர்ச்சூழலையும் எதிர் கொண்டு நிற்கவல்ல துணிவாற்றலுள்ள போராளிகளாக மாற்றும் மிகத் திறமையான கடுமையான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு பலாலிப் பகுதி, யாழ்.கோட்டைப் பகுதி போன்ற இடங்களில் போர் முன்னரங்கப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். அதில் வரதா அக்காவும் 7 பேர் கொண்ட அணி ஒன்றிற்கு அணித் தலைவியாக சிறிது காலம் யாழ்.கோட்டைப் பகுதிக்கு அனுப்பப்பட்டார். பின்பு பலாலிப் பெருந்தளத்தின் போர் முன்னரங்கப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த பெண் போராளிகளின் போர் அணிகளுடன் இணைந்து சிறிலங்கா இராணுவத்தின் மினி முகாம்கள் மீது துணிகரத் தாக்குதல்களை நடாத்திச் சாதனைகள் படைத்தார். மேலும், அவர் சைவ உணவு உண்ணுபவராக இருந்ததால் தனக்குரிய சைவ உணவு கிடைக்காத பட்சத்திலும் தான் பசியிருந்தபடி பலாலிப் போர் முனையில் நிற்கும் தனது அணியின் சக போராளிகளுக்கு ஒரு அணித் தலைவி எனும் பொறுப்புடன் ஒரு தாயாக நேரம் தவறாது பெரும் சிரமங்களுக்கு நடுவிலும் சிறிலங்கா இராணுவத்தினரின் பதுங்கித் தாக்குதல்களினை மிகத் திறமையாக எதிர்கொண்டு உணவுப் பொட்டலங்களை எடுத்துச் செல்லும் பெரும் பணிபுரிந்தார்.

எமது அமைப்பின் பெண் போராளிகளின் படையணிகள் வளர்ச்சி பெற்று விரிவாக்கம் கண்டதுடன் விடுதலைப் போரிலும் முதன்மையான பங்காற்றியமை 10.07.1991 இல் தொடங்கிய ஆகாய கடல் வெளிச்சமரின் போது இனங்காணக் கூடியதாக இருந்தது. இப் பெருஞ் சமரில் பெண் போராளிகளைக் கொண்ட பல படைப் பிரிவுகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு துணிவாற்றலுடன் வீர சாதனைகள் படைத்தன. இச் சமரில் வரதா அக்காவும் 7 பேர் கொண்ட அணிக்கு அணித்தலைவியாகப் பொறுப்பேற்றுச் சென்று நெஞ்சுறுதியுடனும் ஓர்மத்துடனும் சமரிட்டு வீர சாதனை படைத்தார்.

இதன் மூலம் பன்னாட்டு இராணுவ-அரசியல் திறனாய்வாளர்களிடத்தில் ஒருமித்த கருத்து ஒன்று உருவானது. அதாவது புலிகள் ஒரு முழு அளவிலான மரபுவழி இராணுவத்தைப் போன்று செயற்பட்டிருக்கின்றார்கள் என்றும் இந்தச் சமரை நோக்கும்போது இலங்கைத்தீவில் இரண்டு இராணுவங்கள் உள்ளது போல் தோன்றுகின்றது என்பதும் ஆகும். இந்தக் கருத்தானது எமது புரட்சிகர இயக்கத்துக்கு கிடைத்த ஒரு பெரும் வெற்றியே.

ஆனையிறவுச் சமரில் பெண் போராளிகள் முதன்மையான பங்குவகித்ததைத் தொடர்ந்து சிறிலங்கா

இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட “மின்னல் இராணுவ நடவடிக்கை” என்ற பெயரால் தமிழீழத்தின் “இதயபூமி” என்றழைக்கப்படும் மணலாற்றினை வன்கவரும் நோக்கோடு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக நடத்தப்பட்ட தற்காப்புச் சமரிலும் லெப்.கேணல் அன்பு அண்ணா தலைமையில் பெண் போராளிகள் பங்கு கொண்டனர். சிறிலங்கா இராணுவத்தின் இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் வட தமிழீழத்தையும் தென் தமிழீழத்தையும் இரண்டாகப் பிரிப்பதும் எம்மை பலவீனப்படுத்தி அதன் மூலம் யாழ் மாவட்டத்தைக் கைப்பற்றுவதாகும். பெண் போராளிகளுக்கு இம் முறியடிப்புச் சமரானது புதுமையான காடுகளில் எதிர்கொள்ளும் போர் அனுபவமாக இருந்தது. ஏனெனில் காடுகளில் எதிர்கொள்ளும் போர்களில் அவர்கள் அதுவரை பங்கு பெறவில்லை. அக்காட்டைப் பொறுத்தவரை திக்குத் திசை தெரியாது கதிரவன் எங்கே உதிப்பான் எங்கே மறைவான் எனத் தெரியாது சிறிலங்காவின் படையினர் எங்கிருந்து வருவார்கள் எனத் தெரியாது காயமடைந்த, வீரச்சாவடைந்த போராளிகளைப் பின் தளத்திற்கு நகர்த்துவதற்குப் பாதைகள் இல்லை இதைவிட இராணுவம் ஏவிய எறிகணைகள் மரங்களில் வீழ்ந்து வெடிப்பதால் அதிக இழப்புக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இருந்தாலும் இக்களமுனையின் முதன்மையை உணர்ந்து போராளிகள் வரைபடங்களின் உதவிகளுடனும் இராணுவத்தின் நகர்வுகளை தொலைத்தொடர்புக் கருவியூடாக (monitoring) ஒட்டுக் கேட்டும் இத் தாக்குதலின் விநியோக நடவடிக்கையை தடையற மேற்கொண்டும் மற்றும் விழுப்புண்ணடைந்த, வீரச்சாவடைந்தவர்களை பின் நகர்த்தியவாறும் கடுமையாக நெஞ்சுறுதியுடன் போரிட்டனர். இச் சமரில் வரதா அக்காவும் ஒரு அணிக்கு தலைவியாகப் பொறுப்பேற்று மிகுந்த ஒர்மத்துடனும் உத்வேகத்துடனும் துணிவாற்றலுடனும் போர்க்களமாடி, பின்பு இடது கையில் பாரிய விழுப்புண்ணடைந்து மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு பின் நகர்த்தப்பட்டார். ஆனையிறவுப் போரின் பின் வெடிபொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவிய காலப்பகுதியிலும் இப் பாரிய முன்னேற்ற நடவடிக்கையை முறியடித்தமை எமக்கு பெரும் வெற்றியே!

பின்னர் வரதா அக்கா இடது கையில் ஏற்பட்ட பாரிய விழுப்புண்ணின் காரணத்தினால் அக்கையானது சரிவர இயங்க முடியாமல் இருந்த படியால் **1991** இலிருந்து **1993** ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதி வரை நீண்டகாலம் மருத்துவ சிகிச்சையிலே இருந்தார். பின்னர் நிதித்துறை மகளிர் பிரிவுக்கு தகுதி வாய்ந்த ஒருவர் பொறுப்பாளராக பதவி வகிக்க தேவை என்றபடியால், வரதா அக்காவின் தலைமையேற்று நடாத்தும் பாங்கு, பொறுமை, சகிப்புத்தன்மை, கல்வித்தகுதி போன்றன இனங்காணப்பட்டு **1993**இல் நிதித்துறை மகளிர் பிரிவுக்கு பொறுப்பாளராக உள்வாங்கப்பட்டார். எமது நிதித்துறை மகளிர் பிரிவிலே ஆரம்பத்திலே கணக்காய்வுப் பகுதி, ஆயப்பகுதி போன்ற பகுதிகள் மட்டுமே இருந்தன. வரதா அக்கா கணக்காய்வுப் பகுதியைப் பொறுப்பேற்று நிருவகித்தார். ஆயப்பகுதியை லெப்ரினன்ட் சாந்தா அக்கா பொறுப்பேற்று நிருவகித்தார். பின்பு லெப்ரினன்ட் சாந்தா அக்கா களப்பணிக்கு சென்றதும் வரதா அக்காவே ஆயப்பகுதியையும் சேர்த்து திறம்பட நிருவகித்தார்.

பின்பு எமது நிதித்துறை மகளிர் பிரிவானது கணக்காய்வுப்பகுதி, தையல் பகுதி, உணவு வழங்கல் பகுதி, நகைத் தொழிலகம், ஓட்டுனர் பயிற்சிக் கல்லூரி எனப் படிப்படியாக விரிவாக்கம் கண்டது. அவர் **1993** தொடக்கம் **2001** கடற்கரும்புலிகள் அணிக்குச் செல்லும் வரை அவையனைத்தினதும் நிருவாகப் பணியினையும் திறமையாக மேற்கொண்டதுடன் அத்தகைய நிருவாகப் பளுவுக்குள்ளும் யாழ்ப்பாணத்தில் நகைவாணிபம், சேரன் களஞ்சியங்கள், கலியுகவரதன் உதிரிகள் வாணிபம், எழிலகம் புடவை வாணிபம் போன்றவற்றிலும், **1996** இற்குப் பின்னர் வன்னியில் இளவேனில் எரிபொருள் வாணிபம், கலியுகவரதன் உதிரிகள் வாணிபம் போன்றனவற்றிலும் கணக்காய்வுப் பணியைத் திறம்பட மேற்கொண்டார். மேலும் தனது போராளிகளை துறைசார் வல்லுனர்களாக உருவாக்க வேண்டும் என்ற கொள்கையில் **1994** இல் யாழ் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் தானும் கற்கைநெறியை மேற்கொண்டு ஏனைய போராளிகளையும் அக்கற்கைநெறியினை மேற்கொள்ள வழிகாட்டினார். அத்துடன் எமது கணக்காய்வுப் பகுதி பெண் போராளிகளுக்குத் தேவையான மேலதிக வகுப்புக்களுக்காக, யாழில் புகழ்பெற்ற வர்த்தகம், கணக்கியல், ஆங்கிலம் தொடர்பான ஆசிரியர்கள், விரிவுரையாளர்களை

வகுப்பெடுப்பதற்கு ஒழுங்குபடுத்திக் கொடுத்ததுடன் தானும் அவர்களுடன் இணைந்து அக்கற்கைநெறியினை மேற்கொண்டு தனது துறைசார் அறிவாற்றலையும் வளர்த்துக் கொண்டார்.

எனக்கும் வரதா அக்காவுக்குமான உறவானது 1995 மார்கழி மாதத்திலிருந்து தான் (நாங்கள் அடிப்படைப் பயிற்சி முடித்து நிதித்துறை கணக்காய்வுப் பகுதிக்கு வந்ததிலிருந்து) ஆரம்பித்தது. நான் அகவை 17 ஆக இருந்தபோது, எமது குடும்ப உறவுகளைப் பிரிந்து முற்றிலும் வேறுபட்ட போராட்ட வாழ்க்கையினில் காலடியெடுத்து வைத்து புரட்சிகரவாழ்வை ஆரம்பித்த போது வரதா அக்கா தான் எங்களை ஒரு தாயைப் போன்ற பரிவுடனும் அன்புடனும் அரவணைத்தார். எமக்குத் தாயில்லாக் குறையை அவரே ஈடுசெய்தார். அவருக்கு கோபம் என்பது வந்து நான் ஒருபோதும் கண்டதில்லை. அப்படி கோபம் வந்தாலும் அதனை அடக்கி ஒரு சிறிய சிரிப்புடன் சமாளித்துவிட்டுச் செல்லுவார். அவரிடம் எப்போதும் ஒரு அன்புடன் கலந்த கண்டிப்பும் ஆளுமையும் காணப்படும். அவர் எப்போதும் எங்களை தான் ஒரு பொறுப்பாளர் என்ற பாங்கில் அதிகாரம் செய்து கட்டளையிட்டதும் இல்லை. நாமும் ஒரு போதும் அவரது கட்டளையை மீறியதும் இல்லை. எப்பொழுதும் நாம் செய்யும் சிறு சிறு குறும்புகள், குழப்படிகளை ஒரு தாயைப் போன்ற உணர்வுடன் பார்த்து மகிழ்வார் அதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு நிகழ்வைக் கூறுகின்றேன்.

எங்கள் முகாமில் ஒரே அகவையுடைய, அதுவும் மற்றைய போராளிகளை விட அகவையில் குறைந்த ஏழெட்டுப் பேர் இருந்தோம். அதனால் நாங்கள் அந்த அகவைக்குரிய குறும்புகள், குழப்படிகளுடனேயே எப்போதும் காணப்படுவோம். ஒரு நாள் இரவு நேரத்தில் எமது பணி முடித்து முகாம் திரும்பி இரவு உணவினை உட்கொண்டு விட்டு ஒரு அறையில் எல்லோரும் சேர்ந்திருந்த மகிழ்வில் ஆடல், பாடல் என அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தோம். மற்றைய அறையில் சில அகவையில் கூடிய போராளிகள் தமது வாணிபங்களின் ஆவணங்களை முகாமில் கொண்டுவந்து வைத்திருந்து பொறுப்பாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எங்களின் சத்தமானது இடைஞ்சலுடன் கூடிய தொந்தரவாக இருந்ததின் காரணத்தினால் எங்களை அமைதியாக இருக்கச் சொல்லுமாறு வரதா அக்காவிடம் சென்று முறையிட்டார்கள்.

இதனால் வரதா அக்கா எங்களது மகிழ்ச்சியையும் கலைக்க விரும்பாமல் பணிபுரிபவர்களையும் சமாளிக்க வேண்டும் என நினைத்து, முதலாம் கட்டமாக ஒரு போராளியை எச்சரிக்கை செய்ய அனுப்புவார். ஆனால் வந்தவரும் எங்களுடன் சேர்ந்து அந்த அமர்க்களத்தில் ஈடுபடுவார். பின்பு மற்றுமொருவரையும் அனுப்பி அவரும் முதல் அனுப்பியவரை ஒப்பி எங்களுடன் சேர்ந்து அமர்க்களத்தில் ஈடுபட்டதும் இறுதி எச்சரிக்கையாக தானே வரதா அக்கா களத்தில் குதிப்பார். எங்களுடைய மகிழ்ச்சியை உடனேயே தடை செய்யவும் விரும்பாமல் கொஞ்ச நேரமாவது நீடிக்கட்டும் என்று இடைவெளி விட்டு பணிபுரியும் மற்றைய போராளிகளின் மனதையும் நோகடிக்காமல் தானே எங்களிடம் வந்து திட்டுவது மாதிரி பாசாங்குசெய்து (வாய் மட்டும் தான் எங்களைப் பேசும் அதேவேளை அவரது மூக்கும் கண்ணும் சிரிக்கும்). அதிக தண்டனையாக வாய்க்கு துணி கட்டும் தண்டனையை மட்டும் தான் தருவார். நாங்கள் அந்தத் துண்டை (துவாய்) வாயில் கட்டிக் கொண்டும் எங்கள் அமர்க்களத்தைத் தொடருவோம்.

வரதா அக்கா தான் பொறுப்பாளர் என்ற சலுகையை ஒரு போதும் எடுத்துக் கொண்டது இல்லை. தன்னைப் போலவே தான் மற்றப் போராளிகள் என்று நினைப்பார். அவர் சைவ உணவு மட்டுமே சாப்பிடுபவராக இருந்ததால் எமக்கு உணவு வழங்கல் பகுதியினால் வரும் உணவில் மரக்கறி உணவினை சிலவேளைகளில் அவர் பணி முடிந்துவரத் தாமதமானால் உணவு முடிந்துவிடும் என்ற காரணத்தினால் ஒரு போராளி எடுத்து ஒளித்து வைப்பதுண்டு. ஆனால் வரதா அக்கா, இப்படித் தனக்கெனத் தனியாக உணவு எடுத்து வைப்பதை ஒருபோதும் விரும்புவதில்லை. நாமும் சில வேளைகளில் பணி முடித்து வரத் தாமதமானால் கறி தீர்ந்து விடும். அதனால் நாங்கள் பசியில் அவரிற்காக எடுத்து ஒளித்து வைத்திருக்கப்படும் கறியினை எப்படியோ தேடிக் கண்டுபிடித்து எடுத்து உண்டு விடுவோம். அதனைக் கண்டதும் வரதா அக்காவுக்கு கறி எடுத்து ஒளித்து வைத்த போராளி எங்களைத் திட்டுவார். ஆனால் வரதா அக்கா "பிள்ளைகளுக்கில்லாத உணவு எனக்கெதுக்கு... அவர்கள் சாப்பிடட்டும்...அவர்களைத் திட்டாதே" என அந்தப் போராளிக்கு கூறிவிட்டு சோற்றுடன் கறிக்குப் பதிலாக பச்சை மிளகாய், வெங்காயத்துடன் தனது உணவினை முடித்துக் கொள்ளுவார்.

எல்லாப் போராளிகளையும் போலவே வரதா அக்காவும்

மக்களை நேசித்த போராளி. எமது வாணிபங்களில் காலாண்டு, அரையாண்டு, ஆண்டிறுதி காலப்பகுதிகளில் இருப்பெடுத்தல் நடவடிக்கைகள் நடைபெறுவதுண்டு. இதனால் பணிமுடிய இரவு நேரமாகி விடும். ஆதலினால் அங்கு பணிபுரியும் பெண் பணியாளர்களை அவரே தனது உந்துருளியில் ஏற்றிச் சென்று அவர்களது வீட்டில் பாதுகாப்பாக இறக்கிவிட்டு வருவார். அதனால் பணியாளர்களின் பெற்றோர்களும் அவர் மேல் தீராத அன்பும் நன்மதிப்பும் வைத்திருந்தார்கள்.

மேலும் ஒருமுறை வரதா அக்கா இரவு நேரத்தில் பணிமுடித்து ஒரு போராளியுடன் உந்துருளியில் பணியிடத்தில் சைவ உணவு கிடைக்காத படியால் மதிய உணவையும் உண்ணாத காரணத்தினால் மிகுந்த பசியுடன் முகாம் நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருக்கு முன்னால் ஒரு உந்துருளியில் ஒருவர் தனது நிறைமாதக் கர்ப்பிணி மனைவியை ஏற்றிக் கொண்டு உந்துருளியின் முகப்பு விளக்கு பழுதடைந்த காரணத்தினால் இருட்டில் தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருந்தார். இதனை அவதானித்த வரதா அக்கா அவர்களிடம் முகவரியைக் கேட்டு அவர்களது வீடு எமது முகாமிலிருந்து சிறிது தொலைவில் தான் உள்ளது என்பதை அறிந்து அவரைப் பின் தொடர்ந்து சென்று அவருக்கு தனது உந்துருளி முகப்பு விளக்கின் மூலம் வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி தனது கடும் பசியையும் மறந்து அவர்களது வீடு வரைக்கும் கொண்டு சென்று பாதுகாப்பாக விட்டுத்தான் வந்தார். அந்தளவுக்கு மக்களை நேசித்த போராளி அவர். இந்நிகழ்வை அவருடன் வந்த போராளி எமக்கு போட்டுக் கொடுத்து அன்று தொடக்கம் நாங்கள் வரதா அக்காவைக் கண்டால் “குமார் குமார் லைற் அடி…கோழிக் கூட்டுக்கு லைற் அடி” என்ற பாடலைப் பாடி கிண்டலடிப்போம். அவரும் “வாறனடி உங்களுக்கு” என்று செல்லமாக கோபித்தபடி, எங்களது கிண்டலை இ ரசித்தபடி செல்லுவார்.

எமது பிரிவிலிருந்து களப் பணிகளுக்குப் போய் ஒவ்வொரு போராளியும் வீரச்சாவடையும் போதும் “கன்றை இழந்த தாய்ப் பசுவின் வலிக்கொப்பான” துன்பமடைவார். எமது பிரிவிலிருந்து வீரச்சாவடைந்த எல்லா மாவீரர் குடும்பங்களின் இல்லங்களிற்கு தானும் செல்வதோடு மட்டுமல்லாது எங்கள் எல்லோரையும் கட்டாயம் செல்லுமாறு கூறி அவர்களுக்கு தேவையான உதவிகள் அனைத்தையும் தானே முன்னின்று செய்து எங்களையும் செய்விக்க வைப்பார். காலையில் எழுந்து உறுதிமொழி கூறி முடித்துக் கொண்டதும் எங்கள் எல்லோரையும் ஓட்டப் பயிற்சிக்கு அனுப்பிவிட்டு முகாமில் உள்ள மாவீரர் மண்டபத்திலுள்ள மாவீரர் படங்களுக்கு தனது கையாலே பூக்கொய்து வைத்து இறைவழிபாடு போல வணக்கம் செலுத்தி விட்டுத் தான் தனது அன்றைய பணியை ஆரம்பிப்பார்.

அத்துடன் மற்றைய புதிய போராளிகளுக்கு மிகவும் அன்பாகவும் ஆர்வத்துடனும் மிகத் தெளிவாக புரியக்கூடிய வகையிலும் கணக்காய்வுப் பணியைக் கற்றுக் கொடுப்பதிலும் வல்லவர். நானும் **1997** இல் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி விட்டு வரதா அக்காவுடன் தான் முதன் முதலில் கலியுகவரதன் உதிரிகள் வாணிபம், இளவேனில் எரிபொருள் வாணிபம் போன்றவற்றில் பணிக்குச் செல்லும் பேற்றைப் பெற்றேன். அங்கு அவர் எனக்கு கணக்காய்வுப் பணியினையும் பணியாளர்களுடன் அணுகும் முறையினையும் மிகவும் அன்புடனும் ஆர்வத்துடனும் தெளிவாகவும் கற்றுக் கொடுத்தார். அவருடன் பணிபுரிந்த ஒரு ஆண்டிலேயே வாணிபங்களின் இலாப நட்ட முடிவுக் கணக்குகளை நான் தனியே தயாரித்து முடித்துக் கொடுக்கும் அளவிற்கு என்னை ஆற்றலுடன் வளர்த்து விட்டிருந்தார். அன்று அவர் ஊட்டிய ஊக்குவிப்பும் அறிவும் ஆளுமையும் தான் பின் நாளில் நானும் ஒரு கணக்காய்வு அணியின் அணிப் பொறுப்பாளராக உருவாகுவதற்கு அடித்தளமாக இருந்தது. இப்படி போராளிகளை துறைசார்ந்து வளர்த்து விடுவதில் வல்லவர் அவர்.

எமது போராட்டத்தில் இணைந்த காலந்தொட்டு வரதா அக்காவுக்கு கரும்புலிகள் அணியில் இணைய வேண்டும் என்ற கனவு இருந்து கொண்டேயிருந்தது. எமது தேசியத் தலைவருக்கு ஐந்தாறு தடவைகள் கடிதம் அனுப்பி அனுமதி மறுக்கப்பட்டு வந்தும் மனம் சோராமல் திரும்பத் திரும்ப தன்னைக் கரும்புலிகள் அணியினுள் உள்வாங்குமாறு கடிதம் அனுப்பிக் கொண்டேயிருந்தார். அவரது விடாமுயற்சியினாலும் தான் கரும்புலிகள் அணியில் இணைய வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்ததாலும் **2001** ஆம் ஆண்டு ஆரம்ப காலப் பகுதியில் அவரை கடற்கரும்புலிகள் அணியில் உள்வாங்குவதற்கு அனுமதிக் கடிதம் தேசியத் தலைவரிடமிருந்து வந்தது. வரதா அக்காவுக்கோ தனது விருப்பு நிறைவேறி விட்டதையிட்டு மிகப் பெரிய மகிழ்வு. ஆனால், எமக்கோ தாயைப் போல

பரிவு காட்டிய எங்கள் வரதா அக்காவைப் பிரியப் போகிறோம் என்கிற கவலை. ஆனால் போராளிகள் என்றால் பிரிவும் மறைவும் தவிர்க்க முடியாதது தானே! நாம் அதனை வலிந்து ஏற்றுக்கொண்டு எமது ஆற்றொணாத் துன்பத்தை மனதில் அடக்கிக்கொண்டு வரதா அக்காவிற்கு விடை கொடுத்தோம்.

பின்பு கடற்கரும்புலிகள் அணியில் இணைந்து கடல் நீச்சற் பயிற்சி, கடல் கனரக ஆயுதப் (heavy weapon) பயிற்சி போன்ற அனைத்துப் பயிற்சிகளினையும் தனது சரிவர இயங்க முடியாத இடது கையுடன் தன்னை விட அகவை குறைந்த இளம் போராளிகளுக்குச் சமமாக ஈடுகொடுத்து உத்வேகத்துடனும் அர்ப்பணிப்புடனும் துணிவாற்றலுடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் நிறைவு செய்து கொண்டு தனது இலக்கிற்காக காத்துக் கொண்டிருந்தார். அத்துடன் (ரேடார் சுயுனுயுசு) மின் காந்த அலைக் கருவியூடாகக் கடற்படைக்கலங்களின் நகர்வினை அவதானித்து கட்டளையிடும் அதிகாரியாகவும் பணியாற்றினார்.

*2001* இல் எமது போராட்டமானது பரிணாம வளர்ச்சியடைந்து நாம் யாழ் குடா நாட்டைக் கைப்பற்றும் அளவுக்கு பலமாக இருந்தோம். சிறிலங்கா இராணுவமானது பலவீனமடைந்து காணப்பட்டது. இதன் காரணத்தினால் யாழ் குடாநாட்டையும் மொத்த தமிழீழத்தையும் நாம் மீட்டெடுத்து விடுவோம் என்று அச்சமடைந்து அப்போதைய சிறிலங்காப் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க குள்ள நரி மூளையுடன் நோர்வே அரசின் தலையீட்டுடன் *22.02.2002* இல் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் எம்முடன் இணைந்து கையெழுத்திட்டார். இதனால் அரசியல் தெளிவில்லாதோர் சிலர் சிறிலங்கா அரசின் கபடத் தனத்தை உணராமல் தமக்குத் தீர்வு கிடைத்து விட்டது என மகிழ்ச்சியில் திகழ்ந்தார்கள்.

*2004* காலப் பகுதியில் வரதா அக்காவும் திருமண வயதைக் கடந்துவிட்ட காரணத்தினால் அவரின் தந்தையாரின் வேண்டுகோளிற்கிணங்க தேசியத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் கட்டளைத் தளபதி ஒருவரை இணையேற்றார். திருமணம் ஆகிவிட்டாலும் அவர் கடற்புலிகள் மகளிர் அணியிலேயே தனது பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்திருந்தார்.

*2006* இல் மீண்டும் மூண்ட நாலாம் கட்ட ஈழப்போரின் காரணத்தினால் A9 பாதை மூடப்பட்டு மீண்டும் போர் மேகங்கள் சூழ்ந்தன. இதன் காரணத்தினால் எமது போராட்ட மரபுப்படி "துணைவனும் துணைவியும் நடைமுறை வாழ்விலும் நாட்டை மீட்கும் மகத்துவமான விடுதலைப் போரிலும் சம பங்கு கொண்டு புறப்பட வேண்டிய வேளை இது தான் புறப்படுவோம்"என்று வரதா அக்காவும் அவரது துணைவரும் தத்தமது படையணிகளுடன் இணைந்து தமது பணியினை செவ்வனே மேற்கொண்டனர். அந்த வகையில் வரதா அக்காவும் கடற்புலிகள் மகளிர் படையணியுடன் இணைந்து (ரேடார் Radar) மின் காந்த அலைக் கருவியூடாக அவதானிக்கும் தொலை நோக்கி கண்காணிப்பு பிரிவில் கட்டளையிடும் அதிகாரியாக திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டார். *30.10.2006* இல் மட்டக்களப்பில் இருந்து வன்னி நோக்கி காட்டு வழியாக நகர்ந்து வந்து கொண்டிருந்த போது எங்கள் வரதா அக்கா மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் அரவம் தீண்டி எம்மையெல்லாம் மீளாத் துன்பத்தில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்டுவிட்டார்.

-நிலாதமிழ்-



# மேஜர் சேரலாதன்



வன்னி கிழக்கு விசுவமடுப் பகுதியிலே பூக்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை மற்றும் மாக்கள் கனிந்து கொட்டும் மாஞ்சோலையுடன் கூடிய அழகிய தென்னஞ்சோலையும் இதமாக தெம்மாங்கு பாட அன்புடன் புன்னகைக்கும் கணக்காய்வுப் பகுதி ஆண் போராளிச் சகோதரர்களுடன் நடுநாயகமாக கம்பீரமாக வீற்றிருக்கும் எமது விசுவமடு "அன்பகம்" எனும் கணக்காய்வுப்பகுதி நடுவப் பணியகம். அங்கே அன்பு எனும் வானிலே ஒளிரும் துருவ நட்சத்திரமாக எங்கள் சேரலாதன் அண்ணாவைக் காணலாம். கனிவு மற்றும் பண்பு கலந்த ஒரு நிமிர்வான ஆளுமையுடன் கூடிய பொறுமையான ஒரு போராளியாக அவர் காணப்பட்டார். அந்த முகாமின் ஒழுங்கான நிருவாக நடவடிக்கைகளுக்கும், தூய்மைக்கும், அழகுக்கும் அவரே காரணம். அங்கு பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையின் அழகில் அவரின் கைவண்ணம் தெரியும்.

அம்முகாம் போராளிகளுக்கு கேட்டவற்றைஃ தேவையானவற்றை உடனே வழங்கும் "அட்சய பாத்திரமாக" ஒரு தாய் போல அவர் செயற்பட்டார். அம்முகாமுக்கு பணி நிமித்தம் வரும் ஆண், பெண் போராளிகள் யாராக இருந்தாலும் ஒருபோதும் பசியுடன் திரும்பிச் செல்லக் கூடாது என்ற கொள்கையுடையவர். அவர்களை இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பி உணவு, தேநீர் போன்றனவற்றை வழங்கி அவர்கள் அகமலர்ந்து செல்வதனைக் கண்டு தானும் அகம் மலர்வார். பொதுவாகவே எமது போராளிகளுக்கு மட்டுமேயுரிய தனிப்பட்ட சிறப்பு ஒன்று உண்டு. தனது துணைவன்ஃ துணைவியைத் தவிர மற்றைய போராளிகளைச் சகோதரர்களாக கருதும் கொள்கையே அதுவாகும். அது ஒப்பாரும் மிக்காருமில்லா எமது பெருந்தலைவனின் சீரான வளர்ப்பு என்பதனை நான் என்றும் நிமிர்வுடன் சொல்லுவேன். அந்தவகையில் சேரலாதன் அண்ணாவும் சக பெண் போராளிகளை தனது சொந்த சகோதரிகள் போலவே கருதுவார். ஆதலால் நாம் தூர இடத்திலிருந்து களைத்து விழுந்து அன்பகம் முகாமுக்கு பணி நிமித்தமாக ஆவணக் கோப்புகளை ஒப்படைப்பதற்கு செல்லும் போது எப்போதும் உரிமையுடன் அவரிடம் உணவு, தேநீர் போன்றவற்றை கேட்டுப் பெறுவோம். அவரும் எங்களைக் கண்டதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தனது முகாமைச் சேர்ந்த மற்றைய போராளிகளை "பிள்ளைகளுக்கு சாப்பாட்டைக் குடுங்கோடா...தேநீரைக் குடுங்கோடா" என்று விரட்டியடிப்பார். அப்படியொரு சகோதரத்துவமான தனித்துவம் மிக்க போராளி அவர். இதன் காரணத்தினால் அவரது முகாம் போராளிகள் அவரை "மகளிர் வெளி விவகார அமைச்சர்" என்று பட்டப் பெயரை வைத்து அழைப்பார்கள். அவரும் அதனை ஏற்று கோபிக்காமல் "உங்களுக்கு ஆகலும் நக்கல் கூடிப் போச்சு" என்று கூறி சிரித்தவாறு செல்லுவார்.

சேரலாதன் அண்ணா பிறந்து வளர்ந்தது எல்லாம் கடல் வளமும் இயற்கையின் செழிப்பும் கொண்ட யாழ்மாவட்டத்திலே உள்ள காரைநகர் எனும் மண்ணில் தான். திரு.திருமதி மகாலிங்கம் தம்பதியினருக்கு மூன்று அண்ணன்மார், இரண்டு அக்காமார், ஒரு தங்கையுடன் ஆறாவது செல்வப் புதல்வனாக 16.05.1973 இல் துரைசிங்கம் எனும் இயற்பெயருடன் அவதரித்தார். அவரை வீட்டில் சிவபாதம் என்றும் செல்லமாக அழைத்தார்கள். துரைசிங்கம் தனது குடும்பத்தின் மீது சிறு வயது முதல் மிகுந்த பாச உணர்வும் பொறுப்புணர்வும் கொண்டவராக மிளிர்ந்தார். அத்துடன் சட்டென எதனையும் புரிந்துகொள்ளும் நுண்ணறிவு கொண்ட கற்பூர புத்தி கொண்டவராக விளங்கினார். 1989இல் க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றி மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றும் தன் குடும்பத்தை ஆழமாக நேசித்த அவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணத்தினால் உயர்தரக் கல்வியைத் தொடராமல் அரசுசாரா வெளிநாட்டு நிறுவனம் (பேபுழு) ஒன்றில் பணிக்கமர்ந்தார். அவருக்கு இயற்கையாக காணப்பட்ட ஆங்கில மொழிப் புலமை அவருக்கு அப்பணியில் பெரிதும் உதவியது.

தனது குடும்பத்தில் அளவு கடந்த அன்புகொண்ட

துரைசிங்கம் அமைதியாக இருந்தாலும் அவருள் விடுதலை எனும் தீ கொழுந்து விட்டு எரிந்தது. சொந்த நிலம் இழக்கப்பட்டு அடிமை நிலையில் தாழ்ந்து கிடக்கின்ற தமிழினத்துக்காக வீரத்துடன் போராடி விடுதலை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று உணர்வுகொண்டெழுந்து தன்னுடன் ஒட்டிக் கொண்டிருந்த குடும்பம் தொடர்பான அனைத்து சுமைகளையும் இறக்கிவைத்து விட்டு **1993** ஐப்பசி மாதத்தில் எமது போராட்டத்தில் இணைந்து இருபாலையில் உள்ள டொச்சன் **2** பயிற்சி முகாமில் சேரலாதன் எனும் பெயருடன் அடிப்படைப் பயிற்சியினை மேற்கொண்டார்.

பூநகரியில் சிறிலங்கா இராணுவத்தின் மிகப்பெரிய கூட்டுப் படைத்தளமும் நாகதேவன்துறையை மையமாக வைத்து ஒரு கடற்படைத் தளமும் இருந்தது. கிளாலிக் கடனீரேரியில் நடந்த அத்தனை படுகொலைகளுக்கும் நாகதேவன்துறைக் கடற்படைத் தளமே காரணமாக இருந்தது. இதனால் **10.11.1993** இப்பெரிய கூட்டுப்படைத்தளம் மீது எமது அமைப்பு தாக்குதல் நடத்த திட்டமிட்டது. நீர் வழியிலும் நிலவழியிலும் தொடுக்கப்பட்ட போர் என்பதால் இந்நடவடிக்கைக்கு “தவளைப் பாய்ச்சல்” என்று பெயர் சூட்டப்பட்டது. இச்சமரில் ஏராளமான ஆயுத தளபாடங்களும் ஒரு யுத்த டாங்கியும் கைப்பற்றப்பட்டு இன்னொரு டாங்கி முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் நாகதேவன்துறை கடற்படைத்தளத்தில் இருந்த ஐந்து நீரூந்து விசைப்படகுகளும் கடற்புலிகளினால் வெற்றிகரமாக கைப்பற்றப்பட்டன.

இச் சமரின் போது ஏற்பட்ட ஆளணிப் பற்றாக்குறையின் காரணத்தினால் அடிப்படைப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே சேரலாதன் அண்ணாவும் காவும் குழுவில் ஒருவராகத் திறமையாகச் செயற்பட்டார். அப்போது, காயப்பட்ட போராளிகளை மிகவும் விரைவாக மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற உத்வேகத்திலும் தனது தாமதத்தினால் ஒரு போராளியின் உயிரை இழக்கக் கூடாது என்ற எண்ணத்திலும் விரைவாக பணியினை மேற்கொண்டிருந்தபோது அவரது கவனம் பிசகி ஒரு கால் பிரண்டு விட்டது. இதனால் அவர் சிறிது காலம் மருத்துவ சிகிச்சையிலிருந்து பின்னர் **1994** தை மாதத்தில் ஆரம்பமான டொச்சன் **3** பயிற்சி முகாமில் தனது அடிப்படைப் பயிற்சியை நிறைவுசெய்து கொண்டு முழு நேரப் போராளியாகினார். பின்னர் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணிக்கு சிறப்புப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டார்.

ஒரு நாடு நாடாகவும் ஒரு இனம் இனமாகவும் இருக்க வேண்டுமென்றால் வீரம், அறிவு என்ற இரு விடயங்கள் இன்றியமையாதது. வீரத்தையும் அறிவையும் ஒருங்கிணைத்து பலம் கொண்ட ஆற்றலாக வளரும் போது தான் ஒரு இனம் யாருக்கும் அடிமைப்படாமல் இருக்க முடியும். அவ்வாறே எமது தேசியத் தலைவரும் எமது போராளிகள் அறிவும் பலமும் உறுதியும் திடமும் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும் என்ற விருப்புடையவர். அந்த வகையில் தமிழீழத்தின் நிருவாகம், நிதி, நீதி, மருந்துவம் போன்ற எல்லாத் துறைகளிலும் எமது போராளிகள் துறைசார் வல்லுனர்களாக உருவாக வேண்டும் என்று திட்டமிட்டு அவர்களை அந்தந்த துறைகளில் கற்கைநெறிகளை மேற்கொள்ள ஊக்குவித்தார். எமது நிதித்துறை வாணிபங்களின் கணக்கியல் நிருவாக நடவடிக்கைகளில் போராளிகளால் மட்டுமே அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் அகத்தூய்மையுடனும் செயற்பட முடியும் என்பதனை புரிந்து கொண்ட தேசியத் தலைவர் நிதித்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழேந்தி அப்பாவுடன் கலந்துரையாடி யாழ். நீர்வேலிப்பகுதியில் நிதித்துறைப் போராளிகளுக்கான முதலாவது உயர்தரக் கல்விக்கான பயிற்சிக் கல்லூரி ஒன்றினை நிறுவினார். அதனடிப்படையில் சேரலாதன் அண்ணாவும் க.பொ.த சாதாரணதரத்தில் பெற்ற மிகச்சிறந்த பெறுபேற்றின் அடிப்படையில் **1994** ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் அக்கற்கைநெறிக்காக நிதித்துறை கணக்காய்வுப்பகுதிக்கு உள்வாங்கப்பட்டார்.

**1995**இல் யாழ்மாநகரம் எமது கட்டுப்பாட்டில் இருந்தது. அதனைக் கைப்பற்றுவதற்கு சிறிலங்கா இராணுவம் படாதபாடுபட்டு பலமுனைத் தாக்குதல்களினைத் தொடுத்தும் அவை எமது படையணிகளால் முறியடிக்கப்பட்ட வண்ணம் இருந்தன. இதனால் **11.07.1995** இல் சிறிலங்கா இராணுவம் “முன்னேறிப் பாய்தல்” என்ற பெயர் குறித்த தாக்குதலோடு பாரிய வன்கவர்வு நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் மக்களெல்லாம் அச்சப்பட்டு அவலப்பட்டு மனமிடிந்து புலம்பிக் கிடந்தவேளை, இருள் சூழ்ந்தவேளைகளில் எல்லாம் ஒளியேற்றும் எம் தலைவர் இதனை அமைதியாகவும் நிதானமாகவும்

அவதானித்து பலியெடுத்து வந்தோரை பழிவாங்கும் வேட்கையோடு 14.07.1995 இல் "புலிப்பாய்ச்சல் நடவடிக்கை" எனும் வலிந்த தாக்குதல் நடவடிக்கையை திட்டமிட்டு நடாத்தினார். இது எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதியதோர் திருப்புமுனையாக இருந்தது. எமது மக்களை அடித்து துரத்தியவர்களை நாம் அடித்து விரட்டி புதிய வரலாறு படைத்தோம்.

பொதுவாக பெரிய அளவிலான வலிந்த, ஊடறுப்பு தாக்குதல் நடவடிக்கைகளின் போது ஏற்படும் ஆளணிப் பற்றாக்குறையின் போது எமது நிதித்துறைப் போராளிகளும் களப்பணிகளுக்குள் உள்வாங்கப்படுவதுண்டு. இதனால் எமது கணக்காய்வுப்பகுதிப் போராளிகள் ஒரு கையில் கணக்காய்வின்திறவுகோலானபச்சைநிறப்பேனாவையும் (வெளியகக் கணக்காய்வுக்கு பயன்படுத்தப்படும் பேனாவின் நிறம் பச்சை) மறுகையில் விடுதலையின் திறவுகோலான ஆயுதமும் ஏந்திக் களச்சாதனை படைத்தனர். அந்தவகையில் சேரலாதன் அண்ணாவும் அவரது நிதித்துறை அணியுடன் இணைந்து தனது கற்கைநெறியினை இடைநிறுத்திவிட்டு புலிப்பாய்ச்சல் நடவடிக்கையில் திறமையாகக் களமாடி வெற்றி வாகை சூடி முகாம் திரும்பினார்.

பின்னர், தமிழீழத்தின் இதயபூமியான மணலாற்றில் சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டாய சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பை வழங்கி வந்த மணலாற்றில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் ஐந்து படைத்தளங்களினை அழித்தொழிப்பதற்காக 28.07.1995 இல் எமது படையணிகளால் தாக்குதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. எனினும் சில இரண்டகர்களின் காட்டிக்கொடுப்பினால் இத்தாக்குதல் நடவடிக்கை வெற்றியளிக்காதபோதும் படைத்தளத்துக்குள் ஊடுருவி அந்த மரணப் பொறிக்குள் சிக்கிய எமது படையணிகள் வீரத்துடனும் சமயோசித புத்தியுடனும் போராடி வரவிருந்த பேரிழப்பைத் தவிர்த்து குறைந்த இழப்புடன் சிறிலங்கா இராணுவத்தினரின் இரண்டு ஆட்டிலறிப் பீரங்கிகள் உட்பட பல படைக்கலங்களை அழித்து தீரமுடன் திரும்பினர். சேரலாதன் அண்ணாவும் இத்தாக்குதல் நடவடிக்கையில் நிதித்துறை தாக்குதலணியுடன் இணைந்து வீரமுடனும் தீரமுடனும் களமாடி முகாம் திரும்பினார்.

பின்பு, 17.10.1995 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக பலாலி இராணுவ முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவம் மிகப்பெரிய "ரிவிரெச" (சூரியக்கதிர் )எனும் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டது. இச்சமரிலும் சேரலாதன் அண்ணா பின்களப்பணியான, களத்தில் நிற்கும் போராளிகளுக்கான உணவு வழங்கும் நடவடிக்கைகளுக்கு நிதித்துறை வழங்கல்பகுதியுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். அதன் பின் அவர் யாழ் குடாநாட்டிலிருந்து எமது அமைப்பு பின் வாங்கிய பின்னர் வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்ந்து சுதந்திரபுரத்தில் இயங்கிய தமிழ்மாறன் பயிற்சிக் கல்லூரியில் தனது க.பொ.த உயர்தரக் கல்வியினையும் கணக்காய்வுக் கற்கைநெறியினையும் தொடர்ந்தார்.

அதன் பின்னர் 1996ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் எமது போராட்டத்தின் மரபுவழித் தாக்குதல் அத்தியாயத்தை வலுப்படுத்திய முல்லைத்தீவு இராணுவமுகாம் மீது நடத்தப்பட்ட "ஓயாத அலைகள் 1" நடவடிக்கையிலும் அவர் களப்பணியின் முதன்மை கருதி தனது கற்கைநெறியினை இடைநிறுத்திவிட்டு பின் களப்பணிகளிலும் பணியாற்றினார். பின்பு தனது க.பொ.த உயர்தரத்திற்கான பரீட்சையினை 1996 ஆவணி மாதம் தனது அணியுடன் நிறைவுசெய்து கொண்டு பின்னர் தொடர்ந்து கணக்காய்வுக் கற்கைநெறியினையும் நிறைவுசெய்து 1997 ஆம் ஆண்டு முற்பகுதியில் வன்னி கிழக்கு கணக்காய்வுப் பகுதிக்கு அனுப்பட்டு 1997 தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரை ஈரல் புற்று நோயினால் சாவடையும் வரை பாண்டியன் வாணிபத்தின் கணக்காய்வு அணியில் தனது போராட்டப் பங்களிப்பைச் செய்தார்.

எமது போராட்டத்துக்கான பெருமளவிலான நிதியினை ஈட்டிக் கொடுக்கும் நிதித்துறையின் மாபெரும் வாணிபங்களில் ஒன்றான பாண்டியன் வாணிபமானது பாண்டியன் பல்பொருள் வாணிபம், பாண்டியன் புடவை வாணிபம், பாண்டியன் சுவையூற்று, பாண்டியன் எரிபொருள் வாணிபம், பாண்டியன் உதிரிகள் வாணிபம், பாண்டியன் அச்சகம், மேலும் அவற்றின் மிகப்பெரிய களஞ்சியங்களென ஒவ்வொன்றிலும் பல கிளைகளென வன்னிப் பெருநிலப்பரப்பின் பல பகுதிகளிலும் வியாபித்துக் காணப்பட்டது. இவ்வனைத்திற்குமான கணக்காய்வுப் பணியினை சேரலாதன் அண்ணாவின்

கணக்காய்வு அணி திறமையாக மேற்கொண்டது. அவரும் இவற்றிற்கான கணக்காய்வுப் பணியினை தன் அணியுடன் இணைந்து அர்ப்பணிப்புடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் மேற்கொண்டார்.

சொல்லுக்கு முன்னே செயல் இருக்க வேண்டும். இது எமது தலைவனின் தாரக மந்திரம். இதனால் தான் நாம் எமது போராட்ட வரலாற்றில் உலகளவில் செல்வாக்குப் பெற்றோம். அவ்வாறே சேரலாதன் அண்ணாவும் எந்தப் பணியைக் கொடுத்தாலும் சொல்வதற்கு முன்னர் அந்தப் பணியினை முழுமையாக முடித்துவிட்டு வரும் திறமையைக் கொண்டிருக்கும் ஒரு சிறந்த கணக்காய்வாளனாக இனங்காணப்பட்டார். பணியிடத்தில் பணி நேரத்தில் பணியாளர்களிடம் அன்பாகவும் பண்பாகவும் தேவையேற்படுமிடத்தில் கண்டிப்பாகவும் ஆளுமையுடன் செயற்படுவார். மிகவும் பணிச்சுமை கூடிய நேரங்களில், எடுத்துக்காட்டாக, ஆண்டிறுதி இருப்பெடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பணியாளர்களுக்கும் மற்றும் சக போராளிகளுக்கும் பணிச்சுமை தெரியாமல் இருக்க மிகவும் நகைச்சுவையாகப் பேசி பணியினை நேரம்போவது தெரியாமல் நிறைவேற்றும், நிறைவேற்றுவிக்கும் தனித் திறமை அவரில் காணப்பட்டது. பணி தவிர்ந்த மற்றைய நேரங்களில் பணியாளர்களுடன் மிகவும் நட்புரிமை பாராட்டக்கூடிய ஒருவராகவும் அவர் காணப்பட்டதால் பணியாளர்கள் அனைவரும் அவரில் மிகுந்த அன்பும் நன்மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்ததை அங்கே காணக்கூடியதாக இருந்தது.

மகளிர் வெளி விவகார அமைச்சர் என்ற பட்டப் பெயருக்கேற்ப அவர் பொதுவாக அனைத்து சக பெண் போராளிகளுடனும் ஒரு சகோதரத்துவமான உரிமையில் பழகுவதனால் நாம் அவரிடம் ஒரு சகோதரன் என்ற முறையில் தேவையானவற்றைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுவோம். புதுக்குடியிருப்பு பாண்டியன் பல்பொருள் வாணிபத்தில் அவர் கணக்காய்வுப் பணியினை மேற்கொண்டிருக்கும் நேரத்தில் நாம் அவ்வழியால் செல்லும்போது அவரைக் கண்டுவிட்டோம் என்றால் அவரின் பணியிடத்தில் இறங்கி அவரிடம் வம்பிழுக்காமல் ஒரு போதும் செல்லமாட்டோம். அவர் தனது சட்டைப் பையில் வெளியகக் கணக்காய்வுப் பணிக்குப் பயன்படுத்தப்படும் பச்சை நிறப் பேனாக்கள் பல புதுப்புது வடிவங்களில் கொழுவி வைத்திருப்பார். நாமும் பச்சைப் பேனாவிலுள்ள மிகுந்த ஈர்ப்பினால் அதனை அவரிடமிருந்து சூறையாடாமல் விடமாட்டோம். அதனால் எங்களைக் கண்டால் “பிசாசுகள் வருகுதுகள் பிசாசுகள் வருகுதுகள்” என்று செல்லமாக வைவார். அவர் என்ன சொன்னாலும் அவரது பச்சைப் பேனாவைச் சூறையாடுவதிலும் அவரது திட்டைக் கேட்பதிலும் எங்களுக்கு ஒரு தனி மகிழ்விருக்கும்.

அத்துடன், மக்களோடு மக்களாக பழகும் ஒரு போராளியாகவும் மிகவும் இளகிய மனம் படைத்த ஒரு போராளியாகவும் அவர் காணப்பட்டார். நிதித்துறையிலிருந்து வீரச்சாவடையும் மாவீரர்களின் வீடுகள் மற்றும் தனது முகாமுக்கு அருகில் வசிக்கும் மாவீரர் குடும்பங்களின் வீடுகள் போன்றவற்றிற்கு அடிக்கடி சென்று அவர்களது இன்ப துன்பங்களிலும் பங்குபற்றுவார். அவருடன் ஒன்றாக இருந்த போராளி நண்பர்கள் வீரச்சாவடையும் போது அதனைத் தாங்க முடியாது அவர்களது பெற்றோர்களுடன் சேர்ந்து அவரும் கதறி அழுவதை நாம் நேரில் கண்டிருக்கின்றோம்.

பின்பு 2003 ஆம் ஆண்டில் அவர் திருமண அகவையினை அடைந்திருந்தமையினால் எமது அமைப்பின் அனுமதியுடன் ஒரு மாவீரரின் தங்கையான பெண் போராளி ஒருவரைத் திருமணம் செய்தார். போராளி ஒருவரைத் திருமணம் செய்தபடியால் அவரது போராட்ட பணிக்கு குடும்ப வாழ்க்கை தடையாக இருக்காமல் பக்க பலமாகவே இருந்தது. பின்னர் 2004 இல் ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையாகினார். 2004-2008 ஆம் ஆண்டு வரை பாண்டியன் வாணிபத்தின் கணக்காய்வுப் பணியுடன் மேலதிகமாக நிதித்துறையின் தளவமைப்புப்பகுதி, உடமைப்பகுதி போன்றவற்றிற்கான கணக்கு நடவடிக்கைகளுக்கான கணக்காய்வுப் பணியினையும் திறம்பட மேற்கொண்டார்.

பொதுவாக வெளிநிருவாகப்பணிகளில் ஈடுபடும் போராளிகள் தமது பணியைச் சரிவரச் செய்துமுடிக்க வேண்டும் என்ற கொள்கையில் தமது பணியை மட்டுமே குறிக்கோளாக கொண்டு தங்கள் உடல் நலனைச் சரிவரக் கவனிக்காது இயங்குவதால் களத்தினில் மட்டுமல்லாது உடல்நலக்குறைவு காரணமாகவும் எமது போராளிகள் சாவடைவதுண்டு. அந்தவகையில் சேரலாதன் அண்ணாவும் பணியிடங்களில் ஏற்படும் பணிச்சுமைகளின் காரணத்தினால் தன் உடல் நலனைச்

சரிவரக் கவனிக்காத காரணத்தினால் 2007 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கொடிய ஈரல் புற்றுநோயின் தாக்கத்திற்கு உட்பட்டு மருத்துவச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அப்போது அவரின் மனைவி இரண்டாவது மகவை வயிற்றில் தாங்கி கர்ப்பிணியாக இருந்தார். தமது போராட்ட வாழ்க்கையில் எந்தவொரு போராளியும் களத்திற்கு சென்று வீரச்சாவடைவதையே விரும்புவர். அவ்வாறே சேரலாதன் அண்ணாவும் தான் களத்தினில் வீரச்சாவடையாமல் உடல்நலக்குறைவு காரணமாக சாவடையப் போகிறேன் என்று எண்ணி மிகவும் மனமுடைந்து காணப்பட்டார். பின்னர் மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல், தேசியத் தலைவனையும் சக போராளிகளையும் தமிழ் மக்களையும் தனது பணியையும் மிகவும் ஆழமாக நேசித்த போராளியான சேரலாதன் அண்ணா தனது கர்ப்பிணி மனைவியையும், பெண் குழந்தையையும் அதுவரை வெளியுலகை எட்டிப் பார்க்காத தனது மற்றைய குழந்தையினையும் எம் எல்லோரையும் தவிக்க விட்டு 21.08.2008 இல் மேஜர் சேரலாதனாக சாவடைந்து எம் தேசத்தின் வரலாறாகினார்.

இவரது இழப்பானது போராளிகள் மத்தியில் மட்டுமன்றி பணியாளர்கள் பொதுமக்கள் மத்தியிலும் மிகுந்த வேதனையினை ஏற்படுத்தியிருந்ததை இறுதி வணக்க நிகழ்வில் அவர்கள் அனைவரும் கதறி அழுததிலிருந்து காணக்கூடியதாக இருந்தது. பல்லாண்டு காலங்கள் உயிருடன் இருந்து எம் தேசத்துக்கான பணியினையும் கணக்காய்வுப் பணியினையும் செய்ய வேண்டிய சேரலாதன் அண்ணா புற்றுநோய் எனும் கொடிய நோயால் குறுகிய காலத்தில் எமை விட்டுப் பிரிந்தது எமது போராட்டத்திற்கும் நிதித்துறை கணக்காய்வுப் பகுதிக்கும் ஏற்பட்ட பேரிழப்புகளில் ஒன்றாகும்.


-நிலாதமிழ்-

**‘இந்த யுத்தத்தில் எமது போராளிகளும் பொதுமக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள், உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற வீரகாவியமாகப் பொறிக்கப்பட்டுவிட்டது‘**

**தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்**



# லெப்.கேணல் அன்பழகன்/ விமலன்




ஈழமணித் திருநாட்டின் வடமாகாணத்தில் உள்ள யாழ்குடா நாட்டில் வலிகாமம் கிழக்குப் பகுதியிலே செம்மண் கனிவளத்துடனும் தென்னந் தோப்புக்களும் பனை வெளிகளும் வேளாண் நிலங்களும் மேய்ச்சல் நிலப்பரப்புகளும் கடல் வளங்களும் நிறைந்த எழில்மிகு ஊர் பலாலி ஆகும். இவ்வூரானது பல உழவர் பெருமக்கள், கல்விமான்கள், மக்கள் விடுதலை போராட்ட வீரர்களை பெற்றெடுத்து தன்னகத்தே கொண்ட மண் ஆகும்.

இவ்வூரிலே பல நிலபுலங்களுக்கு உரித்துடையவர்களாகவும் நற்பண்புகள் நிறைந்த "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பதற்கொப்ப வாழ்ந்தவர்களான திரு.திருமதி கைலாயபிள்ளை, காமாட்சி இணையருக்கு இரண்டு சகோதரிகள், மூன்று சகோதரர்களுடன் நான்காவது மகனாக 18.08.1972 அன்று ஜெயகாந்தன் எனும் இயற்பெயருடன் அன்பழகன் பிறந்தார். அவரை வீட்டில் ஜெயம் என்று செல்லமாக அழைத்தார்கள். அவர் சிறு வயது முதற்கொண்டே படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். 'ஜெயம்" என்ற அவரது இயற்பெயருக்கேற்ப அவரது வாழ்விலும் எந்த காரியம் என்றாலும் அதில் எப்படியாவது வெற்றி பெற்று வரும் தனித் திறமை அவரிடம் காணப்பட்டிருந்தது. "விடாமுயற்சி பெரு வெற்றி" என்ற சொற்றொடருக்கேற்ப எந்த கடினமான பணி என்றாலும் அதனை முழுமையாக முடித்து விட வேண்டும் என்ற தன்மையை அவரது சிறு அகவை முதல் அவரிடம் இனங்காணக்கூடியதாக இருந்தது.

ஜெயம் தனது தொடக்கக் கல்வியை ஆண்டு ஐந்து வரை பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயத்திலும் பின்பு ஆண்டு ஆறிலிருந்து க.பொ.த சாதாரணதரம் வரை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் தனது கல்வியைத் தொடர்ந்தார். 1988இல் அவர் க.பொ.த சாதாரணம் கற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் ஈழத்தில் இந்திய இராணுவத்தினரின் அட்டூழியங்கள் தலைவிரித்தாடியது. அத்துடன் ஒட்டுக்குழுவான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் ஒட்டுக்குழு நடவடிக்கைகளிற்கான கட்டாய ஆட்சேர்ப்பு, பிள்ளைபிடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இத்தகைய காரணங்களினால் மனமுடைந்து காணப்பட்ட ஜெயத்தினால் தனது க.பொ.த சாதாரணதரத்தை ஒழுங்கான முறையில் கற்க முடியாதிருந்த போதிலும் அவருக்கு கல்வி கற்றலின் மீதிருந்த அவாவினால் விடாது முயன்று கல்வி கற்று க.பொ.த சாதாரணதரத்தில் தோற்றி சித்தியடைந்தார். பின்பு ஏற்பட்ட தொடர் இடப்பெயர்வுகள், இழப்புகளினால் அவரால் க.பொ.த உயர்தரத்தை தொடர முடியாத நிலை காணப்பட்ட போதிலும் கற்றலின் மேலுள்ள பேரவாவினால் 1993 வரை யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் தனது மின்னியல் தொடர்பான கற்கைநெறியினைத் தொடர்ந்தார்.

எமது விடுதலைப்புலிகள் இயக்கமானது மக்களுக்காக போராடுபவர்கள். மக்கள் சக்தியில் நம்பிக்கை கொண்டவர்கள். மக்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மாலியன்ற வழிகளில் பங்கெடுக்காவிட்டால் ஈழவிடுதலையைப் பெற முடியாது என்று கருதுபவர்கள். எமது விடுதலைப் போராட்டத்தை அளப்பெரிய ஈகங்களாலும் மக்கள்மயப்பட்ட போராட்டத்தினாலும் மட்டுமே வென்றெடுக்க முடியும் என்ற ஆழமான அரசியல் தெளிவின் வெளிப்பாடுகள் இவை. எமது கழுத்தை நெரிக்க வரும் இனவெறிக் கரங்களை தறித்துப் போட எமது கைகளில் ஆயுதங்களைத் தூக்கி எமக்கான

உரிமைக்காக போராட வேண்டியது இன்றியமையாதது.

இந்த போராட்டத்தில் இணைந்த பலரும் தமது இருப்பிற்காக, தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக அல்லது வாழ வழியில்லாமல், வாழத் தெரியாமல் வந்தவர்கள் அல்ல. அனைவரும் வாழ தெரிந்தவர்கள், வாழ விருப்பமுள்ளவர்கள். ஆனால் மற்றவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக, வருந்தலைமுறை விடுதலைபெற்று வாழ வேண்டும் என்பதற்காகப் போராட வந்தவர்கள். எமது இனத்திலுள்ளோர் எங்கோ, யாரோ பாதிக்கப்படுகின்றபோது, இனத்தின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன, எமது தேசம் ஒடுக்கப்படுகின்றது என்பதற்காகப் போராடப் புறப்பட்டவர்கள். தாம் வாழ வேண்டும், ஆள வேண்டும் என்றால் கழுத்தில் நஞ்சைக் கட்டிக் கொண்டு, கையில் ஆயுதத்துடன் சாவதற்கு துணிந்திருக்க மாட்டார்கள். உண்மையில் இவ்விடுதலைப் பயணத்தில் இணைந்தவர்கள் மிகவும் இளகிய உள்ளம் கொண்டவர்கள். அதாவது யாரோ பாதிக்கப்படுகின்றபோது அதனைப் பார்த்து உள்ளம் பொறுக்க முடியாமல் ஏற்பட்ட தவிப்பினால் போராட வந்தவர்கள். இவ்வாறுதான் ஜெயமும் தனது குடும்பத்தில் வசதிகள், மலர்ப்படுக்கை வாழ்க்கை வாழும் வாய்ப்புக்கள் இருந்தபோதும், தனது இனத்தின் விடுதலைக்காக புலிகளின் பாசறையை நோக்கி **1993** ஆம் ஆண்டு பத்தாம் மாதம் புறப்பட்டான்.

இம்ரான் பாண்டியன் படையணியின் சரத்பாபு ஏழாவது பயிற்சி முகாமில் தனது அடிப்படைப் பயிற்சியை நிறைவுசெய்த ஜெயம் அன்பழகன்ஃவிமலன் என்ற இயக்கப் பெயருடன் தன்னை ஒரு முழுமையான போராளியாக ஆக்கிக்கொண்டான்.

அடிப்படைப் பயிற்சி காலப்பகுதியில் **1993** நவம்பர் மாதத்தில் விடுதலைப்புலிகளின் முதலாவது ஈரூடகத்தாக்குதலான "தவளை" நடவடிக்கைக்கு சென்ற உதவி அணியில் அன்பழகனும் சென்றிருந்தார். அன்றைய காலகட்டங்களில் விடுதலைப்புலிகளின் வலிந்த தாக்குதல் அல்லது சிங்கள படைகளின் நடவடிக்கைகளுக்கு எதிரான தாக்குதல்கள் என ஏதாவது படை நடவடிக்கைகள் எப்பொழுதும் நடைபெற்ற வண்ணமே இருக்கும். அந்த நடவடிக்கைகளுக்கான களமுனை உதவிப் பணிகளில் புதிய போராளிகளை ஈடுபடுத்தி உதவிப் பணிகளை செய்துகொள்வதுடன்,

புதியவர்களுக்கு கள அனுபவம் ஊட்டப்படுகிறது. இதில் இன்னொரு விடயமும் இருக்கிறது. அடிப்படை பயிற்சிகள் நிறைவுற்று போராளிகள் பல்வேறு பணிகளுக்காக அனுப்பப்படுவார்கள். சில சிறப்பு கடமைகளுக்கு எடுக்கப்படும் போராளிகளுக்கு சண்டை அணியில் இடம்பெறுவதற்கான வாய்ப்பென்பது பின்னாளில் எட்டாக் கனியாக கூட போகலாம் என்பதால், பயிற்சிக் காலத்திலேயே சண்டை அணிகளில் ஈடுபடுத்துவதால் மீண்டும் அவர்களுக்கான சண்டைக்கான வாய்ப்பை தாமதப்படுத்தி சிறப்பு பணிகளில் ஈடுபடுத்த முடியும்.

சில சிறப்புப் பணிகளில் ஈடுபடுபவர்களை அடிக்கடி களமுனைக்கு அனுப்ப முடியாது. இரகசியம் மற்றும் புதியவர்களை அப்பணியில் ஈடுபடுத்துவதிலுள்ள சிக்கல்களை கருத்திற்கொண்டு புதிதாக பணிக்கு எடுக்கும் போது, அவர்கள் தாமாக கேட்டு களமுனைக்கு செல்ல முனைய மாட்டோம் என எழுத்து வடிவ உறுதிப்பாட்டை அளிக்க வேண்டியும் ஏற்படுவதுண்டு. இவ்வாறான உறுதிப்படுத்தல் அன்பழகனின் பணியிலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. பயிற்சி நிறைவில் போராளிகள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு பணிகளுக்காக அனுப்பப்பட்டனர்.

இதன்போது அன்பழகனும் இன்னும் இருபது போராளிகளும் சிறப்பு கடமைக்காக தெரிவு செய்யப்பட்டு அதற்கான கல்வியையும், பயிற்சிகளையும்

**1994.04.01** தொடக்கம் **1994.07.31** வரை யாழ் மாவட்டம், வலிகாமம் பகுதியிலிருந்த சிறப்பு முகாமொன்றில் பயிற்சிபெற்றுக் கொண்டனர். இப்பயிற்சிக் காலத்திலேயே அவர்கள் தொடர்பான துல்லியமான மதிப்பீடுகளும் இடம்பெறும்.

கடமைக்கான பயிற்சியும், கற்கைநெறிகளும் நிறைவடைந்த நிலையில் கடமையுணர்வு, செய்நேர்த்தி மற்றும் அர்ப்பணிப்புமிக்க போராளியாக இனங்காணப்பட்ட அன்பழகன் அலுவலக கடமைக்காக தெரிவாகி தனது பணியை மிகவும் நேர்த்தியாக செய்து வந்தார். **1995** ஆம் ஆண்டு இறுதிப்பகுதியும், **1996** முற்பகுதியும் தமிழினத்தைப் பொறுத்தவரை மிகவும் நெருக்கடியானதும், சோதனைகள் நிறைந்ததாகவும் இருந்தது.

யாழ். வலிகாமம் பகுதியை எமது முதன்மை நிருவாக நடுவமாகப் பேணிவந்த எமக்கு, சிங்களப் படைகளின்

யாழ் நகர் நோக்கிய வன்கவர்வு நோக்கிலான முன்னேற்றமும், அதன் பின்னர் தென்மராட்சி பகுதியை விட்டு வெளியேறியமையும் மிகுந்த நெருக்கடியாக அமைந்தது. இக்காலத்தில் அன்பழகனும் தனது அலுவலக ஆவணங்களை பாதுகாத்து, நகர்த்தும் பணியில் சிறப்பாக செயற்பட்டார். இடப்பெயர்வு காரணமாக போராளிகளின் பரம்பல் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு நகர்ந்ததனால் அவர்களுக்கான நிருவாகப்பணிகளும் விரிவாக்கப்பட வேண்டியதாயிற்று. இச்சூழ்நிலையின் போது அணியின் நிருவாகப் பொறுப்பாளராக இருந்த மாவீரர் வேல்ராஜ் அவர்கள் வேறு கடமைக்கு சென்றதனால், அன்பழகன் அணியின் நிருவாகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தொடர் இடப்பெயர்வுகளால் இயக்கமே நெருக்கடி நிலையில் இருக்கின்றபோது நிருவாகப் பொறுப்பை செய்வதென்பது "கல்லில் நார் உரிப்பது" போன்றதாகும். எனினும் தனது திறமையாலும் கடின உழைப்பாலும் போராளிகளின் தேவைகளை நிறைவுசெய்து தனது நிருவாகக் கடமையை எந்தவித குறையுமின்றி சிறப்பாக செய்ததன் மூலமாக தனது அணி போராளிகளின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்ற பொறுப்பாளனாக உருவானார் அன்பழகன்.

பின்னர் 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இம்ரான் பாண்டியன் படையணியின் செயற்பாடுகள் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் வியாபித்திருந்தது. இதன் காரணமாக, படையணி போராளிகளுக்கான பாதுகாப்பு மற்றும் விடுமுறை - சந்திப்பு ஏற்பாடுகள் ஒழுங்கமைத்தல் என்பனவும் மிக முதன்மையானதாகவும், எச்சரிக்கை நிறைந்ததாகவும் அமைய வேண்டியதாயிற்று. வன்னிப் பெருநிலப்பரப்பில், இடங்களை கண்டுபிடிப்பதென்பது ஆரம்பத்தில் எம்மவர்களுக்கு மிகுந்த சோதனையாகவே இருந்தது. அத்துடன் இப்பணிக்கான பயணங்கள் பகல் - இரவு என்ற வேறுபாடின்றி தொடரும். எனவே இப்பணிகளை நேரடியாகச் சென்று ஒழுங்கமைக்கும் பொறுப்பு நிலைக்கு ஏற்றவராக அன்பழகன் தெரிவு செய்யப்பட்டார். இவரின் அறிவுக்கூர்மையும், கடமையுணர்வும், மிடுக்கான தோற்றமும் இப்பணிக்குப் பெரிதும் உதவியது.

இக்காலப் பகுதியில் இம்ரான் பாண்டியன் படையணியானது இயக்கத்தின் பல முதன்மையான மற்றும் இரகசிய பிரிவுகளை தன்னகத்தே கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தது. படையணியின் சிறப்புத் தளபதியாக பிரிகேடியர் ஆதவன் (கடாபி) அவர்கள் இருந்ததுடன், அன்றைய காலப்பகுதியில் தலைவரின் மிகவும் நம்பிக்கைக்குரிய தளபதியாகவும், இயக்கத்தின் பலகட்டமைப்புகளைவழிநடாத்திய, வேலைப்பளுமிக்க தளபதியாகவும் ஆதவன் அவர்களே இருந்தார் என்றால் மிகையில்லை. படையணியின் இரகசியங்கள் மற்றும் முதன்மைப் பணிகள் என்பன எள்ளளவும் வெளியில் தெரியாதவாறு அல்லது சென்றுவிடாதவாறு பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்துப் போராளிகளிடமும் இருந்தபோதிலும், தெரிந்தோ தெரியாமலோ சில போராளிகளின் செயற்பாடுகளால் இரகசியங்கள் கசியும் வாய்ப்புகள் இருந்தபோதிலும், படையணியின் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு (அதிரடியான) செயற்பாடுகளூடாக இரகசிய கசிவுகள் தடுக்கப்பட்டன. சிங்களப் படைகளுடன் ஆயுதரீதியாக மோதி, அவர்களை எமது மண்ணை விட்டு துரத்தியடிப்பதே பணியென வந்த அன்பழகன் போன்ற பல போராளிகளுக்கு இக்கடமையானது ஆரம்பத்தில் மிகவும் சங்கடமானதாக இருந்தாலும், அதன் முதன்மை மற்றும் தேவை உணரப்பட்டதும் அதில் முழுத்தெளிவு ஏற்பட்டு விடுகிறது.

ஆனாலும் இப்பணிக்கு வெளியில் இருக்கும் போராளிகளில் சிலருக்கு இப்பணி தொடர்பான குழப்பங்கள் இருப்பதுடன், இப்பணியை ஆற்றும் போராளிகளையும், இவர்களின் பணிகளையும் அறிந்திருக்க வாய்ப்புகளிருக்கவில்லை.

எது எப்படியிருந்தபோதிலும் அனைத்து தரப்பு போராளிகளிடமும் அன்பழகனுக்கு ஒரு தனியான மதிப்பும், மரியாதையும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு கீழ் கடமையாற்றுபவர்களாயினும் சரி, கடமை அடிப்படையில் தொடர்புடைய இயக்கத்தின் துறை மற்றும் படையணி சார்ந்த பொறுப்பாளர்கள், போராளிகள் என அனைவருக்கும் இவரை பிடித்துவிடும். அதாவது அனைவருடனும் ஒத்துப்போகின்ற மிகச்சிறந்த பண்பு இவரிடம் குடிகொண்டிருந்தது. எவருடனும் முரண்படாத, கோபித்துக் கொள்ளாத, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் சிறந்த போராளி அன்பழகன். இவருக்குரிய நண்பர்கள் வட்டம் என்பது மிகப் பெரியதாகவும், பரந்துபட்டதாகவும் அமைந்திருந்தமை அன்பழகனின் சிறந்த குணவியல்பிற்கான சான்றாகும்.

*1997 தொடக்கம் 1999 வரையும் இப்பணியை சிறப்பாக ஆற்றிவந்த நிலையில், 2000 ஆண்டு காலப்பகுதியில் அணிப் பொறுப்பாளராக அன்பழகன் நியமிக்கப்பட்டார்.*

*உண்மையில் இப்பணியென்பது மிகவும் இரகசியத் தன்மை கொண்டதாகும்.*

*இப்பணிகளுக்கான தகைமைகள் என்கின்றபோது இலட்சியப் பற்று, தலைமை மீதான விசுவாசம், இரகசியம் காத்தல், சுய கட்டுப்பாடு என்பன மிக முதன்மையானவையாகும். இரகசியம் காத்தல் என்ற விடயத்தில் மூன்று விதமான இரகசியங்கள் உள்ளது. நிகழ்வுகள் நிகழும் வரை பாதுகாக்கப்பட வேண்டியவை, நிகழ்வுகள் நடைபெற்று குறிப்பிட்ட காலம்வரை பாதுகாக்கப்பட வேண்டியவை அல்லது நாமாக வெளிப்படுத்த முடியாதவை, அடுத்தது எக்காலத்திலும் வெளிப்படுத்த கூடாதவை அல்லது முடியாதவை.*

*அன்பழகனின் பணியின் பெரும்பாலானவை எக்காலத்திலும் வெளிப்படுத்த கூடாதவை என்பதே உண்மை. இதற்கேற்பவே அவர் தன் இறுதிக்காலம் வரை வாழ்ந்திருந்தார். இந்த அணியில் கடமையாற்றியவர்களும் இதையே தமது தாரக மந்திரமாக கொண்டு செயற்பட்டார்கள். எனவே அந்த இரகசியங்களை பொதுவெளியில் உரைக்காது இருப்பதே இந்த மானமாவீரர்களையும், அவர்கள் செய்த பணிக்கான தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் பொருளுள்ளதாக்கும். இப்பணியை செய்யும் ஒவ்வொரு போராளிகளும் இரகசியம் காத்தலுடன் சுயகட்டுப்பாட்டை பேணக்கூடியவர்களாக இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது. சுய கட்டுப்பாடு இல்லாதவர்களால் இந்த அணியில் தொடர்ந்து பயணிக்க முடிவதில்லை என்பதுடன் அனுமதிக்கப்படுவதுமில்லை. மேற்படி தகைமையுடன் கட்டுப்பாடான சூழலுக்குள் செயற்பட முடியாதவர்கள் சிலர் விலகிச்சென்றமையும் உண்டு. விலகிச் செல்வதற்காக அவர்கள் ஏதேதோ காரணங்களை தெரிவித்திருந்தாலும் அடிப்படைக் காரணம் இதுவே. உண்மையில் அன்பழகன் அவர்கள் அத்தனை தடைகளையும் தாண்டி 17 ஆண்டுகளாக இந்த விடுதலைப் பணியில் தன்னை அர்ப்பணித்திருந்தார்.*

*2001 ஆம் ஆண்டு காலப்பகுதி சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சுவார்த்தைக் காலமாக இருந்தது. அணியின் பொறுப்பை ஆற்றிவந்த நிலையில் 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆம் நாள் இல்லறவாழ்வில் இணைந்து கொண்டார்.*

*ஒரு போராளி என்பவன் எல்லா விடயங்களிலும் தன்னை தியாகம் செய்கிறான் என்பதே உண்மை. அந்த வகையில் தனக்கான வாழ்க்கைத் துணையாக ஒரு போராளியை தேர்ந்தெடுப்பதென்பதும் அப்படியான பண்பின் வழிப்பட்டதே. எமது சமூகத்தைப் பொறுத்தவரை கணவன் மனைவி இருவரும் முழுநேர உழைப்பாளிகளாக இருப்பது அன்றைய காலகட்டத்தில் மிகவும் கடினமானது. அதிலும் ஒரு பெண் தனது வீட்டுக்கான பணிகளையும் ஆற்றிக்கொண்டு இயக்கப்பணியையும் செய்வதென்பது சுமைநிறைந்தது என்றே கூற வேண்டும். பின்பு 2003 இல் ஒரு பெண் குழந்தைக்கும் பின் 2009 இல் ஒரு ஆண் குழந்தைக்கும் தந்தையானார்.*

*2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தலைவர் அவர்களின் பணிப்பிற்கமைய, புலனாய்வு அணியிலிருந்து நிதித்துறை புலனாய்வு பணிக்கென ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது. அந்த குழுவின் உதவிப் பொறுப்பாளனாக அன்பழகன் நியமிக்கப்பட்டார்.*

*நிதிப்புலனாய்வுப் பகுதியின் பணிக்கு வந்த காலத்தில் இருந்து நிதித்துறைப் போராளிகளுடன் அன்புடனும் சிரித்த முகத்துடனும் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தார்.*

*துணைப்பொறுப்பாளராக இருந்து புலனாய்வுபணியின் விரிவாக்கத்திற்கும் ஆழமான செயற்பாட்டிற்கும் தன்னை முழுமையாக அரப்பணித்து உழைத்தார். அக்காலப்பகுதியில் இக்குழுவினரின் செயற்பாடுகளினூடாக தவறுகள் கண்டறியப்பட்டதுடன், தவறுகள் நடைபெறாதபடியான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*இக்காலப்பகுதில் 2006 ஆம் ஆண்டு அமைதிப்பேச்சுகளுக்கான கதவுகள் பூட்டப்பட்டு சிங்கள படைகளுடன் இறுதிப்போர் ஆரம்பமாகியிருந்தது. வட போர்முனையில் கடும் போர் நடந்துகொண்டிருந்த சமநேரத்தில் மன்னார், வ்வுனியா, மணலாறு என களமுனைகள் திறக்கப்பட்டு வன்னி முழுமையும் போரரங்காக மாறியிருந்தது.*

*இந்நிலையில் முகமாலைப் பகுதியில் சண்டையில்*

நின்ற நிதித்துறைப் படையணி பின் நகர்த்தப்பட்டு படையணி ஒழுங்குபடுத்தலுடன் மன்னார் தம்பனை, பண்டிவிரிச்சான் பகுதிகளைப் பொறுப்பேற்று சிங்களப் படைகளின் முன்நகர்வுகளை தடுத்து சண்டையிட்டுக்கொண்டிருந்தது. தொடர்ந்தும் மன்னாரில் இருந்து முள்ளிவாய்க்கால் இறுதிக்கணம் வரை நிதித்துறைப்படையணி போரிட்டிருந்தது.

2009 இன் தொடக்கமே கிளிநொச்சி இடம்பெயர்வும் நெருக்கமான சண்டைகளும் பின்நகர்வுகளுமாக இருந்த காலம். அக்களச்சூழலில் நிதித்துறையின் ஆளுகைக் கட்டமைப்புகளில் உள்ள போராளிகள் படையணிக்கு மாற்றப்பட்டு களமுனைகளில் சண்டையிட்டுக்கொண்டிருந்த போது அன்பழகனும் போராளிகளை வழிநடத்தும் பொறுப்பாளனாய் களமுனையில் நின்றிருந்தார். அந்நேரத்தில் எதிரியுடனான சண்டையில் நெற்றிப் பகுதியில் விழுப்புண்ணடைந்து மருத்துவமனையில் சேர்ககப்பட்டு சிகிச்சைபெற்ற பின் மருத்துவ ஓய்வில் நின்றார். அவருடைய காயம் முழுமையாக குணமடையாத நிலையில் சண்டைக் களங்களில் காணப்பட்ட ஆளணிப் பற்றாக்குறை காரணத்தினால் திரும்பவும் இரட்டை வாய்க்கால் போர் முன்னரங்கப் பகுதியில் ஒர் அணிக்குப் பொறுப்பாளராக களப்பணியாற்றினார். அப்போதும் எதிரியுடன் ஏற்பட்ட மோதலில் உடல் முழுவதும் சிறு சிறு விழுப் புண்களுக்குள்ளாகி மருத்துவ சிகிச்சைக்கு உட்பட்டிருந்த போது காயங்கள் முழுமையாக குணமடையாத போதும் களப்பணிக்கு விரைந்து படையணிகள் மீள் ஒழுங்குபடுத்த வேண்டிய நெருக்கடியான அக்கணத்தில் மீண்டும் படையணியுடன் இணைக்கப்பட்டு ஒரு தாக்குதல் அணியின் பொறுப்பாளராக களமுனை சென்றார். அவ் அணி குறுகிய காலப் பயிற்சியுடன் முள்ளிவாய்க்கால் காப்பணையை பலப்படும் பணியில் ஈடுபட்டிருந்தது. அந்நாட்களில் சிங்களப்படை காப்பணையை அண்மித்திருந்த நிலையில் கண்ணிவெடிப் பிரிவின் அணி ஒன்றுடன் முன்னகர்ந்து அணையை கடந்து சென்ற போது சிங்களப்படையின் குறி சூட்டணியின் தாக்குதலில் நெற்றியில் குண்டேந்தி முள்ளிவாய்கால் மண்ணில் தமிழினத்தின் விடிவிற்காய் மாவீரர் லெப் கேணல் அன்பழகனாக தமிழீழத்திற்கான கனவை நெஞ்சினில் சுமந்து கொண்டு தன்னுயிர் ஈந்து விதையானார்.



**எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது**

**~ தலைவர்~**

# மாவீரர் நிசாம்/ சேரன்



கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி *2009* மே *18* இற்கு பிறகு சுடுகலன்கள் பேசாநிலைக்கு வந்த எமது மறப்போராட்ட வரலாறானது அளப்பரிய ஈகங்களையும் வரிகளில் வரித்திட முடியாத அர்ப்பணிப்புக்களையும் கொண்டது. எமது மாவீரச் செல்வங்கள் வியப்புமிக்க மகத்தான வீரகாவியங்களைப் படைத்தனர். அந்த மகத்தான மாவீரர்களின் குருதியால் எழுதப்பட்டது தான் எமது வீரம் செறிந்த போராட்ட வரலாறு. அவர்கள் எமது மக்களுக்காகவே குருதி சிந்தினார்கள், மக்களுக்காகவே மடிந்தும் போனார்கள். எமது மக்களினதும் மண்ணினதும் விடுதலைக்காகவே எமது மாவீரர்கள் தங்களது இன்னுயிரை ஈந்தார்கள். அவர்கள் என்றும் எமது மக்களின் போராளிகள். அவர்களின் குருதி சிந்திய போராட்ட வரலாறானது எமதும் எமது மக்களினதும் வீர வரலாறு. அவர்களின் வீர வரலாறானது மறக்கப்படாமல்/மறக்கடிக்கப்படாமல், எஞ்சியிருக்கும் நாம் நினைவுகூர்ந்து ஆவணப்படுத்த வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும். அந்த வகையில் தன் இளமைக் காலக் கனவுகளைத் துறந்து, எமது போராட்டத்தில் இணைந்து சுதந்திரத் தமிழீழம் என்ற பெருங்கனவோடு வாழ்ந்து இறுதிப் போரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட எமது விடுதலைப் போராட்ட அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரும் தமிழீழ நிதித்துறையின் மூத்த உறுப்பினருமான மாவீரர் நிசாம்ஃசேரன் அவர்களைப் பற்றி நினைவுகூர வேண்டியது எமது கடமையாகும்.

யாழ் மாவட்டத்திலே கோப்பாய் பூதர்மடம் எனும் ஊரில் நிசாம் அவர்கள் அம்பிகைபாகன் விசாலாட்சி இணையருக்கு ***14.03.1963*** அன்று தவநேசன் எனும் இயற்பெயருடன் நிசாம் அண்ணா பிறந்தார். இரு சகோதரிகள்மூன்றுசகோதரர்களுடன்பிறந்ததவநேசனை வீட்டில் செல்லமாக ராசன் என அழைத்தனர். அவரது மூத்த சகோதரன் உடல்நலக் குறைவால் இறந்து விட, குடும்பத்தில் மூத்த ஆண்மகனாக மிகவும் செல்லமாக ராசன் வளர்ந்து வந்தார். அவரது குடும்பம் ஆரம்ப காலந்தொட்டு இந்த மண்மீட்புப் போராட்டத்திற்கு முழுமையாக தங்களை அர்ப்பணித்திருந்தது. அவர் சிறுவயது முதல் படிப்பு, விளையாட்டு போன்றவற்றில் சிறந்து விளங்கினார்.

அவர் தனது ஆரம்பக் கல்வியை நீர்வேலி இந்துக் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை கோப்பாய் கிறித்துவக் கல்லூரியிலும் பயின்று க.பொ.த சாதாரணதரத்தில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்று க.பொ.த உயர்தரக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கணிதப் பிரிவில் பயின்றார். அவர் கணித பாடத்தில் இயல்பாகவே மிகச் சிறந்த புலமையும் ஆர்வமும் கொண்டு விளங்கியமையினால் க.பொ.த சாதாரண தரத்தை நிறைவுசெய்தவுடன், தனக்கு கீழ் வகுப்புக்களில் பயின்ற மாணவர்களுக்கு கணித பாடம் கற்பித்து வந்தார்.

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் இளம் தலைமுறையின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகவே எமது இளம் தலைமுறையினரை அறிவுள்ளவர்களாகவும் ஆற்றல் மிகுந்தவர்களாகவும் பொறுப்புணர்வு கொண்டவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாய தேவை உண்டு. எனவே அதற்கேற்ற வகையில் இளஞ்சிறார்களுக்கு கல்வியூட்டக் கூடிய வகையில் அவர்களின் நலன் கருதி எமது தேசியத்தலைவரின் ஆணைப்படி தமிழீழ கல்விக் கழகம் உருவாக்கப்பட்டு கிராமம் தோறும் வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. அதில் ராசன் அவர்களும் க.பொ.த உயர்தரம் பயின்று கொண்டிருக்கும் போதே பகுதி நேர வகுப்புகளில் கணிதபாட ஆசிரியராக இலவசமாக மாணவர்களுக்கு கற்பித்துத் தனது தேசத்திற்கான ஆரம்ப பணியை ஆரம்பித்தார்.

*அவர் துடுப்பாட்ட விளையாட்டிலும் (உசஉைமநவ) மிகுந்த ஆர்வம் கொண்டவர். தனது பாடசாலை துடுப்பாட்ட அணியில் சிறந்த துடுப்பாட்ட வீரனாக தெரிவுசெய்யப்பட்டுமிகத்திறமையாகச்செயற்பட்டார். பிற்காலத்தில் கட்டடப் பொறியியலாளராக (உஙைடை நபெநைநசச) வரவேண்டும் என்பதே அவரது இலட்சியமாக இருந்தது. ஆனால் 1983 இல் க.பொ.த உயர்தரத்தில் தோற்றி மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றும் சிறிலங்கா அரசினால் தமிழ் மாணவர்கள் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட கல்வியில் தரப்படுத்தலின் விளைவாக ஏற்பட்ட வெட்டுப்புள்ளிச் சிக்கலால் அவரது பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வாய்ப்பானது தட்டிப் போய்விட்டது. இதனால் மிகவும் மனமுடைந்து காணப்பட்டார்.*

*பின்பு காலத்தினது தேவை கருதியும் எமது போராட்டத்தினது முதன்மை கருதியும் 1983 இல் தன்னை முழு நேரப் போராளியாக இணைத்து "சாவா 1" பயிற்சி முகாமில் பயிற்சியினை நிறைவுசெய்து கொண்டு "நிசாம்" எனும் பெயர் சூடி வரிப் புலியாகினார்.*

*23.07.1983 இல் எமது போராட்டத்தில் பாரிய திருப்பு முனையை ஏற்படுத்திய தாக்குதலான யாழ் திருநெல்வேலித் தாக்குதல் லெப்.செல்லக்கிளி அம்மான் தலைமையில் நடத்தப்பட்டது. அத்தாக்குதலில் 13 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அந்தக் காலப்பகுதியில் அது பெரும் தொகையாகும். அத் தாக்குதல் நடவடிக்கையில் நிசாம் அண்ணாவும் பின் களப்பணிகளை மேற்கொண்டு தேசத்திற்கான பணியில் நெருக்கமாகச் செயற்பட்டார்.*

*மேலும் 1983-1985 வரையான காலப்பகுதிகளில் கேணல் கிட்டு அண்ணா மற்றும் தியாகி லெப்.கேணல் திலீபன் அண்ணா ஆகியோருடனும் இணைந்து யாழ் கோட்டை போர் முன்னரங்கப் பகுதியில் களப்பணிபுரிந்து தனது தேசத்திற்கான பணியினையாற்றினார்.*

*"களத்தில் எதிரியோடு போராடுவதுடன் மட்டுமல்லாது மக்களின் சமூக பொருண்மிய வாழ்வினை மேம்படுத்துவதிலும் எமது அமைப்பு அயராது உழைத்து வந்தது. மக்களின் அரசியல் விடுதலை மட்டுமன்றி அவர்களது சமூக பொருண்மிய விடுதலையும் எமது இலட்சியம் என்பதை எமது அமைப்பு செயல் மூலம் நிரூபித்து வந்தது. அந்தவகையில் நிசாம் அண்ணாவும் லெப்.கேணல் சரா அண்ணாவுடன் இணைந்து யாழ்.திருநெல்வேலிப் பகுதிக்கு பிரதேசப் பொறுப்பாளராக 1985-1987 காலப்பகுதிகளில் மக்களோடு மக்களாக அர்ப்பணிப்புடன் அரசியல் பணியாற்றினார். பொதுமக்களுக்கு நியாய விலையில் பொருட்களை வழங்குவதற்கு மக்கள் கடை, அந்தப் பகுதியில் இயங்கிவந்த வியாபார நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் போன்றவற்றில் ஏற்படும் சிக்கல்களை ஒன்றுகூடல்கள் வைத்து தீர்த்துக் கொடுத்தல், இளைஞர்களுக்கு உள்ளூர் பயிற்சியளித்து பிறகு தகுதியானவர்களைத் தெரிவு செய்து போராளிகளாக்குதல், மாணவர்கள் மற்றும் பெண்களுக்கான முதலுதவி வகுப்புக்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல், அமுதம் சவர்க்கார உற்பத்தியகம் என்ற ஒரு உற்பத்தியகத்தை நடத்தி அதன் மூலம் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்பளித்தல் போன்ற பல பணிகளை நிசாம் அண்ணா மிகத் திறமையாக மேற்கொண்டார்.*

*அந்தக் காலப்பகுதிகளில் ஒவ்வொரு பகுதிகளுக்கும் பிரதேசப்பொறுப்பாளராகஇருப்பவர்கள்அரசியல்பணி மட்டுமல்ல அந்தந்த பகுதிகளில் ஏற்படும் சிறிலங்கா இராணுவத்தினரின் சிறு சிறு முன்னகர்வுகளின் போது ஏற்படும் சிறிய மோதல்களை தடுத்துநிறுத்தி களப்பணிகளையும் அவர்களே மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் நிசாம் அண்ணாவும் திருநெல்வேலிப் பகுதிக்கான அரசியல்பணி, களப்பணி இரண்டையும் மிகவும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டார். மேலும் அந்தப் பகுதியில் ஏற்படும் மிகப் பெரிய மோதல்களின் போது சண்டையணிகளுக்குத் தேவையான உணவு ஒழுங்குகள், பின்னணி வழங்கல் உதவிகள், காயப்பட்டவர்களை மருத்துவமனைக்கு பின்னகர்த்துதல் போன்றவற்றினையும் நிசாம் அண்ணா திறம்பட மேற்கொண்டார்.*

*தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு உறுப்பாகத் திகழ்ந்த மகளிர் படையணியின் வளர்ச்சிப் பாதையில் பல ஆண் போராளிகளின் பங்களிப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அந்த வகையில் நிசாம் அண்ணாவின் பங்களிப்பும் மிகச் சிறப்புமிக்கது. மகளிர் படையணியின் ஆரம்ப காலப்பகுதியில் சில ஆண் போராளிகள் பெண் போராளிகளை ஏற்றுக் கொள்ளாது விட்டாலும் தலைவரின் சிந்தனைக்கு வடிவமைத்துக் கொடுத்து மகளிர் படையணியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களில் ஒருவராக நிசாம்*

அண்ணா காணப்பட்டார். அந்தக் காலப்பகுதியில் மகளிர் படையணிக்கு தேவையான வழங்கல் (அடிப்படைத்தேவைப் பொருட்கள்) பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களுக்கான வெளிநிருவாகப் பணிகளை செய்வது என அனைத்து உதவிகளும் செய்துவந்தார்.

மேலும் அந்தக் காலப் பகுதியில் எமது போராட்டத்தின் நிதித் தேவை கருதி எமது அமைப்பு எமது மக்களிடம் நன்கொடையாக ஒரு பவுண் தங்கத்தை பெற்றபோது அதனை சேகரிக்கும் பணியையும் மற்றும் அதன் போது தங்கத்தை தரம் பார்க்கும் பணியையும் கற்று அப்பணியையும் திறம்பட மேற்கொண்டார்.

பின்பு 1987 இல் இந்திய இராணுவம் ஈழத்தில் நிலை கொண்டிருந்த காலத்தில் எமது போராளிகள் காட்டில் மறைவு வாழ்க்கை வாழ்ந்தனர். அக் காலப்பகுதியில் கிராம, நகரப்பகுதிகளில் அரசியல்பணி செய்வது என்பது மிகவும் உயிராபத்தானது. ஒவ்வொரு சந்தியிலும் இந்திய இராணுவத்தினன் நிற்பான், இரண்டகர்களின் காட்டிக் கொடுப்பார்கள். இவற்றிற்கு நடுவில் காட்டிலுள்ள போராளிகளுக்கு மக்களிடமிருந்து உணவு சேகரித்துக் கொடுத்தல், சண்டையணிக்கு இராணுவத்தினரின் நகர்வுகள் பற்றிய தகவல்களை அறிந்து சொல்லுதல், மக்களுக்கு உணர்வூட்டும் வகையில் துண்டறிக்கைகளை வழங்கள் போன்ற மகத்தான பணிகளை நிசாம் அண்ணா தன்னுயிரை துச்சமென நினைத்து மேற்கொண்டார். மேலும் இந்திய வல்லாதிக்க படைகளுக்கு எதிராக ஆங்காங்கே நடைபெற்ற கரந்தடி போர் முறையிலான போர்களிலே இந்திய இராணுவத்தை நேரடியாக எதிர்கொண்டு பல முறியடிப்புகளைச் செய்தும், நகர்ந்து கொண்டும் பல போர்க்களங்களில் தீரமாகவும் சிறப்பாகவும் செயற்பட்டார்.

1987 ஐப்பசி மாதம் 10 ஆம் தேதி எமது போராளிகளைத் தேடி அழிக்கும் முயற்சியில் இந்திய இராணுவம் யாழ். நாவற்குழிப் படைத்தளத்திலிருந்து முன்னேறி வந்து கொண்டிருந்தது. எமது ஆண், பெண் போராளிகள் யாழ்.கோப்பாய் பகுதியில் வைத்து இந்திய இராணுவத்தினரை இடைமறித்து பெரும் போர்புரிந்து கிந்திய வல்லாதிக்கப் படையினருக்கு பாடம் புகட்டினர். இப்போரில் நிசாம் அண்ணாவும் மேஜர் முரளி அண்ணா தலைமையில் அவருடன் இணைந்து கிந்திய வல்லாதிக்கப் படையினருக்கு எதிராக திறமையாக போரிட்டார். இப்போரில் ஈழத்தின் முதல் பெண் மாவீர முத்தான 2ம் லெப்.மாலதி உட்பட பல மாவீரர்கள் உயிரீகம் செய்தனர்.

பின்பு 1987ஆம் ஆண்டு மக்களிற்குத் துண்டறிக்கை வழங்க நிசாம் அண்ணா அவரது உதவியாளருடன் சென்ற போது இந்திய இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை இந்திய இராணுவத்தின் சிறைச்சாலையில் 1990 ஆம் ஆண்டு மாசி மாதம் வரை மூன்று ஆண்டுகள் போர்க் கைதியாக தடுப்புக் காவலில் தனது வாழ்நாளைக் கழித்தார். அப்போது அவருடன் போர்க் கைதியாக நிதித்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழேந்தி அப்பாவும் ஒன்றாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். பின்பு நிசாம் அண்ணா இந்திய இராணுவம் ஈழத்திலிருந்து வெளியேறியபோது விடுதலை செய்யப்பட்டார்.

எமது தேசியத் தலைவர் எமது விடுதலை இயக்கத்தை உருவாக்கி, எமது மக்கள் பல நன்மைகளும் பயனும் பெறக்கூடியதுமான பல உட்கட்டமைப்புகளை உருவாக்கினார். அந்தவகையில் எமது போராட்டத்துக்கான நிதியினையீட்டிக் கொடுக்கவும் எமது மக்களை பட்டினிச்சாவிலிருந்து பாதுகாக்கவும் எதிர்கால தமிழீழத் திருநாட்டுக்கு ஏற்றவகையில் நாட்டை முன்னேற்றுவதற்குரிய பொருண்மிய முன்னேற்றத்திற்கான திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துவதற்காகவும் எமது தேசியத் தலைவனால் பெருங்கனவுடன் 1990 ஆம் ஆண்டு தமிழீழ நிதித்துறை என்ற பிரிவு தனியாக உருவாக்கப்பட்டது. எமது போராட்டத்தின் வளர்ச்சிக்கு நிதித்துறையின் திட்டமிடல் செயற்பாடுகளே மிகப் பெரிய பலமாக இருந்தது.

இதற்குப் பொறுப்பாளராக பிரிகேடியர் தமிழேந்தி அப்பா நியமிக்கப்பட்டார். இந்திய இராணுவத்தின் சிறைச்சாலையில் போர்க் கைதியாக தடுப்புக் காவலில் இருந்த காலத்தில் நிசாம் அண்ணாவின் திறமைகள் மற்றும் ஆளுமையான செயற்பாடுகளை கண்டறிந்திருந்தபடியால் தமிழேந்தி அப்பாவால் அவர் 1990 இல் நிதித்துறைப் போராளியாக உள்வாங்கப்பட்டார். அங்கு தமிழேந்தி அப்பாவின் மிகவும் நம்பிக்கைக்குரியவராகவும், செல்லப்பிள்ளையாகவும் அவரது அன்பான திட்டுக்கள் அன்பான அடிகள் வாங்கி அவரது எந்த

வேலையென்றாலும் எதற்கெடுத்தாலும் "டேய் நிசாம்" என்று உரிமையுடன் அழைக்கப்படும் தமிழேந்தி அப்பாவின் ஒரு பிள்ளையாகவும் நிசாம் அண்ணா விளங்கினார். பின்னர் தமிழேந்தி அப்பா தமிழ் மேல் கொண்டிருந்த மொழிப்பற்றின் காரணத்தினால் நிசாம் அண்ணாவின் பெயரானது "சேரன்" என்று மாற்றப்பட்டது.

பின்பு தமிழீழ நிதித்துறையில் உறுப்பினர்கள் அதிகமாகிக் கொண்டு போனபோது நிசாம் அண்ணா நிதித்துறை ஆளுகைப் பொறுப்பாளராக தமிழேந்தி அப்பாவினால் நியமிக்கப்பட்டார். பின்னர் **1990** ஆம் ஆண்டு திரும்பவும் எமது மக்களிடம் தமிழீழ மண்மீட்பு நிதி மீளச் செலுத்தும் கடனாக பெறப்பட்டபோது அதிலும் தங்கத்தினை தரம் பார்த்தல் மற்றும் அதற்கான இடவசதியை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல் மற்றும் ஏனைய நிருவாக நடவடிக்கைகளையும் திறம்பட மேற்கொண்டார்.

**1992** ஆம் ஆண்டு நிதித்துறையில் மகளிர் இணைக்கப்பட்டபோது அவர்களுக்கான வழங்கல் (அடிப்படைத்தேவைப் பொருட்கள்) பெற்றுக் கொடுத்தல், முகாம் அமைத்துக் கொடுத்தல் என வெளிநிருவாகப் பணிகள் அனைத்தையும் கவனித்தார். அனைத்து பெண் போராளிகளையும் தனது சொந்த சகோதரிகள் போல நினைத்து பெயர் கூட சொல்லிக் கூப்பிடாமல் "தங்கச்சி" என அன்பாக உரிமையுடன் அழைப்பார். இதனால் எல்லா பெண் போராளிகளும் நிசாம் அண்ணாவை ஒரு மூத்த சகோதரன் போல நினைத்து தமது தேவைகளை உரிமையுடன் கேட்டுப் பெற்றுக் கொள்ளுவார்கள்.

பின்பு நிதித்துறையானது ஆயப்பகுதி, வருவாய்ப்பகுதி, வழங்கல்பகுதி, கணக்காய்வுப்பகுதி, வாகனப் பகுதி, தளவமைப்புப்பகுதி, உடமைப்பகுதி, தமிழீழ போக்குவரவுக்கழகம், பெருந்தோட்டப்பகுதி, வேளாண் பண்ணைகள், தையல்பகுதி, ஓட்டுனர் பயிற்சிக் கல்லூரி, நகைத் தொழிலகம், உணவு வழங்கல்பகுதி போன்றனவும் மற்றும் வாணிபங்களான சேரன் வாணிபம், பாண்டியன் வாணிபம், சோழன் வாணிபம், மருதம் வாணிபம், நகை வாணிபம், கால்நடை வாணிபம், இன்னும் பல வாணிபங்கள் மற்றும் வாகன திருத்த நிலையங்கள் பின்பு **1994** இல் தமிழீழ வைப்பகம் என பல பிரிவுகளை உள்ளடக்கி படிப்படியாக விரிவாக்கம் கண்டது.

இவற்றின் விரிவாக்கத்திற்கும் பாரிய வளர்ச்சிக்கும் திட்டமிடல் செயற்பாடுகளுக்கும் நிசாம் அண்ணா பிரிகேடியர் தமிழேந்தி அப்பாவின் வலது கையாக இருந்து உறுதுணையாக செயற்பட்டு அவற்றிற்கான முழுநிருவாகப் பணிகளினை மேற்கொண்டார். அத்துடன், யாழ் உயர் தொழில்நுட்பக் கல்லூரியிலும் கணக்கியல் பகுதிநேரக் கற்கைநெறியினையும் மேற்கொண்டார். மேலும் முகாம்களில் நடத்தப்படும் வர்த்தகம், கணக்கியல் தொடர்பான சிறப்பு வகுப்புக்களிலும் கலந்துகொண்டு தனது அறிவாற்றலை வளர்த்துக் கொண்டார். முகாம்களில் நடாத்தப்படும் சிறப்பு வகுப்புக்கள் போராளிகளின் பணிகள் தடைப்படாமல் இருப்பதற்காக பெரும்பாலும் இரவு நேரங்களில் தான் நடைபெறும். இதன்போது சில சமயங்களில் உறக்கக் கலக்கத்தில் இருக்கும் நிசாம் அண்ணாவையே காண முடியும். பகலில் அதிக பணிச்சுமையின் காரணத்தினாலும் எந்நேரமும் தனது பணியைப் பற்றி அதைச் சரிவரச் செய்ய வேண்டும் என நினைத்துக் கொண்டிருப்பதாலும் அவரது மூளையானது களைப்படைந்து வகுப்புக்கள் நடைபெறும் போது தன்னையறியாமல் தூங்கி விடும் பழக்கம் நிசாம் அண்ணையிடம் காணப்பட்டது.

**1994** வைகாசி மாதத்தில் முதலாவது வைப்பகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது.உலகத்திலேயே காவலாளிகள் இன்றி கண்காணிப்பு கருவிகள் ஏதுமின்றி எந்தக் கொள்ளைகளுமின்றி இயங்கிய ஒரேயொரு வங்கியென்றால் அது தமிழீழ வைப்பகம் தான். இது மக்களுக்கு கடன் நடவடிக்கைகளுக்கான வட்டி வீதத்தை சிறிலங்கா அரசின் வர்த்தக ரீதியிலான வங்கிகளின் விகிதங்களின் சதவீத அளவை விட குறைவான அளவையே மக்களிடம் அறவிட்டது. மற்றும் சிறுவர்களுக்கென அமுதம் தேட்டக் கணக்கு எனும் சேமிப்புக் கணக்கை உருவாக்கி தமிழில் பெயர் சூட்டுவதையும் சேமிப்பையும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ் பெயர் வைக்கப்படும் குழந்தைகளுக்கு தாமே முதல் வைப்புத் தொகையையிட்டு குழந்தைகளுக்கான சேமிப்பு கணக்கை ஆரம்பித்து வைத்தனர். இதிலிருந்து எமது அமைப்பு இதிலிருந்து எமது அமைப்பு தொலைநோக்குடன் போராடியமை புலனாகும்.

இந்த முதலாவது தமிழீழ வைப்பகம் திறக்கப்பட்டபோது அதில் நிசாம் அண்ணாவின் பங்களிப்பானது அளப்பரியதாக இருந்தது. அதற்கான

இட வசதிகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்ததுடன் அதற்கான முழு நிருவாகப் பணிகளினையும் அவரே திறம்பட மேற்கொண்டார். மேலும் 1994 இல் பணியாளர்களுக்கான கணக்காய்வு கற்கைநெறி பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது அதற்கான முழு திட்டமிடல், நிருவாகப் பணிகளையும் நிசாம் அண்ணாவே மேற்கொண்டார்.

பின்னர் அவர் திருமண அகவையை அடைந்ததும், எமது அமைப்பின் அனுமதியுடன் 1997 ஆம் ஆண்டு பெண் போராளி ஒருவரை இணையேற்று 1998 இல் ஒரு பெண் குழந்தைக்கும் பின் 2002 இல் இன்னுமொரு பெண் குழந்தைக்கும் தந்தையானார். அவரது இல்லற வாழ்க்கை போராட்ட வாழ்க்கைக்குத் தடையாக அமையவில்லை இன்னும் உந்துகோலாகவே இருந்தது.

1997 இல் அவரது வணிகம் தொடர்பான அறிவு, அர்ப்பணிப்புடன் பணிபுரியும் பாங்கு என்பன இனங்காணப்பட்டு நிதித்துறையால் நடாத்தப்பட்ட வடிசாலைக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்பு நிசாம் அண்ணாவின் விடாமுயற்சியினாலும் வணிகத் திட்டங்களாலும் வடிசாலையுடன் இணைந்து பல வணிக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது. அதன் பின் சிறிய அளவில் நடத்தப்பட்ட வடிசாலையானது இளந்தென்றல் வாணிபம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு விரிவாக்கம் அடைந்தது. அதனுடன் சில இணை வாணிபங்களான மிகவும் தரம் வாய்ந்த நட்சத்திர விருந்தினர் மாளிகைக்கு ஒப்பான தளபாடங்கள், உணவகம், விருந்தினர் தங்குவிடுதி போன்ற வசதிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய விருந்தினர் மாளிகை, எரிவாயு வாணிபம் என்பன உருவாக்கப்பட்டது. இவ் வாணிபங்களானவை எமது போராட்டத்திற்கான பெருமளவு நிதியினை ஈட்டித் தந்தன. அதற்கான பணியினை நிசாம் அண்ணா தன்னையும் தன் குடும்பத்தையும் கவனிக்காது மேற்கொண்டு, தனது வாணிபத்திற்கென்றே தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். அதற்குச் சான்றாக, நான் நேரில்கண்ட இரண்டு நிகழ்வுகளைக் கூறுகின்றேன்.

மல்லாவியில் வடிசாலை வாணிபம் இயங்கிய போது நிசாம் அண்ணாவின் வீட்டிற்கருகில் தான் எமது முகாம் ஒன்று இருந்தது. அவரின் வீடும் வடிசாலை வாணிபத்திற்கு அருகில் தான் இருந்தது. அதிகாலை 5 மணியளவில் நாம் வீதி வழியாக ஓட்டப் பயிற்சியினை மேற்கொள்ளும் போது தனது வீட்டிலிருந்து ஈருருளியில், வாயில் பற்தூரிகையினை வைத்தபடி ஒரு கையால் ஈருருளியின் கைப்பிடியை பற்றியபடி மறுகையால் பல்லினைத் துலக்கியபடி சாரமும் மேற்சட்டையும்அணிந்து வடிசாலை வாணிபத்தினை நோக்கிச் செல்லும் நிசாம் அண்ணாவைக் காணலாம். பல்லுத் துலக்கும் நேரத்தைக்கூட மிச்சப்படுத்தி அதிகாலையில் தனது வாணிபத்தின் பணியாளர்கள் பணியினை கிரமமாக மேற்கொள்ளுகின்றார்களா என மேற்பார்வை செய்துவிட்டு பின் வீட்டுக்கு திரும்பி வந்து குளித்து ஆயத்தமாகி திரும்பவும் தன் வாணிபம் நோக்கிச்செல்வார்.

பின்பு கிளிநொச்சியில் இளந்தென்றல் வாணிபம் இயங்கிய போது அவரது இல்லமும் வாணிபத்திற்கு அருகே தான் இருந்தது. ஒரு நாள் நாம் அந்த வழியால் செல்லும் போது நிசாம் அண்ணா காலில் செருப்பு அணியாமல் வெறுங்காலுடன், மக்கள் நடமாட்டம் கூடுதலாகவுள்ள பாதையால் சிந்தித்தபடி தனது வாணிபம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அதனைக் கண்டு நாம் அவரை வழி மறித்து “என்ன நிசாம் அண்ணா காலில செருப்பும் இல்லாமல் போறீங்கள்” என்று கேட்டதும் தான் திடுக்கிட்டு நின்று தனது காலைக் கவனித்து “ஐயோ தங்கச்சி வாணிபத்தின் ஒரு சிக்கல் தொடர்பாகச் சிந்தித்துக்கொண்டு வந்ததில மறந்திட்டேன்” எனக் கூறி விட்டு காலில செருப்பு இல்லாததையும் பொருட்படுத்தாது வெறுங் காலுடனே நடந்து தன் வாணிபம் நோக்கிச் சென்றார். அந்தளவுக்கு எந்நேரமும் தனது பணியையே சிந்தித்து தன்னையும் கவனியாது எந்த ஆடம்பரமுமின்றி எளிமையாகச் செயற்படும் ஒரு உன்னதமான போராளி அவர்.

தனது வாணிபம் இலாபமீட்ட வேண்டும் என்ற குறிக்கோளில் எவ்வளவு சிக்கனமாக செலவுகளைக் குறைத்துச் செய்ய முடியுமோ என்று ஆராய்ந்து பார்த்து முடிவெடுத்து தான் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார். அவருக்கு கணக்கியல் தொடர்பான போதிய புலமை இல்லாத போதும் தனது பட்டறிவின் மூலம் (நடைமுறை அனுபவம்) நிதி நடவடிக்கைகளில் ஏற்படும் பிறழ்வுகளைக் கண்டு பிடித்து சீர் செய்யும் ஒரு தனித் திறமை அவரிடம் காணப்பட்டது. மிகவும் இயல்பாக, அமைதியாக, எளிமையாக, பழகுவதற்கு மிகவும் இனிமையானவராகக் காணப்படும் அவர்

பணி என்று வந்து விட்டால் பணியாளர்கள் ஏதாவது தவறிழைத்தால் மிகவும் கடுமையாக கண்டிப்பாக நடந்தது கொள்வார். அதே நேரம் சிறிதுநேரத்தில் அந்தக் கோபத்தை மறந்து அமைதியாகி, அவர்கள்விட்ட தவற்றின் பாரதூரத் தன்மையை விளக்கி அவர்களைத் தனது நண்பர்கள் போல தோளில் தட்டிக் கொடுத்து பழகும் பாங்கும் அவரிடம் காணப்பட்டது. தனது ஒரு சிறு தவற்றின் மூலம் எமது போராட்டத்துக்கு அவப் பெயர் வந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருப்பார்.

மேலும் தனது வாணிபத்தில் பணிபுரியும் பணியாளர்களின் நலனிலும் அவர்களின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருந்தார். பணிபுரியும் ஆண் பணியாளர்களுக்காக துடுப்பாட்ட அணியினையும் (உசஉைமநவ) பெண் பணியாளர்களுக்காக வலைப்பந்து அணியினையும் (நெவ டியடட) உருவாக்கி அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவித்து மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு அவர்களை அனுப்பி பங்குபெறச் செய்து அவர்கள் வெற்றிவாகை சூடி வருவதையிட்டு தானும் மகிழ்வார். மேலும் பணியாளர்களின் தனிப்பட்ட நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவரது வாணிபத்தில் பணிபுரிந்த குடும்பத்தினரின் ஆதரவில்லாமல் மிகுந்த வறிய நிலையில் இருந்த இரண்டு பணியாளர்களுக்கு அவரது தலைமையில் திருமணத்தை நடாத்திக் கொடுத்து அவர்களின் மகிழ்ச்சியிலே தனது மகிழ்ச்சியினைக் காண்பார்.

பின்பு 2003-2005 ஆம் ஆண்டு அமைதிப் பேச்சுவார்த்தைக் காலப்பகுதியில் தமிழீழ மீட்பு நிதிக்கடன் எமது அமைப்பினால் மக்களுக்கு மீளளிக்கப்பட்டது. பல இடப்பெயர்வுகளுக்குள்ளும் போர்ப்பாதிப்புக்களுக்குள்ளும்தமிழீழமீட்பு நிதிக்கடன் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்து (அந்த காலப்பகுதியில் கணினி முறைப்படுத்தல் வசதியற்றிருந்த படியால் பணம், நகை வழங்கிய பற்றுச்சீட்டு வழங்கிய அடிக்கட்டை ஏடுகளும் கைப்பட பதியப்பட்ட பதிவு விபரங்களும் மட்டுமே இருந்தன). பின்பு அவற்றினைக் கணினிமயப்படுத்தப்பட்ட முறையிலான நிருவாகக் கட்டமைப்பினூடாக மீளளித்திருந்தமையானது தமிழீழ நிதித்துறையின் சிறந்த நிருவாக திட்டமிடல் கட்டமைப்பையே காட்டுகின்றது.

அதைவிட 2003 ஆம் ஆண்டு முகமாலைப் பகுதியில் தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு பணி இடம்பெற்றுக் கொண்டிருந்த போது ஒரு பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவன (ஐபேமு) அதிகாரி ஒருவர் அதனைப் பார்த்து வியந்து “நான் இப்படி போராட்ட அமைப்புகளுள்ள நிறைய நாடுகளுக்கு சென்று வந்துள்ளேன் ஆனால் தனது சொந்த மக்களிடமே போராட்டத்துக்கு கடன் வாங்கி அதனை நேர்மையாக திருப்பிக் கொடுத்த ஒரேயொரு அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தான் பார்க்கிறேன்” என்று பாராட்டினார். மேலும் எத்தனையோ மக்கள் பற்றுச் சீட்டினை தொலைத்தவர்கள், பெற்றோர் இறந்துவிட்ட பின்னுரித்தாளர்கள் என பல சிக்கல்களுடன் வந்தார்கள். அவற்றை பெருஞ் சிரமங்களுக்கு நடுவிலும் பதிவுகளை வைத்து சீராக ஆராய்ந்து கண்டு பிடித்து உரியவர்களுக்கு நிதி மீளளிக்கப்பட்டது. இதுவும் தமிழீழ நிதித்துறையின் சிறந்த நிருவாக கட்டமைப்பையே காட்டி நிற்கின்றது.

இப்பணியின்முதன்மைகருதிபெரும்பாலும்நிதித்துறைப் போராளிகளே இதில் ஈடுபடுத்தப்பட்டார்கள். இதிலும் நிசாம் அண்ணாவின் பங்களிப்பு அளப்பரியது. தனது வாணிபங்களின் பணிச்சுமைக்கு நடுவில் இப்பணியிலும் ஈடுபட்டு தங்கம் தரம் பார்த்தல் மற்றைய நிருவாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல் என எல்லாவற்றிலும் தனது பங்களிப்பை திறம்பட நிசாம் அண்ணா மேற்கொண்டார்.

மேலும், அந்தக் காலப்பகுதிகளில் எமது போராட்டத்துக்கான வணிக நிதி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளில் கப்பல் மூலம் வணிக நடவடிக்கைகள், மற்றும்வேறும்பலவணிகநடவடிக்கைகளுக்காகவெளிப் பணியாளர்களும் ஈடுபடுத்தப்படுவதுண்டு. அவர்கள் சிலநேரங்களில் இரண்டகர்களின் காட்டிக் கொடுப்புகள் மற்றும் பல காரணங்களினால் அந்தந்த நாட்டு அரசாங்கங்களினால் பிடிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் தடுப்புக் காவல்களில் வைக்கப்படுவதுண்டு. அதனால் அவர்கள் விடுதலையாகி வரும் வரை அவர்களின் குடும்பத்தினருக்கான நிதி உதவிக் கொடுப்பனவுகள் தமிழீழ நிதித்துறையினாலேயே வழங்கப்பட்டன. அப்பணியையும் நிசாம் அண்ணாவே திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி செவ்வனே மேற்கொண்டார்.

பின்பு அமைதிக்காலம் முடிந்து போர் மேகங்கள் மூண்ட


போது அவரது வாணிபங்கள் கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து விசுவமடு, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. மிகுந்த சிரமங்களுக்கு நடுவில் தனது வாணிபங்களையும் பணியாளர்களையும் இடம் நகர்த்தி ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்தி சீரமைத்து தனது பணியினை மேற்கொண்டார்.

முள்ளிவாய்க்கால், நந்திக்கடல் இறுதி வரை எமது நிதித்துறையின் செயற்பாடானது மக்களுக்கு பாரிய பங்களிப்பை வழங்கியிருந்தது. அதில் முதன்மைப் பங்காற்றியவர்களில் நிசாம் அண்ணாவும் ஒருவர். நிதித்துறையால் ஊர்திகளில் பொருத்தப்பட்ட நடமாடும் அரிசி ஆலை மூலம் நெல்லிலிருந்து அரிசி குத்தியெடுத்து கஞ்சி காய்ச்சி இறுதி வரை மக்களிற்கு வழங்கப்பட்டது. மேலும் ஊர்திகளில் பொருத்தப்பட்ட நடமாடும் வெதுப்பகங்கள் மூலம் காயப்பட்ட மக்கள், போராளிகளுக்கு வெதுப்பியும் காயப்பட்ட குழந்தைகளுக்கு வெதுப்பியில் மாஜரீன்,சீனி சேர்த்து ஒரு ஊட்டச் சத்து உணவு போலவும் வழங்கப்பட்டது. இவற்றில் நிசாம் அண்ணாவின் பங்களிப்பு போற்றுதற்குரியதாக இருந்தது. முள்ளிவாய்க்கால் இறுதிக் காலப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் அட்டூழியங்காளால் மக்கள் படும் துன்பத்தினைப் பார்த்து அவர் மிகவும் மனமுடைந்து காணப்பட்டார்.

இராணுவத்தினரின் அத்தனை கொத்துக் குண்டு வீச்சுக்கள், எறிகணை மழைகள், வான்குண்டுவீச்சுக்களுக்கு மத்தியிலும் தனக்கு ஏற்படப் போகும் உயிராபத்தை பற்றி சிந்திக்காது தனது மக்களுக்குப் பணிசெய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒரு உன்னதமான போராளியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். மேலும் தன் வாணிபப் பணியாளர்களை ஒழுங்கமைத்துக் கொண்டு போர் முன்னரங்கப் பகுதிகளுக்கு பதுங்கு குழி அமைத்தல், உணவு வழங்கல் போன்ற பணிகளையும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டார்.

இறுதியில் **13.05.2009** அன்று, அவரது கையில் வாணிபத்தின் பணமானது மிகவும் சொற்பமான தொகை மட்டுமே காணப்பட்டதால் கடைசியாக நின்று பதுங்கு குழி அமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்க அது காணாத படியால் முள்ளிவாய்க்கால் பகுதியில் அவரது வாணிபத்திற்கு சொந்தமான ஒரு பாரவூர்தியில் இருந்த உணவுப் பொருட்களை விற்று அதன் மூலம் வரும் பணத்தின் மூலம் பணியாளர்களுக்கான ஊதியத்தினை வழங்கலாம் என்ற எண்ணத்தில் கையில் இருந்த சொற்பமான தொகைப் பணத்தினையும் தனது மனைவியிடம் கொடுத்து தான் திரும்பி வராவிட்டால் அப்பணத்தினை பணியாளர்களுக்கு பிரித்துக் கொடுக்குமாறு கூறிவிட்டு தனது மனைவி பிள்ளைகளின் நலனைக் கூட கருத்தில் கொள்ளாது இறுதி நேரத்தில் கூட தனது பணியாளர்களின் நலன் கருதி தனது பாதுகாப்பினையும் பொருட்படுத்தாது கடும் எறிகணை வீச்சுக்குள் பாரவூர்தியை நோக்கிச் சென்ற நிசாம் அண்ணா பாரவூர்திக்கருகில் சென்றடைந்ததும் அருகில் விழுந்து வெடித்த எதிரியின் எறிகணை ஒன்றினால் தன்னுயிரினை ஈந்து ஆயிரமாயிரம் மானமாவீரர்கள் வரிசையில் இணைந்து கொண்டு மாவீரர் நிசாம்ஃசேரன் ஆக முள்ளிவாய்க்கால் மண்ணில் தனது இறுதி மூச்சைக் கலந்து ஈழ மண்ணை முத்தமிட்டுக் கொண்டார்.

-நிலாதமிழ்-



# கப்டன் கரிகாலன்



எமது தமிழீழ போரியல் வரலாற்றில் எத்தனையோ வீரமறவர்களையும் கல்விமான்களையும் பிரசவித்த யாழ்ப்பாணத்தின் புன்னாலைக்கட்டுவன் எனும் ஊரில் திரு.திருமதி திருநாவுக்கரசு இணையரின் கடைக் குட்டியாக 14.04.1987 அன்று ஞானகணேசன் எனும் கரிகாலன் வந்துதித்தான். மூன்று சகோதரிகள், ஒரு சகோதரன் என்று எல்லோருக்கும் கடைக்குட்டியாய் வீட்டில் மிகுந்த செல்லத்துடன் வளர்ந்து வந்தான். அவனது தந்தையார் மருத்துவராகக் கடமைபுரிந்தார். அத்துடன் ஒரு தமிழ் ஆர்வலராகவும் செயற்பட்டு வந்தார். தாயார் ஒரு ஆசிரியையாக இருந்தபோதிலும் பிள்ளைகளை சிறந்த கல்விமான்களாகவும் பண்பாளர்களாகவும் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கில் தனது ஆசிரியப் பணியைத் துறந்து பிள்ளைகளை வளர்த்து வந்தார். பெற்றோரது சிறந்த ஊக்குவிப்பு, அர்ப்பணிப்பு போன்றன வீண்போகவில்லை. அவர்களது ஒரு மகனும் இரு மகள்களும் மருத்துவர்களாகவும் மற்றைய ஒரு மகள் வங்கியிலும் பணியாற்றுகிறார்கள். அந்த வகையில் கடைக்குட்டியான ஞானகணேசனும் ஆரம்பம் முதல் தனது கல்வியை யாழில் புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றான யாழ்.பரியோவான் கல்லூரியில் (St.Johns College) கல்வி பயின்று வந்தான்.

அவன் சிறு அகவை முதல் படிப்புடன் விளையாட்டு, பேச்சுப்போட்டிகள், கவிதைப் போட்டிகள், பட்டிமன்றம் போன்றவற்றிலும் சிறந்து விளங்கினான். பூப்பந்து (badminton), கூடைப்பந்து (basket ball), கைப்பந்து (volley ball) போன்ற விளையாட்டுக்களில் யாழ் மாவட்டத்தில் அனைத்துப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் தனது பாடசாலை சார்பாக விளையாடி சிறப்பாகச் செயற்பட்டு சிறப்பு விருது பெற்று (colors) அவனது பாடசாலைக்கு பெருமை சேர்த்தான். மேலும், பாடசாலை மாணவர் தலைவனாகவும் (prefect) சிறப்பாகச் செயற்பட்டான். மேலும், சாரணர் இயக்கத்திலும் (scout) இணைந்து சிறந்த சாரணனாகவும் செயற்பட்டான். அவன் படிப்பிலும் குறை வைக்கவில்லை. ஆண்டு 5 புலமைப்பரிசில் தேர்விலும் அதி திறமைச் சித்தி பெற்று சித்தியடைந்தான். மற்றும் க.பொ.த சாதாரண தரத்திலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். சட்டத்துறை சார்ந்து உயர் படிப்பு படிப்பதே அவனது கல்வி இலட்சியமாக இருந்தது.

தமிழீழத்திற்காக விடுதலைப்புலிகள் அமைப்பின் போராட்டத்தின் உண்மைத் தன்மை, அவர்களது அர்ப்பணிப்பு, தியாகம், ஒழுக்கமான வாழ்க்கை முறை என்பன ஞானகணேசனுக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது. அதனால் அதன்பால் ஈர்க்கப்பட்டு அவனும் 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் எமது அமைப்பில் அரசியல்துறையினருடன் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு வன்னிப் பெருநிலப் பரப்புக்கு வந்து அடிப்படைப் பயிற்சியை முடித்துக் கொண்டு கரிகாலன் எனும் பெயருடன் வரிப்புலியாகி அரசியல்துறைக்குச் செல்லப் பணிக்கப்பட்டான்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு கல்வி, அறிவாற்றல் என்பன மிக முதன்மையானது. அந்த வகையில், எமது தேசியத் தலைவரும் எமது போராளிகள் கல்வி, அறிவாற்றல் என்பனவற்றில் சிறந்து விளங்க வேண்டும் என்ற ஒப்புரவு கொண்டவர். அவ்வாறே கரிகாலனும் 2005-2007 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழி கற்பதற்கும் கணனிக் கற்கை நெறி கற்பதற்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் அண்ணா அவர்களால் பணிக்கப்பட்டான். அங்கே அவன் ஆயுத தளபாடங்கள் சம்பந்தமான பொறிமுறை பற்றிய நூல்களை ஆங்கிலத்தில் இருந்து தமிழ்மொழிக்கும் தமிழ் மொழியில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்தல் சம்பந்தமான கற்கை நெறிகளைப் பயின்றான். இயல்பாகவே மனம், புலன்களை கட்டுப்படுத்தி

எளிதில் புரிந்துகொள்ளும் கற்பூர புத்தி கொண்டவன் கரிகாலன். அவனுக்கு அந்த கற்கைநெறி இலகுவாகவே இருந்தது. மிகவும் ஈடுபாட்டுடன் அந்தக் கற்கைகளில் அவன் ஈடுபட்டு வந்தான்.அவனுக்கு கல்வி கற்பதிலும் பார்க்க போர்க் களங்களுக்கு செல்வதிலேயே மிகவும் ஆர்வம் இருந்தது. ஆனால் தனக்கிடப்பட்ட பணியை செவ்வனே மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் தனது கல்வி கற்கைநெறியை முழு ஈடுபாட்டுடன் மேற்கொண்டான். மேலும் அவன் கரும்புலிகள் அணியில் தன்னை இணைத்துக் கொள்ளுமாறு தேசியத் தலைவர் அவர்களுக்கு கடிதம் எழுதி அனுப்பியிருந்தான். ஆனால் அவனது தேவை முதன்மையான வேறு பணிக்கு எமது அமைப்புக்குத் தேவைப்பட்டதால், அவனது பொறுப்பாளர் அவனை கரும்புலிகள் அணிக்குள் உள்வாங்கப்படுவதற்கு அனுமதிக்கவில்லை. இது அவனுக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது.அவன் எமது போராட்டத்தில் இணைந்து மிகக் குறுகிய காலமென்றாலும் மிகுந்த நம்பிக்கைக்குரியவனாகவும் உறுதியானவனாகவும் ஓர் சிறந்த போராளிக்குரிய ஓர்மம் உடையவனாகவும் அவனது பொறுப்பாளரினால் இனங்காணப்பட்டான்.

அவனது முகாமில் புதிதாக இணைந்த போராளிகளுக்கு எமது போராட்டத்தின் உண்மைநிலையை எடுத்துரைத்து நல்வழிகாட்டுவதற்கு அவர்களது பொறுப்பாளர் கரிகாலனைத் தான் பரிந்துரைசெய்வார். அந்தளவுக்கு எமது போராட்டத்தின் உண்மைத்தன்மையை விளக்கி அவர்களது மனவுறுதியை நிலைநாட்டும் அளவுக்கு பேச்சுத் திறமையும் சக போராளிகளை அரவணைத்துப் போகும் பாங்கும் அவனுக்கு இருந்தது.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் அண்ணா கரிகாலனின் பொறுப்பாளரிடம் அவரின் கீழ் உள்ள போராளிகளில் ஒருவரை தனது தனிப்பட்ட காரியதரிசியாகத் (personal secretary) தரச் சொல்லிக் கேட்ட போது அவர் கரிகாலனைத் தான் பரிந்துரை செய்யும் அளவுக்கு அவனுக்குத் திறமையும் ஆளுமையும் தனது பணியில் முழுமையான ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்டவனாக விளங்கினான். (இது கரிகாலன் தொடர்பாக அவனது பொறுப்பாளருடன் நான் உரையாடிய போது கூறப்பட்டது).

2008ஆம் ஆண்டு தை மாதத்தில் போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகப் போகுவதாக சிறிலங்கா அரசு வெளிப்படையாக அறிவித்து எம்மண்ணில் எமக்கு எதிரான தாக்குதலை வான், கடல், தரை என மும்முனைகளிலும் தீவிரப்படுத்தியது. இதனால் வெளி நிருவாகப் பணியிலிருந்த பெருமளவான போராளிகள் களமுனைக்கு அனுப்பப்பட்டனர். அந்த வகையில் கரிகாலனும்சண்டைக்களங்களுக்குஅனுப்பப்பட்டான். ஏற்கனவே சண்டைக் களங்களுக்குச் செல்ல ஏங்கிக் கொண்டிருந்த கரிகாலனுக்கு இந்தச் செய்தி கரும்பாக இனித்தது. 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வீரச்சாவடையும் வரை போர்க்களங்களிலேயே சூறாவளியாக எதிரிகளைக் கலங்கடித்தான்.

2008ஆம் ஆண்டு பங்குனி மாதம் மணலாற்றில் போர் முன்னரங்கப் பகுதியில் களப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது காலில் விழுப்புண்ணடைந்து மருத்துவச் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டான். பின்பு சிகிச்சையிலிருந்து மீண்டெழுந்து 2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை படையறிவியற் கல்லூரியில் பயின்று பின்பு ராதா படையணியுடன் இணைந்து சிறப்புப் பயிற்சி பெற்று சண்டைக் களங்களுக்குச் சென்றான்.

2008ஆம் ஆண்டு ஆனி மாதம் கரிகாலன் படையறிவியற் கல்லூரியில் தனது சிறப்புப் பயிற்சியை முடித்துக் கொண்டு இரணைமடுப் பகுதியில் போர் முன்னரங்கப் பகுதியில் களப்பணியாற்றிக் கொண்டிருந்த போது அவன் மிகவும் திறமையாகச் செயற்பட்ட நிகழ்வு பற்றி அவனது பொறுப்பாளரினால் எனக்குச் சொல்லப்பட்டது.

இரணைமடுப் பகுதியில் எமது வானூர்தி ஓடு பாதைப் பகுதியில் இவன் உட்பட ஆறு பேர் கொண்ட அணி ஒன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போது அங்கே வந்த சிறிலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியொன்று இவனது அணியைச் சுற்றி வளைத்துக் கொண்டது. அதன் போது ஏற்பட்ட நேரடி மோதலில் அவனது அணித் தலைவர் விழுப்புண்ணடைந்ததும் அணித் தலைவரின் தொலைத் தொடர்புக் கருவியைப் பயன்படுத்தி அவன் அணியைத் தலைமையேற்று திறம்பட வழிநடத்தி, மிகவும் ஓர்மத்துடன் போரிட்டு சிறிலங்கா இராணுவத்தினருக்கு கண்ணாமூச்சியாட்டம்

காட்டி அவர்களுக்கு பேரிழப்பை உண்டாக்கி, தனது அணியைப் பாதுகாப்பாகப் பின் நகர்த்தினான். அன்று அவன் உட்பட ஆறு போராளிகளும் கரிகாலனின் தலைமையேற்று போரிடும் திறனாலும் உடனடியாகச் சிந்தித்து எதிர்வினையாற்றும் அவனது ஆற்றலாலும் காப்பாற்றப்பட்டனர்.பின்பு விசுவமடு ரெட்பானா பகுதி, புதுக்குடியிருப்புப் பகுதி, இரணைப்பாலை, மாத்தளன் போன்ற எல்லா போர்முன்னரங்கப் பகுதிகளிலும் சிறப்பாகச் செயற்பட்டான். இவ்வாறு இறுதிப்போரில் இவன் செல்லாத சண்டைக் களங்கள் இல்லை. எல்லாச் சண்டைக் களங்களிலும் திறமையாகச் செயற்பட்டு எதிரிகளைக் கலங்கடித்தான்.எல்லாப் போராளிகளையும் போன்றே கரிகாலனும் வெளிப் பார்வைக்கு கடினமானவனாகத் தெரிந்தாலும் அவனது மனம் பூவிலும் மென்மையானது. இதற்கு எடுத்துக்காட்டாக அவனுடன் உடனின்ற ஒரு போராளி கூறிய ஒரு நிகழ்வைக் குறிப்பிடுகின்றேன்.

முள்ளிவாய்க்கால் இறுதி நாட்களில் பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவிய காலத்தில் குருதிக்கொடை செய்தால் குருதிக்கொடை செய்த நபருக்கு போதிய ஊட்டச்சத்து தேவை என்ற படியால் பால்மாபொதிகொடுப்பதுஎனும்நடைமுறைநிலவியது. அவன் தனது முகாமுக்கு அருகில் இருந்த குடும்பத்துச் சிறு குழந்தையொன்று பால்மா இன்றி அழுவது கண்டு மனம் வருந்தி தான் குருதிக்கொடை செய்து அதனால் கிடைத்த பால்மா பொதியை அச் சிறு குழந்தைக்குக் கொடுத்தான்.சிறு குழந்தைகளைக் கண்டால் தானும் ஒரு சிறு குழந்தையாகவே மாறிவிடுவான்.

இரண்டு தடவைகள் அவனது பெற்றோர் வந்து சந்தித்த போது எனது வீட்டில் தான் விடுமுறையில் வந்து தங்கியிருந்தான். நானும் ஒரு போராளியாக இருந்தும் என்னை விட மிகவும் அகவையில் இளையவனான அவனின் உறுதியையும் நெஞ்சுரத்தையும் கண்டு நான் மிகவும் வியந்திருக்கின்றேன். இயக்கத்தில் இணைந்து சிறிது காலமேயென்றாலும் எமது போராட்டத்தின் உண்மைத்தன்மையை அக்கு வேறு ஆணிவேறாக அவன் அலசி ஆராய்ந்து புரிந்து வைத்திருந்தான். எமது தேசியத் தலைவரில் மிகுந்த நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருந்தான். விடுமுறையில் வீட்டில் வந்து தங்கியிருந்த போதும் நேரத்தை வீணடிக்காமல் அங்கிருந்தும் எமது போராட்டம் தொடர்பான நூல்களை வாசித்துக் கொண்டேயிருப்பான். அவன் ஒரு போராளியாகிய தனது கடமையில் மட்டுமன்றி ஒரு உறவினனாக உடன் பிறவாச் சகோதரனாக தனது குடும்பக் கடமையிலிருந்தும் சிறிதும் வழுவவில்லை.

இறுதிப்போரில் எனது கணவர் வீரச்சாவடைந்திருந்தவேளை அதனைக் கேள்விப்பட்டு அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தனது பொறுப்பாளரிடம் அனுமதிகேட்டு வந்து நான் இரு சிறு குழந்தைகளுடன் பரிதவித்து நின்றவேளை ஒரு உடன் பிறவாத சகோதரனாக வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்து எங்களைப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி விட்டுத்தான் சென்றான். இறுதிப்போர் நேரத்தில் பெரும்பாலான போராளிகளை அவர்களது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் விரும்பினால் பெற்றோர், உறவினருடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லுமாறு கூறப்பட்டது. நானும் கரிகாலனிடம் “அம்மா, அப்பா கவலைப்படுவினம் எங்களுடன் வாங்கோ” எனக் கேட்ட போது அவன் “என்ர முடிவில மாற்றம் இல்லை அக்கா நான் இறுதி வரை நின்று போராடப் போகிறேன்” என்றும் “நீங்கள் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் எப்படியாவது சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுக்கை போயிடுங்கோ அக்கா” என்றான். இறுதிவரை அவன் தன் கொள்கையிலும் திடமான முடிவிலும் உறுதியாக இருந்தான்.

இறுதியில் **14.05.2009** சுனாமிக் குடியிருப்புப் பகுதி முள்ளிவாய்க்காலில் போர் முன்னரங்கப் பகுதியில் குறி பார்த்துச் சுடும் அணியில் (சினைப்பர் அணி) களப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் தன் கொள்கையில் இருந்து வழுவாது இறுதி வரை களமாடி தன்னுயிரீந்து ஈழ மண்ணை முத்தமிட்டான் எங்கள் கரிகாலன்.அவனது பொறுப்பாளருடன் நான் அவன் தொடர்பாக உரையாடிய போது அவர் அவன் நினைவாக கவலையுடன் கூறியது “இயக்கம் அவன் திறமைகளை முழுமையாகப் பெற முதல் அவன் வீரச்சாவடைந்து விட்டான்” என்பது தான்.

*“ஓ… வீரனே எங்கள் மண்ணில் உன் பெயர் எழுதி வைக்கப்படும்… நீ மடியவில்லையடா…. உன் கதை முடியவில்லையடா…. காலமெல்லாம் புலிக் குகையில் நீ தங்கினாய் கண் மூடி இன்று படமாய் தொங்கினாய்….”*

- நிலாதமிழ்-

# மாவீரர் பூம்பாவை



வைகாசி மாதம் வருகின்றதென்றால் அது ஓர் இருள்சூழ்ந்த மாதமாகவும், மனதில் கவலைகள் பெருகி குரல்வளையை நெரிக்கின்ற ஓர் உணர்வையும் தரும். இம் மாதத்திலே எங்களோடு இருந்த எத்தனையோ நூற்றுக்கு மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளோம். அவர்கள் இறுதிவரை நின்று களமாடியும், அவர்களது இவ்வுலக இருப்புப்பற்றி உறுதிப்படுத்த முடியாத காரணத்தினால் நாங்கள் இன்னும் எத்தனையோ மாவீரர்களுக்கு வீரவணக்கத்தை செலுத்த முடியாத நிலையில், ஓர் ஆண்டின் பின்போ அல்லது மூன்று, ஐந்து ஆண்டுகளின் பின்போ அவர்களைப் பற்றி கேள்விப்பட்டு ஒன்றும் செய்ய முடியாத கையறு நிலையில் ஊமைகளாக உள்ளோம். அந்த வகையில் எங்களோடு நிதித்துறை கணக்காய்வுப் பகுதியில் இருந்து இறுதிப்போரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பூம்பாவை அக்காவைப் பற்றி எழுத நான் கடமைப்பட்டுள்ளேன்.

1995ஆம் ஆண்டு மார்கழி மாதம் நானும் இன்னும் நான்கு போராளிகளும் அடிப்படைப் பயிற்சி முடித்து ஒரு இரவு நேரத்தில் நுணாவில் பகுதியில் இருந்த நிதித்துறை மகளிர் கணக்காய்வுப் பகுதி முகாமுக்கு கொண்டு வந்து விடப்பட்டோம். நாங்கள் அங்கு சென்றடைந்த போது இரவு 8 மணி இருக்கும். அங்கே நிறைய அக்காக்கள் பெரிய மண்டபத்தில் (hall) எல்லோரும் ஒவ்வொரு மேசையில் இருந்து பெரிய பெரிய கணக்கேடுகளில் பச்சைநிற எழுதுகோலை வைத்துக்கொண்டு அங்க பார்த்து இங்கயும் இங்க பார்த்து அங்கயும் சரி போட்டுக் கொண்டு இருந்தார்கள். (அப்ப எங்களுக்கு பெரிய பெரிய புத்தகங்கள் காசேடு, பேரேடு என்றும் பச்சைப் பேனையால கணக்காய்வு செய்யினம் என்றும் தெரியாது). அப்போது ஒரு அக்கா வந்து “பிள்ளைகள் இரவு ஆயிட்டுது அந்த அறையில் கொண்டு போய் உங்கட பாக்குகளை (bags) வைச்சிட்டு வந்து முகம், கைகால கழுவிப்போட்டு வந்து சாப்பிட்டிட்டு படுங்கோ”என்றார். எங்களுக்கும் வந்த புதுசு தானே நல்ல பிள்ளைகளாக போய் சாப்பிட்டு விட்டு வந்து பயணம் செய்து வந்த களைப்பில் தூங்கி விட்டோம்.

அடுத்த நாள் காலை 4.30 மணியளவில் ஒரு அக்கா வந்து “பிள்ளைகள் எழும்பி போய் காலைக் கடன்களை முடித்து விட்டு சத்தியப் பிரமாணத்துக்கு வாங்கோ” என்றார். நாங்களும் காலைக் கடன்களை முடித்து விட்டு சத்தியப் பிரமாணம் எடுத்து விட்டு வந்தோம். நாங்கள் வந்த புதிது என்றபடியால் எங்கள் ஐவரையும் அன்று மட்டும் முகாமில் விட்டு விட்டு மிகுதி எல்லோரும் ஓட்டப் பயிற்சிக்கு சென்று விட்டு வந்தார்கள். மக்கள் குடியிருப்புக்குள் எங்கள் முகாம் இருந்தபடியால் விடிவதற்கு முன் ஓட்டப் பயிற்சியை முடித்து விட்டு வர வேண்டும்.

நாங்கள் ஐவரும் குளித்து சீருடை அணிந்து வரவேற்பறையில் வந்து இருந்தோம். ஒவ்வொரு அக்காமாரும் வந்து தங்களை அறிமுகப்படுத்திவிட்டுப் போனார்கள். அப்போது உயர்ந்த மெல்லிய வெள்ளை நிற கம்பீரமான தலையை இரண்டாக பின்னி வளைத்து கட்டிய, வெள்ளை மேற்சட்டையும் கறுப்பு நீளக்காற்சட்டையும் இடுப்பில் கறுப்பு நிற பட்டியும் அணிந்த படி ஒரு உருவம் எங்களிடம் வந்து தனது பெயர் பூம்பாவை என்று அறிமுகம் செய்தது. பெயருக்கு ஏற்ற மாதிரி மிகவும் அழகான கம்பீரமான எவரையும் திரும்பிப்பார்க்க வைக்கிற தோற்றம் பூம்பாவை அக்கா. அறிமுகப்படலத்தின் போது சொந்த ஊரை விசாரித்த போது நானும் அவாவும் ஒரே ஊர். என்னை தனது ஊர்க்காரி என்று தான் அழைப்பார். இப்படித் தான் எனக்கும் பூம்பாவை அக்காவுக்குமான உறவு ஆரம்பித்தது.

பூம்பாவை அக்கா யாழ்ப்பாணத்தின் வலிகாமப் பகுதியிலுள்ள தெல்லிப்பளை எனும் ஊரில் திரு.திருமதி சண்முகலிங்கம் இணையருக்கு மகளாக ஜெயசக்தி எனும் இயற்பெயருடன் 01.11.1971 அன்று பிறந்தார். அவர் சிறு அகவை முதல் படிப்பு, விளையாட்டு இரண்டிலும் முதன்மை நிலை வகித்தார். மேலும்

கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் போன்றவற்றிலும் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். 1990ஃ1991 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் வர்த்தகப் பிரிவில் தோற்றி சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர். பல்கலைக்கழகத்திற்கான அனுமதி கிடைத்தும் தாய் நாட்டின் மீதும் மக்களின் மீதும் தலைவர் மீதும் இருந்த பற்றின் காரணமாக பல்கலைக்கழக கல்வி பயிலும் வாய்ப்பையும் தூக்கி எறிந்துவிட்டு எமது போராட்டத்தில் 1992 இல் இணைந்தார். முதலில் அரசியற்துறையில் இருந்து பின்பு 1993 ஆம் ஆண்டில் நிதித்துறை கணக்காய்வுப்பகுதிக்கு வந்தார். அங்கு தான் அவரின் ஆற்றலும் ஆளுமையும் திறமையும் வெளிப்பட்டது. எமது நிதித்துறைக் கணக்காய்வுப் பகுதியின் மிகப் பெரிய ஆளுமையாக அவர் இருந்தார்.

ஆரம்ப காலத்தில் அவர் சேரன் வாணிபத்தின் எழிலகம், புடவை வாணிபங்களில் கணக்காய்வை மேற்கொண்டார். பின்பு அவரின் திறமை கண்டறியப்பட்டு நீண்டகாலம் கடைசி வரை நகை வாணிப கணக்காய்வு அணிக்கு பொறுப்பாளராகத் திறம்படச் செயற்பட்டார். வன்னியில் குப்பி விளக்கின் உதவியுடன் தரையில் பாய் விரித்து அதில் வாணிபங்களின் ஆவணங்களை எல்லாம் விரித்து வைத்தபடி இரவிரவாக உறக்கமில்லாமல் கணக்காய்வு செய்வார். வேலை என்று வந்துவிட்டால் அவருக்கு உணவு, தண்ணீர், உறக்கம் எல்லாம் மறந்தேபோகும். வேலையை முடிக்க வேண்டும் என்பதை மட்டுமே நினைவிற் கொண்டு செயற்படுவார். (அப்போது வன்னியில் மிகவும் கடினமான போராட்ட சூழல் நிலவிய காரணத்தினால் முகாம்களில் வசதியான முறையில் பணிபுரிய முடிவதில்லை. ஏதோ கிடைத்த வளங்களைக் கொண்டு தான் நிறைவான முறையில் எங்கள் பணிகளை மேற்கொள்வோம்).

அந்தக் காலப்பகுதியில் காணப்பட்ட ஆளணிப் பற்றாக்குறையின் காரணமாக ஒரு போராளி பத்து பணியாளர்கள் புரியும் வேலையை தனி ஒருவராக நின்று பணிபுரியும் அளவிற்கு எமது அமைப்பினால் கற்கைநெறிக்குள் உள்வாங்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு, புடம் போடப்பட்டனர். அந்த வகையில் பூம்பாவை அக்காவும் தனது கணக்காய்வுப் பணியினை கூடுதல் பணிச்சுமைக்கு நடுவிலும் தனது பணியினை திறம்பட அர்ப்பணிப்புடன் மேற்கொண்டார். நிறுவனங்களில் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளும் போது பணியாளர்களுடன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் அதே வேளை தேவையான போது கண்டிப்பாகவும் மிகவும் ஆளுமையுடனும் செயற்படுவார்.

பூம்பாவை அக்கா இருக்கும் இடத்தில் எப்போதும் கலகலப்புக்கு குறைவிருக்காது. எப்போதும் நகைச்சுவையாகவே பேசுவார். முன்னர் அவர் அரசியற்துறையில் இருந்தபோது யாழ்ப்பாணம் பண்ணையில் இருந்து மரக்கறிகளை மாட்டு வண்டியில் ஏற்றிச் சென்று திண்ணைவேலிச் சந்தையில விற்ற கதையை மிகவும் நகைச்சுவையாக அடிக்கடி சொல்லுவார். பின்னரும் அந்த நினைப்பில எங்கட முகாமில் இருந்த மொழி அக்காவின் தலைப் பின்னலை பிடித்து மாட்டுவண்டி ஓட்டி அவாவிடம் முறைப்பையும் திட்டையும் பரிசாக வாங்குவார். ஏதாவது வேலை செய்து களைப்படைந்து விட்டார் என்றால் அவரின் வாயில் இருந்து “அப்பனே முருகா! பழம் பிள்ளையாரே! வைரவக் கிழவா!” என்ற சொல் தான் அடிக்கடி வரும்.

தலைவர் மீதும் போராட்டத்தின் மீதும் அவருக்கு எவ்வளவு பற்று, நம்பிக்கை இருந்ததோ அதற்கு அடுத்த படியாக கடவுள் மீதும் பற்று அதிகம். கந்தசஷ்டி விரதத்தை தன்னால் இயன்றளவு தொடர்ந்து பிடித்து வந்தார். அதே போல மாவீரர் நாள், திலீபன் அண்ணா நினைவு நாள் போன்றவற்றிற்கும் அன்று பகல் முழுவதும் நீர் கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்து இரவு மட்டும் உணவு உண்ணுவார். நாங்கள் சில பேர் மட்டும் பசி தாங்க முடியாமல் “திலீபன் அண்ணைக்கு எங்களுக்குப் பசிக்கும் என்று தெரியும் தானே கோவிக்க மாட்டார். வாங்கோ அக்கா வெளியில போய் களவாக சாப்பிட்டு வருவோம்” என்று கூப்பிட்டால், எல்லாக் குழப்படிகளுக்கும் களவுகளுக்கும் எங்களோட சேர்ந்து வருபவர் இதற்கு மட்டும் வரமாட்டார். பொதுவாக திலீபன் அண்ணா நினைவு இறுதி நாளில் எங்கள் முகாமில் உணவு சமையல் பகுதியிலிருந்து எடுப்பதில்லை. எல்லோரும் விரதமாக இருந்து இரவு உணவை சைவ உணவாக சமைத்து உண்ணுவோம். பூம்பாவை அக்கா விதவிதமாக சுவையாக சமைப்பதிலும் படு விண்ணி.

நாங்கள் கொஞ்ச பேர் 1995ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் கற்க ஆரம்பித்த புதிதில் போராட்டத்தில் இணைந்த காரணத்தினால், எங்களின் பணித்தேவை

காரணமாக (கணக்காய்வுப் பகுதியில் போராளிகளாக இருந்த அனைவரும் பல்கலைக் கழகத்திலோ அல்லது உயர் தொழில்நுட்பக் கல்லூரியிலோ கல்வி கற்றவர்களாக இருந்தார்கள்) க.பொ.த உயர்தரம் படித்து சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற காரணத்தினால் 1997ஆம்ஆண்டுக.பொ.தஉயர்தரத்திற்குதோற்றுவதற்கு எமது அமைப்பினால் பணிக்கப்பட்டோம். அப்போது எங்களுக்கு பாடங்களில் ஏற்படும் தெளிவின்மைகளைத் தீர்ப்பதற்கு பூம்பாவை அக்கா பெரிதும் உதவி செய்வார். கணக்கியலில் அவர் ஒரு புலி. எந்தக் கடினமான கணக்கு என்றாலும் மிகவும் இலகுவான முறையில் எங்களின் மரமண்டைகளுக்குப் புரியவைத்து விடுவார். மற்ற நேரங்களில் மிகவும் இயல்பாக எங்களில் ஒருவராக அகவை வேறுபாடு பாராது பழகும் அவர் படிப்பு, வேலை என்று வந்து விட்டால் மிகவும் கண்டிப்பு நிறைந்த மனிசியாக மாறி விடுவார். அவரிடம் பல மொக்கை கேள்விகள் கேட்டும் குரங்கு சேட்டைகள் புரிந்தும் மண்டையில் குட்டு வாங்கிய பெருமை என்னையே சாரும்.

கல்வி மற்றும் பணி தொடர்பான விடயங்களில் கண்டிப்பாக இருக்கும் அவர், மற்றைய நேரங்களில், நாங்கள் வேலிப் பொட்டுக்குள்ளால புகுந்து போய் கச்சான் விற்கும் ஆச்சியிடம் கச்சானும், குளிர்களி விற்கும் அண்ணையிடம் குளிர்களியும் ஒருவாறு தண்டல் தண்டி வாங்கி வந்து சாப்பிடும் போது "கழுகுக்கு மூக்கில வேர்த்தது போல" சரியான நேரத்துக்கு என்னை விட்டிட்டுச் சாப்பிடுறீங்களோடி ...என்றபடி பங்கு கேட்க வந்துவிடுவார்.

ஒரு போராளி எந்நேரமும் களத்திற்கு செல்வதற்கு அணித்தமாக இருக்கும் வகையில், வெளிநிருவாகப் பணிகளில் மட்டுமல்ல களப்பணிகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதே எம் தேசியத் தலைவனின் அவா. அவ்வாறே வெளிநிருவாகப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் போராளிகள் தேவைப்படும் போது கடும் போர்ப் பயிற்சிகள் வழங்கப்பட்டு களப்பணிகளுக்குள் உள்வாங்கப்படுவதுண்டு. அந்த வகையில் பூம்பாவை அக்காவும் 1997 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் எமது பிரிவிலிருந்து படையறிவியற் கல்லூரியில் அதிகாரிகள் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டார். அங்கு திறம்பட செயற்பட்டு ஒரு போர் அதிகாரிக்குரிய தகுதியோடு முகாம் திரும்பினார்.

வெளிப்பணிகளில் மட்டுமல்ல சண்டைக்களங்களிலும் பூம்பாவை அக்கா திறம்பட செயற்பட்டார். அவரின் பணித் தேவையின் முதன்மை கருதி இயக்கம் சண்டைக்கு விடாத போதும் வலுக்கட்டாயமாக பொறுப்பாளருடன் சண்டை பிடித்து இரண்டு தடவைகள் சண்டைக்களத்திற்குச் சென்றார். 1999ஆம் ஆண்டு நெடுங்கேணிப் பகுதியில் உள்ள போர் முன்னரங்கப் பகுதிக்கு சோதியா படையணியுடன் இணைந்து ஒரு படைப் பிரிவுக்கு (டயவழழப) அணிக்குத் தலைவியாக சென்று ஆறு மாதங்கள் திறம்படச் செயற்பட்டு பின் முகாம் திரும்பினார். பின்பு 2000 ஓயாத அலைகள்-4 இற்கும் ஒரு அணிக்கு தலைவியாகச் சென்று திறம்படச் செயற்பட்டு பின்னர் முதுகில் விழுப்புண்ணடைந்து திரும்பினார்.

அவர் திருமண அகவையை அடைந்ததும், 2001 ஆம் ஆண்டு தலைவரின் கட்டளைக்கு ஏற்ப ஒரு போராளியை இணையேற்றார். திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தாயாகிய பின்பும் குழந்தைகளை தளிரில் விட்டு விட்டு (திருமணமான பெண்போராளிகள் தடையின்றி பணிகளைச் செய்வதற்கு இலகுவாக அவர்களின் குழந்தைகளை பராமரிப்பதற்கு தலைவரால் உருவாக்கப்பட்ட காப்பகம் தான் தளிர்) நகை வாணிப கணக்காய்வு அணிக்கு பொறுப்பாளராக கடைசி வரை திறம்படச் செயற்பட்டார்.

பின்பு 2009 இல் எமது போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியைக் காணப் பொறுக்காமல் சிறிலங்கா அரசும் ஏனைய உலக வல்லாதிக்கங்களும் ஒன்று சேர்ந்து எங்கள் போராட்டத்தை நசுக்குவதற்கு திட்டம் போட்டு காய் நகர்த்தி எம்மையும் எமது மக்களையும் முள்ளிவாய்க்காலிலே ஒரு சிறிய வட்டத்திலே அடைத்தன. அப்போது பூம்பாவை அக்காவின் கணவர் 2009 பங்குனி மாதம் களமாடி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். பின்பு பூம்பாவை அக்கா இரண்டு சிறு குழந்தைகளோடும் வயோதிபத்தாயோடும் மிகவும் சிரமங்களுக்கு நடுவில் பிள்ளைகளுக்காக வாழ்ந்து வந்தார். இறுதியில் வைகாசி மாதத்தில் எதிரியின் எறிகணை வீச்சில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அவரின் இரண்டு பெண்குழந்தைகளும் தாயும் இன்றி தந்தையும் இன்றி வயதான அம்மம்மாவின் அரவணைப்பிலும் பூம்பாவை அக்காவின் சகோதரனின் அரவணைப்பிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இப்படி நாட்டுக்காக தங்களையே அர்பணித்த பல மாவீரர்களின் அறியப்படாத பல பக்கங்கள் உள்ளன. பூம்பாவை அக்காவைப் பற்றி கூற இன்னும் மலையளவு விடயங்கள் உள்ளன.

பூம்பாவை அக்காவே உங்கள் கனவு ஈடேறும் என்றும், எல்லா மானமாவீரர்களின் கனவும் ஈடேறும் என்றும் நினைவிலிருத்திக் கொண்டு உங்களுக்கு எமது வீரவணக்கங்களைச் செலுத்துகின்றோம்

-நிலாதமிழ்-

**‘விருதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ளவேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்’**

**தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்**




என்றும் உங்கள் மீளா நினைவுகளுடன்
நிலா தமிழ்
'எமது மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தேசிய விடுதலை என்கின்ற உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து அந்த இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்தவர்கள். இதனால்தான் இவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டுநிற்கிறார்கள், உயர்ந்துநிற்கிறார்கள். எமது தேசத்தின் வரலாற்றில் சங்கமமாகி நிற்கிறார்கள்'.
- தமிழீழ தேசியத் தலைவர்